KALAIKESARI

# கலைக்கேசரி

CULTURE • HERITAGE • TRADITION • EVENTS • FASHION • INTERVIEWS • ENTERTAINMENT

VOLUME : 02 ISSUE : 04 Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 49 / News / 2011



ஈழத்தில் பௌத்தத்திற்கு முற்பட்ட திராவிட சான்றுகள்

பழைமைக்கு பெருமை சேர்க்கும் சமாதிகள்

www.kalaikesari.com / APRIL 2011

ISSN 2012-6824

| | | | | | |
|---|---|---|---|---|---|
| INDIA................IN₹ | 100.00 | CANADA........CAN$ | 10.00 | USA...........US$ | 10.00 |
| SRI LANKA....SLR | 200.00 | AUSTRALIA...AUS$ | 10.00 | UK.............GB£ | 6.00 |
| SINGAPORE...SG$ | 14.00 | SWISS.............CHF | 10.00 | EUROPE..EU€ | 7.00 |


எழில்
தழுவும்
பட்டணிந்து
எடுப்பான
தோற்றம்
பெறுங்கள்!
இனிமையான நேரங்களில் இணைந்திடும்...
Since 1976
கணேஷ்
டெக்ஸ்டைல்ஸ்
(பிரைவேட்) லிமிட்டட்
81-83, மெயின் வீதி, கொழும்பு-11.
தொலைபேசி - 2325128, 2343078
பெக்ஸ்: 2458937
E-mail: info@ganeshtextiles.com
www.ganeshtextiles.lk
All major credit cards accepted
VISA



உங்கள் ஆன்மீக ஆத்மாவின் நண்பன்
மங்கள ஆரத்தி
இறையன்பார்களே!
மங்கள ஆரத்தி எனும் இவ் இசைக்கருவி இந்து மதத்திற்குரிய மந்திரங்கள், சுலோகங்கள், மற்றும் பக்தி பாடல்கள் உள்ளடக்கிய தொகுப்பாகும். இதில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்தும் ஆரம்பம் முதல் இறுதி வரை தன்னகத்தே முழுமை கொண்டதாகும்.
வருடம் முழுவதற்குமான இந்து சமய பண்டிகைகள், விரத காலங்கள், விழாக்காலங்கள் மற்றும் அன்றாட வழிபாடுகளுக்கான மிக அவசியமானதும் முக்கியமானதுமான அனைத்தும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
அடியார்கள் தமக்கு விரும்பிய கடவுள்களின் தலைப்பிலும், இலகுவாக தமக்கு விரும்பியவற்றை "தொலைகட்டுப்பாட்டு" (Remote Control) கருவி மூலம் தெரிவு செய்து செவிமடுப்பதற்கு இவ் இசைகருவி மிகவும் எளிமையான முறையில் புதிய தொழில்நுட்பத்தை கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.
அனைவரும் ஆன்மீக மழையில் அன்புடன் நனைவோமாக!...
Mangala Harathi
All in One
166 முழுமையான மந்திரங்கள், சுலோகங்கள் மற்றும் பக்திப் பாடல்கள்
• ஓம்
• சுப்ரபாதம்
• மஹிஷாசுர மர்த்தினி
• நவ காயத்ரீ மந்த்ரம்
• ஓம் கணேஷா போற்றி
• பிள்ளையார் கவசம்
• கணேஷ பஞ்ச ரத்னம்
• மங்கள ஆரத்தி
• 108 அம்மன்
• சௌந்தர்ய லஹரி
• ஸ்ரீ பவானி அஷ்டகம்
• சிவன் போற்றி
• ஆதித்ய கவசம்
• சிவ தாண்டவம்
• சிவபுராணம்
• திருப்பள்ளி எழுச்சி
• திருவெம்பாவை
• முருகன் போற்றி
• ஸ்கந்த ஸஷ்டி கவசம்
• ஸ்ரீ ஸ்கந்த குரு கவசம்
• வெங்கடேச கவசம்
• விஷ்ணு சஹஸ்ரநாமம்
• விஷ்ணு அஷ்டோத்ர சதநாமாவளி
• பஜ கோவிந்தம்
• ஷேஷாசல புர வாசா (பாலாஜி)
• ஸ்ரீ சரஸ்வதி அஷ்டோத்ர ஸ்தோத்ரம்
• ஸ்ரீ சரஸ்வதி ஸ்தோத்ரம்
• ஸ்ரீ லக்ஷ்மி சுப்ரபாதம்
• மஹாலக்ஷ்மி அஷ்டகம்
• லலிதா பஞ்சரட்னம்
• ஸ்ரீ லக்ஷ்மி சஹஸ்ரநாமம்
• ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம்
• 108 துர்க்கை போற்றி
• ஸ்ரீ துர்க்கா அஷ்டோத்ர சதனாமம்
• ஸ்ரீ துர்க்கா கவசம்
• நித்யானந்தஹரி
• நவகிரக சுப்ரபாதம்
• நவகிரக கவசம்
• ஆஞ்சநேய சுப்ரபாதம்
• ஹனுமான் சலிஸா
• ஆஞ்சநேய ஜெய்ஹனுமான்
• வாசதேவா வேதவேத்யா
• பகவத் கீதா
• அமர ஜீவிதம்
• கோபியரே
• கோகுலத்து பசுக்கலெல்லாம்
• புல்லாங்குழல்
• நாம ராமாயணம்
• சாய் ஓம் நமோ நாராயணாய
• சரணா கோஷம்
• ஸ்ரீ தானந்தா
• பூத நாத ஸ்தோத்ரம்
• ஐயப்ப சுப்ரபாதம்
• ஐயப்ப கவசம்
• மண்ணுலகெல்லாம்
• கோதண்டம்
• சபரிமலை காட்டுக்குள்ளே
• இருமுடியை தாங்கி
• லோக வீரம்
• ஹரிவராசனம்
இன்னும் பல....
விலை ரூ.3500/- (இலங்கையில்)
இலங்கை மற்றும் வெளிநாடுகளில் விற்பனை முகவர்கள் தேவை
மேலதிக விபரங்களுக்கு
Sonee Tech Systems
Hotline : +94 773 533588
soneetech@ymail.com / soneetech@sltnet.lk
ஏக விநியோகஸ்தர்
Maruthi Traders
226/P4, Andival Street,
Colombo 11, Sri Lanka.
Tel : +94 112 473386

# ஆசிரியர் பக்கம்



## 'கர' வருட வாழ்த்துக்கள்

கலைக்கேசரி வாசகர்களுக்கு, வணக்கம். நலந்தானா?

உங்களை எமது 16ஆவது இதழின் மூலமாகச் சந்திப்பதில் மகிழ்ச்சி. உங்கள் அனைவருக்கும் 'கர' தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'அரம் போலும் கூர்மையரேனும் மரம்போல்வர் மக்கட் பண்பில்லாதவர்' என்றார் திருவள்ளுவனார். மக்கட் பண்பில்லாதவர்களின் ஆதிக்கம் அதிகரிப்பதினால் தான் நாட்டில் அராஜகங்கள் மிகையாகத் தோன்றுகின்றன என்றால் தவறில்லை. 'கர' வருடம் நன்மைகளை நல்கும் வருடமாகட்டும்.

வேகப்பாய்ச்சல் காட்டாது, நிதானமாக நகரும் நீரோட்டம் போல், கலைக்கேசரியும், அமர்க்களமின்றி நகர்ந்தாலும், நல்ல பல ஆழமான விடயங்களைத் தன்னுள் அடக்கி, நடை போடுவதன் மூலம் நமது வாசகர்களைக் கவர்ந்து வருகின்றது. அதற்கு அறிஞர் பெருமக்கள் பலரும் நல்கி வரும் பங்களிப்புக் காரணம் என்பதைக் கூறவேண்டியதில்லை.

இவ்விதழிலும் பல்வேறு ஆழமான சிந்தனைக்குரிய விடயதானங்களை அறிஞர்கள் தந்திருக்கிறார்கள். நம்மினத்தின் தொன்மைப் பெருமைகள் 'நதிமூலம், ரிஷி மூலம்' காண்பது போல் இதயத்தின் ஒரு மூலையில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதை உணரவே செய்வீர்கள்.

மென்மேலும் பல ஆழமும், அழகும் நிறைந்த விடயங்களுடன் சந்திப்போம்.

வணக்கம்

அன்புடன்
அன்னலட்சுமி இராஜதுரை

**PUBLISHER**
Express Newspapers (Cey) (Pvt) Ltd.
185, Grandpass Road, Colombo 14,
Sri Lanka.
T.P. +94 11 5234338
www.kalaikesari.com
e-mail:editor@kalaikesari.com
subscription@kalaikesari.com

**EDITOR**
Annalaksmy Rajadurai

**SUB EDITOR**
Bastiampillai Johnsan

**MEDIA CO-ORDINATOR**
Pragash Umachandraa

**CONTRIBUTORS**
Prof. N. Shanmugalingan
Prof. S. Sivalingaraja
K. Thangeswary
Pathma Somakanthan
Subashini Pathmanathan
Thakshayiny Prabagar
Shanthini Arulanantham

**PHOTOS**
Sabita N.
S. Sujeewakumar
Chhaya Rabeshen

**LAYOUT**
S. A. Eswaran

**ICT**
S. T. Thayalan

**ADVERTISING**
M. Senthilnathan


**CIRCULATION**
Dilip Kumar

**PRODUCTION**
L. A. D. Joseph

ISSN 2012 - 6824


# உள்ளடக்கம்










## அட்டைப்படம் :

மங்களம் பொங்கும் காஞ்சிப்பட்டு


06 மறந்தவையும் மறைந்தவையும்

10 கதிர்காம முருகன்;
சமூக மானிடவியல் தரிசனம்

30 ஈழத்தில் பௌத்தத்திற்கு முற்பட்ட
திராவிட சான்றுகள்

38 காலத்தின் கோலத்தில் மரச்சிற்பங்கள்

46 வைடூரியம்

54 வெற்றி தரும் வெற்றிநாயகி




# யாழ்ப்பாணப் பண்பாடு:
# மறந்தவையும் மறைந்தவையும்

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

## பெயர் வழக்குகள்
### ஆட்பெயர்கள் (PERSON NAME)

யாழ்ப்பாணப் பெயர் வழக்குகளை இடப் பெயர்கள், காணிப் பெயர்கள், ஆட்பெயர்கள், அஃறிணைப் பெயர்கள் எனப் பகுத்து நோக்கலாம். யாழ்ப்பாணத்து இடம் பெயர்களைப் பற்றிப் பலர் ஆய்வு செய்துள்ளனர். சுவாமி ஞானப்பிரகாசர் முதல் பேராசிரியர் இ. பாலசுந்தரம் வரை இத்துறையிலே ஈடுபட்டுழைத்துள்ளனர்.

யாழ்ப்பாணப் பிரதேசத்துக் காணிகள் அளவீடு செய்யப்பட்டுத் தோம்பு தயாரிக்கப்பட்ட போது காணிப் பெயர்கள் தோம்பிலே பதியப்பட்டுள்ளன. வளவு, சீமா, குறிஞ்சி, வாரி, வத்தை முதலான பல காணிப் பெயர்களைத் தோம்புகளிலே காணமுடிகிறது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில், பனை, தென்னை, பசு, எருது, நாய், பூனை முதலானவற்றைப் பெயரிட்டு அழைக்கும் வழக்காறும் மிக நீண்ட காலத்தில் இருந்தே நிலவி வருகின்றது. யாழ்ப்பாணப் பொருளாதாரத்தோடு ஒன்றிப்போன பனை மரத்திற்கு பெயரிட்டு அழைக்கும் வழக்காறு இன்றும் கிராமப் பகுதிகளில் உண்டு.

செண்பகவரியன், முடத்தி, ஆயிரங்காய்ச்சி , மாம்பழத்தி முதலான பெயர்களைப் பனை மரத்துக்கு இட்டு அழைப்பர். இவ்வாறே தென்னை மரத்துக்கும் சூரியகாந்தி, சந்திரகாந்தி, பச்சைதின்னி முதலான பெயர்களை இட்டு அழைப்பர். இப்பண்பு இப்பொழுது மிக அருகி விட்டது.

இவ்வாறே பசுவுக்கு லட்சுமி, மீனாட்சி, பொன்னி, கண்ணாத்தை முதலான ஆட்பெயர்களை இட்டு வழங்குவர். எருதுக்குப் பூச்சியன், நரையன், தண்டையன், கழுகன், கொம்பன் முதலான பெயர்களை இட்டு வழங்குவர். நாய்களுக்கு வீரன், சூரன், வீமன், வெள்ளையன், சிங்கன் முதலான பெயர்களைச் சூட்டி அழைக்கும் வழக்காறு மிக அண்மைக்காலம் வரை இருந்து வந்துள்ளது. இவ்விடத்திலே நாவலியூர் சோமசுந்தரப்புலவரின் 'வீமா, வீமா ஓடி வா, அணில் வேட்டையாடிப் பிடித்துனக் கூட்டுவேன் வா, வா' என்ற பாடலையும் நினைவு கூரலாம். இன்று நாய்களுக்கு இடப்படும் பெயர்கள் மேலைப் புலப் பெயர்ப் பாணியிலே அமைவதும் அவதானிப்புக்குரியது.

இக்கட்டுரை யாழ்ப்பாணத்து ஆட்பெயர்கள் (Person name) பற்றியதாகவே அமைகின்றது.

ஏறத்தாழ ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வழங்கிய ஆட்பெயர்கள் (Person name) ஏதோ ஒரு வகையிலே சில அடிப்படை அமிசங்களைக் கொண்டவையாகவே காணப்பட்டன. ஒருவரின் பெயரைக் கொண்டே அவரின் ஊரை அல்லது கிராமத்தை, அல்லது குடும்பத்தை ஓரளவுக்கு அடையாளம் காணக்கூடிய தன்மை



இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை காணப் பட்டதெனலாம். ஆங்கிலக் கல்வி வழி முகிழ்த்த சமூக மாற்றங்களின் விளைவாக ஆட்பெயர்களும் மாற்றம் பெற்றன.

தமிழகத்தின் செல்வாக்குப் பல வழிகளிலும் யாழ்ப்பாணத்தைப் பாதித்திருந்த போதும் ஆட்பெயர்கள் என்ற வகையிற் செல்வாக்கைச் செலுத்த வில்லையென்றே கூறலாம். பெரும்பாலும் தமிழகத்திலே ஆட்பெயர்கள் குல அடிப்படையில் அல்லது சாதி அடிப்படையிலேயே அமைந்திருந்தது எனலாம். யாழ்ப்பாணத்தில் அத்தன்மை பெருமளவுக்குப் பேணப்பட வில்லையென்றே கூறலாம்.


யாழ்ப்பாணப் பகுதியிலே இடப்பட்ட ஆட்பெயர்கள் வழிபடு கடவுளரின் அல்லது வழிபடு தலத்தின் பெயராலும், தமது மூதாதையரை நினைவு கூரும் வகையாலும், புராணம், இதிகாசம், கூத்து இவைகளின் செல்வாக்கினாலுமே பெருமளவுக்கு அமைந்தன. மிகச் சிறுபான்மையாகப் பொதுவான பெயர்கள் இடப்பட்டதும் உண்டு. இப்பண்புகள் இலங்கைத் தமிழ் மக்கள் யாவருக்கும் பெரும்பாலும் பொருந்தும் என்றே கருதுகிறோம். எமது கள ஆய்வு யாழ்ப்பாணப் பிரதேசத்தை மட்டுமே வைத்துச் செய்யப் பட்டமையைக் குறிப்பிடவேண்டும்.


பிற்காலத்தில் அரசியற் செல்வாக்கு, தனி மனித ஆளுமை, தனித் தமிழ் இயக்கம், நாவல் சிறுகதைகளில் வரும் கதாபாத்திரங்கள், தென் இந்திய சினிமா முதலானவை ஆட்பெயர் வழக்கில் செல்லாக்குச் செலுத்தின.

மேலைப் புலத்தவரின் வருகையாலும் கிறிஸ்தவத்தின் செல்வாக்கினாலும் சமயம் சார்பற்ற பெயர்களும் இடம்பெற்றன. (கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ சமயச் சார்பான பெயர்களை வைத்தனர். அவை பற்றிப் பின்னர் விளக்குவோம்) இன்று புலப் பெயர் தொடர்புகளினாலே புதுவகையான பெயர்கள் சூட்டப்படுவதும் உண்டு. இத்தோடு எண் சாத்திரத்தின் செல்வாக்கினாலும் பெயர்கள் இடப்படுகின்றன. இவற்றிலே பெரும்பாலானவை பொருளற்றவையாகவும் காணப்படுகின்றன. சமூகவியல் நோக்கிலே யாழ்ப்பாணத்திலே வழங்கிய - வழங்கும் ஆட்பெயர்கள் ஆராய்வது சுவை பயப்பதாகவுள்ளது.

### வழிபடு கடவுளர் - தலங்களின் பெயர்கள் :

யாழ்ப்பாணப் பிரதேசத்திலே பிரசித்தி பெற்று விளங்கும் செல்வச்சந்நிதி, நல்லூர், மாவிட்டபுரம், வல்லிபுர ஆழ்வார், வண்ணை வரதராஜப் பெருமான், பொன்னாலைக் கிருஸ்ணன், நயினாதீவு, நாகபூஷணி அம்மன் முதலான தலங்களிலுள்ள தெய்வங்களின் பரியாய நாமங்கள் பெரும்பாலும் பிள்ளைகளுக்கு இடப்பட்டன. தம் ஊரில், தாம் வழிபடும் தெய்வங்களின் பெயர்களையும் பிள்ளைகளுக்குச் சூட்டினர். தமக்குப் பிறக்கும் பிள்ளைக்குத் தாம் வழிபடும் கடவுளின்





பெயரை வைப்பேன் என்று நேர்த்தி வைப்பதும் உண்டு. சமூக மேலாண்மையையும், சாதி நிலையையும் பேணுவோர் இவ்வழிபடு கடவுளரின் பெயர்களைப் பின்னொட்டுக்கள் சேர்த்து நீட்டி வழங்கினர்.

உதாரணமாக:

வேலன் - வேலாயுதம், வேலுப்பிள்ளை

முருகன் - முருகமூர்த்தி, முருகேசபிள்ளை

கந்தன் - கந்தசாமி, கந்தப்பு, கந்தசாமிப்பிள்ளை

வள்ளி - வள்ளிநாச்சி , வள்ளியம்மை, வள்ளிப்பிள்ளை

தெய்வீ - தெய்வயானை, தெய்வானைப்பிள்ளை

இவ்வாறு பல பெயர்களைச் சுட்டிக் காட்டலாம்.

ஈழத்துத் தலங்களை நினைவுப்படுத்தியது போலவே தமிழகத்துத் தலங்களையும் கடவுளர்களையும் நினைவு கூரும் வகையிலேயும் பெயர்கள் இடப்பட்டன. யாழ்ப்பாணத்திலே செல்வாக்குச் செலுத்திய தமிழகத் தலங்களிலே, சிதம்பரம், இராமேஸ்வரம், திருமறைக்காடு, மதுரை மீனாட்சி கோயில், திருச்செந்தூர் முதலியன முக்கியமானவை. இத்தலங்களை, இத்தலங்களின் கடவுளர்களை நினைவுகூரும் வகையிலே இடப்பட்ட பெயர்களும் உண்டு.

சிதம்பரம் - சிதம்பரநாதன், சிதம்பரப்பிள்ளை,பொன்னம்பலம்

இராமேஸ்வரம் - இராமநாதன், இராமசாமி,

திருமறைக்காடு - வேதவனம், வேதநாதன்

மதுரை - மீனாட்சி

திருச்செந்தூர் - செந்தில்நாதன், செந்தூரன் (சற்றுப் பிற்காலம்) இவ்வாறு பல உதாரணங்களைச் சுட்டிக் காட்டலாம்.

இவ்விடத்திலே யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வழங்கி வரும் செவி வழிக் கதையொன்றும் நினைவு கூரப்பட வேண்டியதே. ஒல்லாந்தர் காலத்திலே பிறக்கும் பிள்ளைகளைப் பதிவு செய்யும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. அக்காலத்திலே 'பிள்ளைப் பதிவு' என அழைக்கப்பட்ட பதிவு செய்தலை மேற்கொண்ட கிராமத் தலைமைக்காரர்கள் பிள்ளைகளின் முழுப் பெயரையும் பதியாது குறுக்கிக் கந்தன், வேலன், முருகன், தருமன், சின்னவன் எனப் பதிந்ததாகக் கூறப்படுகின்றது. இவை அழகான தமிழ் பெயர்கள் என்பதை அக்காலத்து ஆளும் வர்க்கம் அறிந்திருக்கவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்றும் வழிபடு கடவுளரின் பெயர்கள் இடம் பெறுகின்றன. செந்தூரன், மயூரன், மாதவன், நவநீதன், ஸ்ரீராமன், கஜனன் முதலான பெயர்களை உதாரணமாகச் சுட்டிக் காட்டலாம்.

தொடரும்....




An auspicious
time has come to
Gift & Receive
We Wish All Our Customers
A Happy Sinhala & Tamil New Year.
22 KT Gold Jewellery
Devi
Jewellers (Pvt) Ltd.
Precious Expressions Since 1965
Devi Jewellers (Pvt) Ltd. 131, Sea Street, Colombo 11, Sri Lanka
Tel: +94 112 395001-5, Fax: +94 112 327101, E-mail: info@devijewellers.lk
• Parking facilities available • No other Branches

# கதிர்காம முருகன்; சமூக மானிடவியல் தரிசனம்


பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்

### முருகன் - வள்ளி திருமணம்

தமிழர்களைப் போலவே வள்ளி - முருகன் திருமணத்தை ஏற்றுக் கொள்ளும் அதே வேளையில் சூரனுடனான போர் சிங்கள ஐதீகங்களில் பெரிதும் அறியப் படாமல் இருப்பதனையும் இங்கு குறிப்பிட வேண்டும். வள்ளி திருமணம் தொடர்பாக ஸ்கந்தனுக்கும், வேடர்களுக்கும் தான் போர் நடந்தது. அந்தப் போரிடை 500க்கும் அதிகமானளவு வேடர்கள் கொல்லப்பட்டனர். பின் வள்ளி, 'என் பெற்றோர்களையும், உறவினர்களையும் கொன்று விட்டீர்களே' என்று அழ முருகன் மாணிக்க கங்கை நீர் தெளித்து அவர்களை உயிர்ப்பித்தார். அன்று முதல் வேடர்கள் ஸ்கந்தனை தம் தலைவனாகக் கொண்டனர். தேனும், தினையும் படைத்து விழாவெடுத்தனர் என்ற விதமாய் இவர்கள் ஐதீகம் சொல்கின்றது. இதனை விட அசுரய என்ற பெயர் கொண்ட ஒரு தமிழ்த் தலைவனையே ஸ்கந்தன் கொன்றதாகவும், கெப்பிட்டிபொல சாமி போன்றோரின் அண்மைக்கால ஐதீக செருகல்களையும் அவதானிக்க முடியும். (கள ஆய்வு)

வேடர் மரபிலும், தமிழ் - சிங்கள மரபிலும் நிலவும் இந்தக் கதைகளைத் தமிழ்நாட்டு அறிஞர்கள் பெரிதும் ஏற்பதில்லை. முருகன் - வள்ளி திருமணம் திருத்தணிக்கு அருகிலுள்ள வள்ளி மலையில்தான் நிகழ்ந்தது என்பது அவர்கள் ஐதீகம். எனினும் இந்த நம்பிக்கை ஈழத்தவர் நம்பிக்கையைப் பாதித்ததில்லை.

வடஇந்திய ஸ்கந்த தெய்வயானை மரபு, முருக - வள்ளி மரபுடன் பின்னாளில் இணைக்கப்பட்ட வேளையிலும், அதற்கு ஏற்ப உள்ளூர் வழக்காறுகள் இசைவு காணும் முருகனின் இந்திய மனைவியான தெய்வயானை, முருகனை மீண்டும் இந்தியாவுக்கு மீட்டுச் செல்லும் முயற்சி தோல்வியில் முடிய, தாமும் இங்கு வந்து மூவரும் மூன்று கோவில்களில் கதிர்காமத்திலே தங்கி விட்டனர் என்பதாகப் புதிய ஐதீகம் அமையும். இதற்கு இசைவாக்கம் நிகழ்ந்தவிடத்தும், ஆலயத் திருவிழா வேளையில் வள்ளியம்மனுக்கே முக்கியத்துவம் தரப்படக் காணலாம். அன்றாட விழாக் கால வீதியுலா, வள்ளியம்மன் சந்நிதியை நோக்கியே செல்வதும், தீர்த்தத்திற்கு முதல் நாள் இரவு, முருகன் வள்ளியம்மன் சந்நிதானத்தில் சில பொழுது தங்கி வருகின்றமையும் முருகன் - வள்ளி நெருக்க இணைவினைக் குறியீட்டு ரீதியாய் உணர்த்தி நிற்பன. அதேவேளை இந்த வீதியுலா, தெய்வயானையைக் கருத்தில் கொள்ளாமையும் குறிப்பிடத்தக்கது.



## வேடர்களின் பூசை

இதனையொத்த வழிபாட்டு நடைமுறைகளை, கதிர்காமத்துடன் தொடர்பான மட்டக்களப்புத் தமிழக ஆலயங்களிலும் காணமுடியும். சின்னக் கதிர்காமம் எனப்படும் மண்டூர் கந்தசுவாமி கோயில், உகந்தை முருகன் கோயில் என்பன இந்த வகையில் குறிப்பிடத்தக்கன. உகந்தை முருகன் கோயிலில் வள்ளியம்மைக்குத் தனி ஆலயம் உள்ளமையும், தெய்வயானையம்மனுக்கு இடம் தரப்படாமையும் இங்கு கவனத்திற்குரியவை. மட்டக்களப்பு பிரதேசத்தின் பிரபல முருகன் கோயில்களைக் கதிர்காம வழிபாட்டின் வட திசைப் பரம்பலாகப் பேராசிரியர் வேலுப்பிள்ளையவர்கள் (1989) குறிப்பிடுவார்கள். எனினும் இங்கு நிலவும் குமரத்தன், குமரதம்பிரான் வழிபாடுகள் தொடர்பான கள ஆய்வுகள், கதிர்காமத்தை ஒத்த வனச் சூழலியலில் உருவான ஒத்த பண்பாட்டுக் கோலங்களாகக் கருத வைப்பன. இங்கும் வேடர் பூசையே முக்கியமானதாகும்.


**வேடர் பூசை:** இவ்வாறாக, கதிர்காமம் முதல் ஏனைய ஆதி முருக வழிபாட்டு மையங்கள் வரை வேடர்களின் பூசை முறைமை சிறப்பாக அமைகின்றமை முக்கிய கவனத்திற்குரியதாகும்.

'வனமுறை வேடர் அருளிய பூசை மகிழ் கதிர்காம முடையோனே'


எனப் பின்னாளில் அருணகிரிநாதர் பாடுவார். இன்று பெரிதும் சிங்கள மயமாகி விட்ட நிலையிலும், தாம் வள்ளியின் வழித் தோன்றல்கள் எனப் பிரதம பூசகர்களான கப்புராளைமார் சொல்லிக் கொள்வதனையும் இங்கு கருத்திற் கொள்ளலாம். (அண்மைக் காலங்களில் சிலர், தாம் துட்டகைமுனுவின் படைவீரரான நந்திமித்திரனின் வழித் தோன்றல்கள் என்றும் சொல்கிறார்கள்) பிரௌன்ரி தேசாதிபதி காலத்து 1819 இல் கப்புராளைமார் பூசைப் பொறுப்பு ஐயசிங்க திரி சுவாமிகளிடம் கையளிக்கப்பட்ட வேளையிலும், வள்ளி நாயகி கோயில் பரிபாலனம் வேடர் வழி கப்புராளைமார்களிடமே இருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கதிர்காமத்து வழிபாடு பொருள், வழிபாட்டு முறை என்பன ஏனைய இந்து - சைவ மரபுகளினின்றும் வேறுபட்டது. இங்கு விழாக் கால ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்படும் புனித பெட்டியினுள் என்ன உள்ளதென்பது அறியப்படாதுள்ளது. முருகனை உருவகிக்கும் யந்திரத் தகடு ஒன்றே மூலஸ்தானத்தில் உள்ளதென்பது நம்பிக்கை. இதனை விட செஞ்சந்தனக் கட்டையால் செய்யப்பட்டு தங்கத் தகட்டால் பொதிக்கப்பட்ட ஆறுமுகப்பெருமான் விக்கிரகம் உள்ளதென்ற கருத்தும் முன்வைக்கப்படும். 1922 முதல் பஸ்நாயக்காவாக இருந்த உள்விட்ட என்பாரும், 1934 வரை இங்கு திருப்பணி ஈடுபாடு கொண்டிருந்த புஞ்சிசிங்கோ என்போரும், கதிர்காம பிரதம குருவும் இதற்குச் சாட்சி என்பார் எஸ்.எஸ். நாதன் (1965). தெய்வயானையம்மன் வள்ளியிடமிருந்து தன்









கணவனை மீளப்பெறும் பொருட்டு, அனுப்பி வைத்த வசிய யந்திரம் தான் அது என்பது போன்ற புதிய ஐதீகங்களுங்கூடப் பதியப்படும். எவ்வாறோ இன்றுள்ள நடைமுறையில் புனிதப் பேழை ரகசியம் அறியப்படாமலேயே தொடர்கின்றமையைக் காணலாம்.

தமது வாயை மஞ்சள் துணியால் கட்டி, திரைச் சீலைக்குள் நைவேத்தியத்தினை வைத்து, திரைச் சீலைக்கு ஆராதனை செய்யும் வழமையே இன்றுவரை தொடர்வதைக் காணலாம்.

அறுபதுகளில் புனித நகராகப் பிரகடனப்படுத்தப்படும் வரை இங்கு நைவேத்தியமாக மான் இறைச்சி படைக்கப்பட்டமை பற்றிய பதிவுகள் கதிர்காமத்தின் ஆதி இந்து (Proto – Hindu) பண்பாட்டினை உணர்த்தி நிற்கக் காணலாம்.

*'மான் கொன்ற முடைநாறிறைச்சி யொடு திரிதாடி*
*மயிரணற் கொடுவி வெயினன்*
*வழிபாடு தரவருளி வலவை யாற்றங்காடு*
*வந்த கதிரைத் தெய்வமே'*

எனப் பின்னாளில் எழுந்த திருக் கதிர்காம பிள்ளைத் தமிழ் (கருணாலய பாண்டியனார் 1953) இவ்வழக்கினை உறுதிசெய்யும்.

கதிர்காம முருகன் ஊர்வல வேளை ஆலாத்தி எடுத்து வரவேற்கும் முறைமை வேட்டுவப் பெண்களிடமே இன்றுவரை உள்ளமையும் இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக வேடர்களின் வழிபாட்டு மரபும், ஈடுபாடும் கதிர்காமத்துடன் இரண்டறக் கலந்துள்ளமை தெளிவாகும். வேடர்கள் தொடர்பாக இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆய்வுகளை மேற்கொண்ட பாக்கர் (Parker 1909), செலிக்மன் (Seligmann 1911) ஆய்வுகள், ஆதித் தமிழ்ப் பண்பாட்டின் குறிஞ்சி நில முருக வழிபாட்டுடன் ஒத்த வழிபாட்டு நிலைமைகளை வேடர்களிடம் இனம் காட்டின. இலங்கையின் வன வேடர்கள், 'கலேயக்கா' எனப் பாறைகளில் சிறு தெய்வத்தைப் பிரதான வழிபடு பொருளாகக் கொள்கின்றனர். வடக்குக்கரை தமிழ் வேடர்கள் மலைப்பேய், மலையன், மலையசாமி என இதனை அழைக்கின்றனர். இவ்வாறே மையப் பகுதி வேடர்கள் கதிர்காமத்துடன் தொடர்புபட்டுள்ளனர் என்பார் பாக்கர் (1909). தம்மைத் தேசியமயமாக்கும் திட்டமிட்ட நடவடிக்கைகளுக்கு எதிராகத் தமது ஆதிப் பண்பாட்டு அம்சங்களில் பற்றுறுதியுடன் நிற்கும் வேடர்கள் தொடர்பான விவிகா. ஸ்ரெகபோனின் அண்மைய ஆய்வுகள் (Stegeborn1997) அவர்களிடம் ஆழ வேர்விட்டுள்ள கதிர்காம ஈடுபாட்டினையும் உறுதி செய்யும்.


தொகுத்து நோக்கும் போது, கதிர்காமம் இன்று வேடர், இந்து - பௌத்த பண்பாட்டு வட்டங்களுக்கு அப்பால், தனக்கென ஒரு தனித்துவ இணைப் பண்பாட்டுத் தன்மையை வெளிப்படுத்துகின்றதென்பதே பொருத்தமானது.

'ஐதீக உருவாக்கம் சமூகவியல் சார்ந்தது' எனும் மலினொவஸ்கியின் கருத்தியலை மீள வலியுறுத்துவதாகவே கதிர்காமம் தொடர்பான ஐதீகங்களும் விளங்குகின்றன. இலங்கையின் இனத்துவ முரண்வரலாறும், அரசியல் அதிகார மாற்றங்களும் இந்த ஐதீகங்களிடைத் தெற்றென புலப்படும். பி.ஈ.பீரிஸ் (1913) அன்றே குறிப்பிட்டவாறு, இவ்வாலயம் பௌத்தத்திற்கு முற்பட்டதென்பது, திட்டமிட்ட ஐதீக உருவாக்கங்கள், இடைச்செருகல்களை விளங்குதலின் வழி புலப்படும்.

வேடர்களின் மரபுடன் இசைந்த போதிலும், ஆதித் தமிழ் பண்பாட்டுக்குரியதாகக் கருதப்படும் களவு மணம், முருகன் காதல் மனைவி வள்ளியின் தமிழ்ப் பெயர் மூலம் என்பன கதிர்காமத்தைத் திராவிட - தமிழ்ப் பண்பாட்டுடன் நெருக்கமாக்குவன. அத்துடன் ஆரிய கலப்பின் பின்னர், வள்ளி - தெய்வயானை சமேத சண்முகப் பெருமானாக முருகன் கண்ட மாற்றங்கள் இங்கு கந்தபுராண செல்வாக்கின் வழி அறியப்பட்ட போதிலும், தமிழ் முருகன் தனித்துவம், கதிர்காமத்திலும், மட்டக்களப்புத் தமிழகப் பகுதிகளிலும் நிலை பெற்றுள்ளமையையும் இணைத்து நோக்கலாம்.

இதற்கும் மேலாக இன்று நிலவும் வழிபாட்டு மரபுகளிடை தமிழ் இந்து பக்திவழி, வணக்க முறைகளே கதிர்காமத்தில்







மேலோங்கி நிற்பதையும் குறிப்பிடவேண்டும். விளைவாக இனத்துவ அரசியல் அலைகளை விஞ்சும் இந்த பக்தி அலைக்குள், இன்று அனைத்து இனக்குழுக்களும் சங்கமமாகின்றமை சிறப்பான கவனத்துக்குரியது. தமிழர்களைத் தண்டிக்கவே தீ மிதிப்பு, முள்ளு மிதிதடி, தூக்குக் காவடி என்றதும் கரீம் என்ற இஸ்லாமியர் நினைவே மேலெழும். இன்னும் தீ மிதிப்பு நேர்த்திக் கடன்களின் சடங்குத் தலைமை கை மாறியபோதும், நடைமுறையில் அனைவரும் சம்பந்தப் படுகின்ற நிலைமை இத்தகு சடங்குகள் கிரியைகளை ஏற்றுக்கொள்ளாத பௌத்த மும்மணிகளே, ஆசி வழங்க வேண்டிய நிர்ப்பந்தம். பௌத்தம் மட்டுமன்றி இந்துப் பண்பாடும் தனது இறுக்கமான சைவ ஆகம மரபுகளைத் தளர்த்தி இறைச்சி நைவேத்தியம் படைத்தலை அங்கீகரித்தலும், பிற பண்பாட்டு அம்சங்களைச் சகித்துக் கொள்ளலும் இங்கு கவனிக்கத்தக்கது.

இவ்வாறாக கதிர்காம நியமங்களுக்கு முதன்மை தந்து, ஏனைய மத நியமங்கள் நெகிழ்ந்து போகின்ற தன்மையே கதிர்காமப் பண்பாட்டு நிலைபேற்றினதும், தனித்துவத்தினதும் அடிப்படை எனலாம். மேலும் கதிர்காமம் தொடர்பான மேட்டுக்குடி இனவாத அலைகள், அவ்வப்போதான தேவைகளின் படியாக எழுந்த போதிலும், ஆழ மக்களிடத்து ஊடுருவ முடியாதபடி அதன் அமைவிடமும், வனச் சூழலும் அனைத்தையும் உள்ளடக்கும் பக்திச் சூழலும் சக்தி வாய்ந்தனவாக விளங்குகின்றமையும் இங்கு இணைந்து நோக்கப்படக் கூடியன.

தொகுத்து நோக்குமிடத்து வேட்டையும், உணவு சேகரித்தலும் இணைந்த பெருங் கற்காலப் பண்பாட்டுக்கும் முன்னைய ஒரு கூட்டுச் சமூக வாழ்வின் பிரதிபலிப்பாய், கால மாற்றத்தால் கூறப்படும் இனத்துவ வேறுபாடுகளுக்கப்பால் மக்கள் சமயம் என்ற பரந்ததோர் உணர்வு வட்டத்துள் அனைத்துப் பண்பாடுகளையும் இசைவாக்கி, தானே ஒரு தனித்துவப் பண்பாட்டுத் தொகுதியாய் கதிர்காமம் விளங்குகின்றதெனலாம்.

**உசாத்துணைகள் :**

அருணாசலம், பொ. 1926. கதிர்காம வேலவர் மொழிபெயர்ப்பு க.இளையதம்பி, யாழ்ப்பாணம். ஸ்ரீகாந்தா அச்சகம்.

கணபதிப்பிள்ளை, மு. 1967. முருகன் கதிர்காமம் சென்னை. அருள் நிலையம்.

கருணாலய பாண்டியனார், சி. 1983. திருக்கதிர்காமப் பிள்ளைத்தமிழ் கொழும்பு. பிரதேச அபிவிருத்தி இந்து சமய, இந்து கலாசார, தமிழ் அலுவல்கள் அமைச்சு வெளியீடு (2ம் பதிப்பு)

குமாரசுவாமிப்பிள்ளை, வ. 1935. கதிரமலைப்பள்ளு யாழ்ப்பாணம் சபாநாதன், குல.1965. கதிர்காமம் சென்னை: பாரிநிலையம்.

சிவம், அ.சி.1954. கதிர்காம மான்மியம். யாழ்ப்பாணம்: கஸ்தூரிபா காந்தி பதிப்பகம்.

நாதன், எஸ்.எஸ். 1964. கதிர்காமத் திருமுருகன், கொழும்பு. நியூ லீலா அச்சகம்.

வேலுப்பிள்ளை, ஆ. 1989. 'அணிந்துரை' ஆற்றங்கரையான். (அ. சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ்). பருத்தித்துறை: வராவெல்லை வெளியீடு - 3

ஹெரத்தோ, பண்டில. 1997. 'நேர்முகம்' தினகரன் வாரமஞ்சரி, ஜூலை 27, ஞாயிறு.

Gombrich, Richard & Obeysekere, Gananath, 1990 . Buddhism Transformed –

Religious change in Sri Lanka. Delhi: Motilal Banarsidass Publishers Pvt. Ltd.

Mahadeva, A. 1938. A Few Facts Relating to the Holy Shrine of Lord Skanda at Kataragama & for the Restoration of its. An Appeal Management to the Hindus, Colombo: Vivekananda Society and other Hindu Organizations

Mahawamsa. 1964. Translated into English by Withelm Geiger, London. Published for the Pali Text Society.

McGilvray, Dennis B. 1998. Symbolic Heat; Gender, Health and Worship among the Tamils of South India and Sri Lanka. Ahmedabad; Mapin Publishing Pvt. Ltd.

Parker ,H. 1938. Ancient Ceylon. London; Luzec and Co.


Paris, P.E. 1913. Ceylon – Portuguese Era – Vol 1. Colombo.

Pettezzoni, Raphael, 1956. The All-Knowing God (Translated by H.J. Rose). London: Methyen & Co. Ltd.


Seneviratne, J.M. 1956. "A Letter". Times of Ceylon, Sunday, 20th February, 1997.

Seligmann, G.G. & Seligmann, Brendra, Z. 1911. The Veddas. Cambridge: Cambridge University Press.

Stegebom, Wiveca, 1997. Indigenous People and the Environment : Parasitic or Symbiotic – A Case Study of "Veddhas of Sri Lanka" 6th Sri Lanka Studies – Conference paper, Kandy.
















# புராதன மட்பாண்டங்கள்


மட்பாண்டங்களாவன ஆதி மனித வாழ்க்கையுடன் ஒன்றி வளர்ந்த பயன்பாடு மிக்க, நாளாந்த பாவனைக்கு இன்றியமையா கைவினை செறிந்த பொருட்களேயாகும். சாதாரண வாழ்க்கையில் மட்பாண்டப் பொருட்கள் எனக் குறிப்பிடப்பட்டு அழைக்கப்படுகின்றன.

மனித நாகரீக வாழ்க்கை முறையுடன் பின்னிப் பிணைந்து பல வகையிலும், உபயோகம் மிக்க, ஊடகமாக, மட்பாண்டத்துறை தொன்று தொட்டு இன்று வரை விளங்குகின்றது.

சட்டிகள், பானைகள், குவளை வகைகள் என மட்பாண்டங்கள் பல வகைப்பட்ட பயன்பாட்டிற்கும் குறிப்பாகச் சமையல் தேவைகளுக்கும், பொருட் சேமிப்பிற்கும், திரவ ஊடகப் பாவனைப் பயன்பாட்டிற்கும், பண்டைக் காலத்தில் இருந்தே பயன்படுத்தப்பட்டு வந்தன.

பெரும்பாலும் மட்பாண்டப் பயன்பாட்டுக்கு ஒப்பாக, ஈடாக ஆங்காங்கே மரப்பாண்டப் பாவனை பொருட்கள் பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரபூர்வமான சாட்சிகள் குறிப்பிட்ட போதிலும், காலக்கிரமத்தில் நடைமுறையில் எதிர் கொள்ளப்பட்ட பல தரப்பட்ட கஷ்டங்களால் மரத்தாலான பாவனைப் பொருட்களின் பயன்பாடானது கை நழுவ விடப்பட்டிருக்கலாம் எனத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஊகிக்கின்றனர்.

மட்பாண்டப் பாவனைப் பாத்திரங்கள் பலதரப்பட்ட சீதோஷ்ணம், வெப்பநிலை தாக்கங்கள் என்பவற்றுக்கு ஈடுகொடுக்கக் கூடிய ஊடகமாகும். இவை பெரிதும் பண்டைய காலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்தன. பண்டைய காலப் பாத்திரங்களின் தொடர்ச்சியாகவே இன்று வரை கணிசமான அளவு மட்பாண்டப் பாவனைப் பயன்பாடு நடைமுறையில் உள்ளன.



இன்று உலகளாவிய ரீதியில் ஏராளமான புதை பொருள்கள் அகழ்வாராய்ச்சி மூலம் கிடைக்கப் பெற்றுள்ளன. பண்டைய நாட்களில் புழக்கத்தில் இருந்த மட்பாண்டங்கள் பற்றிய பல தகவல்களை அவற்றின் பெறுபேறுகள் வாயிலாக ஊகிக்க முடிகின்றது. பொதுப்படையில் கிடைக்கப்பெற்ற மட்பாண்டங்களின் பாவனைப் பயன்பாடு, அவற்றின் உருவ அமைப்புகள், வகைகள், பிரிவுகள் என்பன பற்றிய ஓர் ஒட்டு மொத்தக் கணிப்பீட்டுத் தகவல்களை அகழ்வாராச்சியாளர்கள் ஊடாக அடிப்படையிலும், விஞ்ஞானப் பூர்வமாகவும் எமக்கு எடுத்து நோக்கக் கூடியதாகவுள்ளது.

குறிப்பாக மட்பாண்டம் பற்றிய தொல் பொருள் ஆய்வாளர்கள் இக்கலையம்சத்தின் உன்னதத்தை எகிப்து, கிரேக்கம், பாபிலோனியம், பாரசீகம், சீனா, இந்தியா போன்ற நாடுகளில் கிடைக்கப்பெற்ற ஏராளம் புதைபொருள் அகழ்வாராய்ச்சிப் பெறுபேறுகள் மூலம் ஆதாரபூர்வமாக எடுத்தியம்புகின்றனர்.

எது எவ்வாறாயினும் பல்வேறு நாடுகளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மட்பாண்டப் புதை பொருட்கள் பல ஆக்கபூர்வமான தகவல்களைத் தருவதுடன் பண்டைய தொன்மையை மனித நாகரீகத்தின் உன்னதத்தைப் பறைசாற்றும் ஊடகமாக விளங்குகின்றன. பெரும்பாலும் மட்பாண்ட வகைகள் சிதைவுற்றனவாகவோ, உடைந்தனவாகவோ ஆங்காங்கே காணப்பட்ட போதிலும் ஆய்வாளர்களின் சீரிய ஆய்வுக்கு அமைய அவற்றின் உடைந்த, சிதைவடைந்த பாகங்கள், பகுதிகள் சீரிய வகையில் ஆய்வு செய்யப்பட்டு, ஒப்பு நோக்கப்பட்டு, கால வரையறைக்கமைய பகுப்பாய்வு செய்யப்பட்டு, மீள் உருவமைப்புக் கொடுக்கப்பட்டு வடிவமைக்கப்படுகின்றன.

இத்தகைய மீள் வடிவமைக்கப்பட்ட மட்பாண்ட வகைகளின் பாவனைக் காலம் விஞ்ஞான சரித்திர ரீதியில் அகழ்வாய்வாளர்களால் அண்ணளவாக கணிப்பிடப்பட்டு, தொல்பொருள் மையங்கள், ஆய்வு நிலையங்கள், நூதன சாலைகள், ஆய்வு ஆராய்ச்சி மையங்கள் ஆகியவற்றில் பொது மக்கள் பார்வைக்கு உலகளாவிய ரீதியில் வைக்கப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது.


இந்திய மட்பாண்டக் கலைத்துறையுடன் பல வகையிலும் இலங்கையின் மட்பாண்டக் கலைத்துறை இயல்பாகப் பல தொடர்புகளைக் கொண்டு விளங்குகின்றன.

சிந்துவெளிப் பண்பாட்டு நாகரிக விழுமியங்களாவன ஏறத்தாள 1872 ஆம் ஆண்டளவில் கண்டு பிடிக்கப்பட்ட போதிலும், 1922 ஆம் ஆண்டளவிலேயே அதன் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகழ்வு ஆராய்ச்சிகள் பல தரப்பட்ட, தகவல்களை எமக்கு வழங்கிய போதிலும் அடிப்படையில் இவை அக்காலத்தில் வழக்கில் இருந்த நகர நிர்மாணக் கட்டமைப்பு, கட்டிட வகைகள், அவற்றின் வனப்பு, கழிவு நீர் வடிகால் கட்டுக் கோப்பு, அக்காலத்தில் வழக்கத்தில் இருந்த பாவனைப் பொருட்கள், நாணயப் பாவனை மற்றும் பரிவர்த்தனை வியாபாரத் தொடர்புகள், சிற்பங்கள், கலாசாரச் சின்னங்கள், வாழ்க்கை முறை ஆதாரங்கள் ஆகியவற்றையும் செவ்வனே எடுத்தியம்புகின்றன.


இலங்கையில் பரவலாகக் கிடைக்கப்பெற்ற புராதன மட்பாண்டங்களாவன சில வர்ணங்கள் ஊட்டப்பட்டவை ஆகவும், சில வர்ணங்கள் தீட்டப்பட்டவையாகவும், சில ஓவியம் தீட்டப்பட்டவையாகவும் தோன்றுகின்றன. மேலும் சில கலை வனப்புச் செறிந்தவையாக வெறும் கோடுகளால் வரையப்பட்டவையாகவும் விளங்குகின்றன. இன்னும் சில பளபளப்பு ஊட்டம் மேற்கொள்ளப்பட்ட மட்பாண்டங்களாகவும் விளங்குகின்றன.

புராதன மட்பாண்டகளாயினும், இன்றைய வழக்கில் உள்ள மட்பாண்டங்களாயினும், அடிப்படையில் அவை வனையப்படும் முறைமை பெரும்பாலும் ஒன்றே. அதாவது தேர்ந்து எடுக்கப்பட்ட களிமண், நீரினால் பதப்படுத்தப்பட்டு, செவ்வனே கைகளினாலோ அன்றிச் சில்லினாலோ வனையப்பட்டு நெருப்புச் சூளையில் இடப்பட்டு புனையப்படுதல் வழமையாகும்.

எது எவ்வாறாயினும் இலங்கையின் மட்பாண்டப் பாவனைப் பயன்பாடானது பல தரப்பட்ட பரிமாண வளர்ச்சிப் படிநிலைகளைக் கொண்டு விளங்குகின்றது. சமையல்







பாவனைப் பொருட்கள், கிண்ணங்கள், குவளைகள், சமயச்சார் கிரியா விளக்குகள், சிட்டிகள், பூச்சாடிகள் என்பன சாதாரணமாக மட்பாண்டம் என்ற வரையறைக்குள் இடம் பிடிப்பவையாகும்.

இலங்கையில் புராதன மட்பாண்ட வகைகளில் முக்கிய இடம் பிடிப்பவை அனுராதபுரம், திஸ்ஸமகாராமா ஆகிய இடங்களில் அகழ்வாய்வுகளில் கிடைக்கப் பெற்ற புராதன மட்பாண்டங்கள் பல வர்ணங்களில், பல வடிவமைப்புகளில் இருப்பதைக் காணமுடிகின்றது.

புனித அனுராதபுர நகரத்தில் கிடைக்கப்பெற்ற ஒரு சான்றுப் பகர்வின்படி குறிப்பாக கி.பி. 2 ஆம் நூற்றாண்டுக்கும், 3 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட கல்வெட்டுச் சான்றுப்படி மட்பாண்டக் கலைஞருக்கு காணிக்கைகள் வழங்கப்பட்டமை தெரியவருகின்றது.

இந்த வகையில் மட்பாண்டக் கலையானது புராதன காலம் தொட்டு இன்று வரை உலகளாவிய ரீதியில் காணப் பட்டவிடத்தும் ஒவ்வொரு நாட்டின் கலை, கலாசார, சரித்திர, சமய, சம்பிரதாயத் தேவைக்கு அமைய கையாளப்பட்டு வந்தன என்பதனை வரலாற்று ஆதாரங்கள் எடுத்தியம்புகின்றன.

- மதுரா மதுசூதனன்

பட உதவி : H. J. Weisshaar


## GET கலைக்கேசரி DELIVERED TO YOUR HOME

Please complete the form given below, along with your Cheque/Money Order written in favour of 'Express Newspapers (Ceylon) (Pvt) Limited' and send it to our Head Office at No185,Grandpass Road, Colombo 14,Sri Lanka.
Tel:+94-11-5322700 / 5738046 Fax:+94-11-5517773
For more details, please contact **Arjun** - on arjun@expressnewspapers.net
**S. Sandrasegar** - +94 77 5359106 / +94 -11 - 5322783

**ORDER FORM :**

கலைக்கேசரி KALAIKESARI

**Editor**
**Kalaikesari**
**No. 185, Grandpass Road, Colombo - 14,**
**Sri Lanka.**

**Tel : +94-11-5234338 / +94-11-5322700**
**Fax :+94-11-5517773**
**E-mail : subscription@kalaikesari.com**

FOLD HERE

| | |
|---|---|
| Title | : Mr. ☐ Mrs. / Miss ☐ Dr. ☐ Prof. ☐ |
| First Name | :.................................................... |
| Last Name | :.................................................... |
| Institution | :.................................................... |
| Apartment/Other Nos | :.................................................... |
| Street / Road | :.................................................... |
| Town/City/State | :.................................................... |
| Country | :.................................................... |
| Amount Enclosed | : ................................(12 / 6 Issues) |
| Mode of payment | : Cheque / Money Order.......................... |
| Online Payment | : www.kalaikesari.com / Subscription |

# Windsor Gardens

இளைப்பாற்று வாழ்க்கையை மேற்கொள்ளும் புதியதொரு சந்ததி





வின்ஸர் கார்டின் விசாகா வீதி, கொழும்பு 04 இல் அமைந்துள்ளது. சுயாதீனமாக வாழ்ந்து கொண்டு உணவு சமைத்தல் மற்றும் வீட்டுப் பொறுப்புக்கள் பற்றிய கவலையின்றி வாழ்க்கையை அனுபவிக்க விரும்பும் தனிப்பட்டவர்களுக்கு ஏற்றதொரு சூழலை உருவாக்கி கொடுப்பதே வின்ஸர் கார் டினின் நோக்கமாகும்.



ஆகையால்,இத்தகையோருக்கு வின்ஸர் கார்டினில் பல திட்டங்களும் சுகாதார பராமரிப்பும் இணைந்த வாழ்க்கை தரத்தை நாம் ஏற்படுத்தி கொடுக்கிறோம். பெரிய சொகுசு அறைகள், தனித்துவமான பொது இடங்கள், இன்ப வாழ்வை ஊக்குவிக்கும் சேவைகள், நீடித்த வாழ்வு, நல்லாரோக்கியம், பாதுகாப்பு போன்ற வசதிகளை வின்ஸர் கார்டின் வழங்குகிறது.





நன்கு பயிற்றப்பட்ட ஊழியர்கள் எமது நிலையத்தில் வசிப்பவர்களுக்கு தினமும் 24 மணி நேரமும் அன்பான அரவணைப்பையும் ஆதரவையும் வழங்குகிறார்கள்.

29/8, Visaka Road, Colombo 04.

**☎ Contact: 077 331 5000**

**www.WindsorGardens.lk**




# வட இலங்கைத் துறைமுகங்கள்


பண்டைய காலம்முதல் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இந்து சமுத்திரத்தின் மத்தியில் இந்தியாவுக்கு அண்மையில் இலங்கை அமைந்துள்ளது. மேலும் கிழக்கிற்கும் மேற்குக்கும் இடையிலான வர்த்தகப் பாதையின் மத்தியில் இலங்கை அமைந்திருந்தமையால் இந்நாடு ஒரு மத்திய நிலையமாக விளங்க வாய்ப்புக் கிடைத்ததெனலாம். இதற்குச் சாதகமாக வட கீழ்ப்பருவக் காற்று, தென்மேற்கு பருவக்காற்று போன்றனவும், இயற்கையான துறைமுகங்களும், வளங்களும் காணப்பட்டன. இதன் பின்னணியில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து சர்வதேச வர்த்தகத்துடன் இணைந்த வகையில் வலைப்பின்னல் அமைப்பில் வர்த்தக நடவடிக்கைகளில் இலங்கை ஈடுபட்டிருந்தமை சிறப்புக்குரிய அம்சமாகும். இக்கால கட்டத்தில் இலங்கை அயல் நாடான இந்தியாவோடு மட்டுமன்றி கிரேக்கம், உரோம், அரேபியா, சீனா முதலிய நாடுகளுடனும் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்தமையை வெளிநாட்டு, உள்நாட்டுச் சான்றுகள் புலப்படுத்தி நிற்கின்றன.

வெளிநாட்டு வர்த்தகத்தில் துறைமுகங்களின் பங்கு முக்கியமானதாகும். பொதுவாகக் கப்பல் பயணமானது துறைமுகத்தில் ஆரம்பித்து பிறிதொரு துறைமுகத்தில் நிறைவடைவதாகும். பண்டைக் காலத்தில் கடல் கடந்த நாடுகளுக்கிடையிலான தொடர்புகளை பொறுத்தவரை பிற போக்குவரத்துச் சாதனங்கள் விருத்தியடையாத நிலையில் கடல்சார் போக்குவரத்துக்களே முனைப்படையத் தொடங்கியிருந்தன. இத்தகைய கடல்சார் போக்குவரத்துக்கள் துறைமுகங்களைப் பின்னணியாகக் கொண்டு நாடுகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்தியிருந்தன. கடல் சார்ந்த போக்குவரத்துக்களை அவதானிக்கும் போது அவை உலகக் கடல் மார்க்கங்களோடு அல்லது பிரதேசக் கடல் மார்க்கங்களோடு அல்லது கரையோர கடல் மார்க்கங்களோடு தொடர்புடையதாக அமைந்திருந்ததை காணலாம். அவை இலங்கைக்கும் குறிப்பாக வட இலங்கைத் துறை முகங்களுக்கும் பொருத்தமானவையாகும்.

அயல் நாடான இந்தியாவுடனான தொடர்புகள் கடல் வழியாக ஏற்படுவதற்கு முன் தரையமைப்பு ரீதியாக இரு நாடுகளும் ஒன்றாக இருந்தனவென்பதை தொல்லியல், புவியியல், கடல்சார் ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டினாலும், தரை வழித் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட போது கடல் வழித் தொடர்புகள் துறைமுகங்களினூடாக மும்மரமாக நடை பெற்றமைக்குச் சான்றுகள் கிடைக்கின்றன. இந்தியாவுடனான துறைமுகங்களை அடிப்படையாகக் கொண்ட தொடர்புகள் பொருளாதார ரீதியில் மட்டுமன்றி அரசியல், சமூக, பண்பாட்டுச் செல்வாக்குகளையும் ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய செல்வாக்குகள் இலங்கையின் வரலாற்றில் அவ்வப்போது தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தமையை கிடைக்கப் பெறும் சான்றுகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. பிற நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட பொருட்கள் தென்னிந்தியத் துறைமுகங்களுக்குக் கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து இலங்கையின் துறைமுகங்களுக்குக் பரிமாற்றப்பட்டமையையும் பண்டைக் கால வணிக வரலாறு எமக்குணர்த்தும்.







இலங்கைக்கும் பிற நாடுகளுக்கு இடையிலான தொடர்புகளில் இலங்கைத் துறைமுகங்களான மாந்தை, கோகர்ணம், ஜம்புக்கோளப்பட்டினம் போன்றன முக்கியமான பண்டைய துறைமுகங்களாகவும், பெயர் பெற்ற துறைமுகங்களாகவும் விளங்கியிருந்தன. சிறப்பாக வடமேற்கில் மாந்தைத் துறைமுகம், வடகிழக்கில் கோகர்ண துறைமுகம் முதலியன சர்வதேசத் துறைமுகங்களுடன் பெருமளவுக்குத் தொடர்பு கொண்டிருந்தன. மாந்தைத் துறைமுகம் இலங்கையின் ஆரம்ப கால வரலாற்றோடு இணைத்துப் பேசப்படும் பெருமையுடையதாகும். வர்த்தகத்துடன் மட்டுமின்றி அரசியற் படையெடுப்புக்கள், புலப்பெயர்ச்சி, பண்பாட்டுப் பரவல் போன்றவற்றுக்கும் அத்துறைமுகம் சாதகமானதாக விளங்கியதை நாம் காண்கின்றோம். அங்கு கிடைக்கப் பெற்ற தொல்லியற் சான்றுகளும், வெளிநாட்டார் குறிப்புக்களும் இலங்கையின் வரலாற்றில் மாந்தைத் துறைமுகம் பெற்றிருந்த முக்கியத்துவத்தினை அறியத் தருகின்றன.

இலங்கையில் யாழ்ப்பாணமே அதிகளவிலான துறைமுகங்களை கொண்டிருந்தெனலாம். இவற்றில் பண்டைய பிரதான துறைமுகங்களில் ஒன்றாக ஜம்புக்கோளப்பட்டினம் விளங்கியது. பட்டினம் என்பது பிரதான நகரை உணர்த்தும் பெயராக இன்றும் விளங்கி வருவதைக் காண்கிறோம். தமிழ் நாட்டில் நாகபட்டினம், காவிரிப்பூம் பட்டினம் போன்றன சிறந்த வர்த்தக மையங்களாக விளங்கின. அவற்றுக்கு மிக அண்மித்து எதிர்த் திசையில் காணப்பட்ட யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஜம்புக்கோளப்பட்டினமும் அத்தகைய பட்டினங்களைப் போல பெயர் பெற்றதாக இருந்திருக்கும் எனக் கருதலாம். மேலும் 14ஆம் நூற்றாண்டிற்குரிய அருணகிரிநாதரின் திருப்புகழிலும், 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் போத்துக்கேய ஒல்லாந்த ஆவணங்களிலும் யாழ்ப்பாணப் பட்டினம் குறிப்பிடப் படுகின்றது. பிரதான நகரையே பட்டினம் என்பது சுட்டி நிற்பதை இவற்றிலிருந்து அவதானிக்க முடிகின்றது. எனவே முற்பட்ட காலங்களில் அது ஒரு துறைமுகமாகவும் பட்டினமாகவும் விளங்கியதெனலாம். ஜம்புக்கோளப்பட்டினம் முக்கியமான ஒரு துறையாக விளங்கியதை மகாவம்சத்தின் மூலம் அறியலாகின்றது. சங்கமித்தையின் வரவுக்காக தேவநம்பிய தீசனால் பெருந்தெரு அமைக்கப்பட்டதாக மகாவம்சம் கூறுகின்றது. எனவே சங்கமித்தையின் வரவின் பின்னர் இத்துறைமுகத்தினூடான போக்குவரத்து அதிகரித்திருக்கும் என்பதில் ஐயமில்லை. குறிப்பாகக் கிழக்கிந்தியாவுக்குச் செல்லும் பிரதான துறையாக இத்துறைமுகம் இருந்ததென அறிஞர் குறிப்பிடுவர்.

வட இலங்கையில் பல்வேறு துறைமுகங்கள் பிற்பட்ட காலத்தில் புழக்கத்தில் இருந்த போதும் அவற்றிற் பல காலப்போக்கில் முக்கியத்துவம் இழந்து விட்டன. ஏனெனில்

கடல் மார்க்கங்கள் நிலையானவையல்ல. கரையோர அமைப்பு கடல் போக்குவரத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் பிரதான அம்சமெனலாம். இதனை விட நீரப்பரப்பு, பருவ நிலைகள், கால்வாய்கள், மூலப் பொருட்களின் முக்கியத்துவம் மற்றும் அவற்றின் இருப்பு, சர்வதேச நிலை, அரசியல், பொருளாதாரம், பண்பாடு தொழிநுட்பம் போன்ற பல்வேறு நிலைகளும் துறைமுகங்களின் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் பிரதான பங்கு வகிப்பதை இன்றும் காணலாம். இப்பின்னணியில் வட இலங்கையில் செல்வாக்குச் செலுத்திய துறைமுகங்கள் பிற்காலத்தில் முக்கியத்துவம் இழப்பதையும் பின்னர் அடையாளமின்றி வெறும் வரலாற்றுச் செய்தியாக மட்டுமே இருப்பதையும் அவதானிக்கலாம். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை கொழும்புத்துறை, நாவந்துறை, வல்வெட்டித்துறை, மயிலிட்டித்துறை, அராலித்துறை, பண்ணைத்துறை போன்றவை அத்தன்மை கொண்டவையாகும். இவைகளிற் பல இன்று மீன்பிடித் துறைகளாக மட்டுமே செயற்படுகின்றன. இன்னுஞ் சில இறங்கு துறைகளாகவே உள்ளன.

பண்டைய வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக மார்க்கத்தில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, கச்சாய், கொழும்புத்துறை ஆகிய துறைமுகங்களில் மும்முரமாக வணிக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. இத்துறைமுகங்கள் இலங்கையின் பிற துறைமுங்களோடு மட்டுமின்றி பிற நாடுகளின் துறைமுகங்களோடும் தொடர்புகளைக் கொண்டிருந்தன.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் ஊரவர்களே தஞ்சை, ஒரிசா, தொண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு முதலிய இடங்களுக்குச் சென்று பொருட்களை வாங்கிப் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு ஆகிய இடங்களில் இறக்குமதி செய்தனர். ஆனால் வறிய மக்களின் நன்மைக்காக மேற்படி துறைகளுக்குக் கொண்டு செல்வதை ஆட்சியாளர் தடை செய்து ஊர்காவற்றுறையிலேயே இறக்குமதி செய்ய வேண்டுமெனக் கட்டளையிட்டதாக அறியமுடிகின்றது. பனம் பொருட்கள் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை, மட்டக்களப்புக்கும் சோழ மண்டலக் கரைகளில் உள்ள ஊர்களுக்கும் தொண்டிக்கும் கொண்டு செல்லப்பட்டது. ஒல்லாந்தர் காலத்தில் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட துணிகள் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரப்பட்டு அங்கு சாயமிடப்பட்ட பின்னர் யாவா, பட்டேவியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இவ்வாறான வர்த்தகத்தில் யாழ்ப்பாணத் துறைமுகங்கள் முக்கிய பங்கு வகித்தன.

தீவுப் பகுதியிலுள்ள துறைமுகங்களில் ஒன்று ஊர்காவற்றுறை ஆகும். பண்டைய சான்றுகளில் ஊராத்துறை என்ற பெயரால் அழைக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள கல்வெட்டிலும் அறியப்பட்ட ஒரு பெயராக இது காணப்படுகின்றது. குறிப்பாக சோழர் இப்பிராந்தியத்தில் செல்வாக்குச் செலுத்தியமைக்கு இக் கல்வெட்டு மட்டுமன்றி நெடுந்தீவில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட சோழர் காலக் கோயில், நாரந்தனையில் கிடைத்த ராஜராஜனின் 38 செப்பு நாணயங்கள், யாழ்ப்பாணக் கோட்டையில் கிடைத்த ஊர்காவற்றுறைக் கல்வெட்டு முதலிய இன்னோரன்ன சான்றுகள் கிடைக்கப் பெறுகின்றன. முதலாம் பாரக்கிரமபாகுவின் நயினாதீவுக் கல்வெட்டிலிருந்து இத்துறையினூடாக நடைபெற்ற வர்த்தகம் குறித்து அறியமுடிகின்றது

போர்த்துக்கேயர் காலத்தில் தூத்துக்குடியும், மன்னாரும் முத்துக்குளிப்பு நடைபெறும் முக்கிய தளங்களாக விளங்கியிருந்தன. சிலாபம், குமரிமுனை, பாக்கு நீரிணை முதலியவற்றை உள்ளடக்கிய முக்கோணப் பகுதியைக் கட்டுப்படுத்த யாழ்ப்பாணத்தைப் பிரதான



தளமாக போர்த்துக்கேயர் கருதினர். மேலும் 16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் தென்னிந்தியாவிலிருந்து (கண்டி இராச்சியம் -போர்த்துக்கேய முரண்பாடுகளை அடுத்து) கண்டி இராச்சியத்தைக் கடப்பதற்கு இயற்கையான பரிமாற்ற மையமாக யாழ்ப்பாணம் விளங்கியது. இதனால் யாழ்ப்பாணத்தில் இருந்த துறைமுகங்கள் மேலும் செல்வாக்குப் பெறுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. இப்பின்னணியில் ஊர்காவற்றுறைத் துறைமுகம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. போர்த்துக்கேயர்கள் இக்காலத்தில் மேற்கு வலய அரசுகள், வன்னி அரசு போன்றவற்றில் கைப்பற்றிய யானைகளை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்து ஊர்காவற்றுறை ஊடாக வெளிநாட்டவர்களுக்கு விற்றமை குறிப்பிடத்தக்கது. அரசியல், நிர்வாக நோக்கத்திற்காக மட்டுமின்றிப் பொருளாதார நோக்கிலும் போத்துக்கேயரால் இப்பகுதியில் கோட்டை அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஒல்லாந்தர் காலத்தில் வர்த்தகம் டச்சு வர்த்தகக் கம்பனியின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. இக்காலத்தில் யாழ்ப்பாணம் முக்கியமான வர்த்தக நிலையமாக விளங்கியது. யாழ்ப்பாணத்தின் தொழில் விருத்தியினூடாகப் பல பொருளாதார மேம்பாட்டினை ஒல்லாந்தர் பெற்றுக் கொண்டனர். இதன் பின்னணியில் யாழ்ப்பாணத்தின் துறைமுகங்கள் மேலும் மேன்மை பெற்றன எனலாம். நெல் உற்பத்தி, புகையிலை உற்பத்தி, சாயவேர், பருத்தி, தென்னைச் செய்கை, தானிய உற்பத்தி என்பவற்றை விருத்தி செய்ததுமன்றி அவற்றைப் பிற நாடுகளுக்கும் கொண்டு சென்றனர். இதனால் யாழ்ப்பாணத்தின் சில துறைமுகங்களுக்குச் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது. காலி, மாத்தளை முதலிய இடங்களிலிருந்து யானைகளை மரக் கலங்கள் மூலம் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வந்து தென்னிந்திய வியாபாரிகளுக்கு விற்பர். மேலும் ஆட்களை வைத்துப் பிடிப்பித்த யானைகளும் வன்னியரசர்களிடமிருந்து திறையாகப் பெற்ற யானைகளும் கூட இந்திய வியாபாரிகளுக்கு விற்கப்பட்டது. யானை வியாபாரத்தில் யாழ்ப்பாணமே ஒல்லாந்தரின் முக்கிய தளமாகவிருந்தது. இக் காலத்திலும் ஊர்காவற்றுறை ஊடாக இலங்கையின் யானைகள் தென்னிந்தியாவுக்கும் வங்காளத்திற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டமை பற்றி 'போல்டேயஸ்' என்ற ஒல்லாந்தப் பாதிரியாரும், ஒல்லாந்த அதிகாரிகளும் குறிப்பிட்டுள்ளனர்.


இவ்வாறு ஊர்காவற்றுறை முக்கியத்துவம் பெறுவதற்கு அது பாதுகாப்பான நிலையமாக இருந்தமையும், கப்பற் போக்குவரத்திற்கு ஏற்றதான ஆழத்தைக் கொண்டிருந்தமையும் பிரதான காரணமாகக் கூறப்படுகின்றது.

தீவுப் பகுதிகளில் வேறும் பல துறைமுகங்கள் காணப்பட்டன. பெரியதுறை (நெடுந்தீவு, புங்குடுதீவு), குறிகட்டுவான், கழுதைப்பிட்டி, புளியடித் துறை (புங்குடுதீவு), கப்பலடி, சாட்டி, பண்ணைத்துறை (வேலணை), மாவிலித்துறை (நெடுந்தீவு), நயினாதீவுத் துறைமுகம், காரைநகர் களபூமியிலுள்ள துறைமுகம் (யானைப்பாலம்), அனலைதீவு, எழுவைதீவு, மண்டைதீவுத் துறைமுகங்கள் முதலியன குறிப்பிடத்தக்கன. இத்துறைமுகங்களினூடாகவும் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம் ஒல்லாந்தர் காலத்துக்கு முன்னரும் நடைபெற்றதாக 'பேராசிரியர் சிவசாமி' குறிப்பிடுகின்றார். கி.பி. 10ஆம் நூற்றாண்டில் பாரசீகத்தின் அரசன் 'டோபாக்' என்பவன் அனுப்பிய படை கலா என்ற துறையில் வந்திறங்கியதாக கூறப்படுகின்றது. கலா என்பது இன்றைய களபூமி எனக் கருதப்படுகின்றது. சீனர்களின் தொடர்பைப் புலப்படுத்தும் வகையில் வேலணையின் மேற்குக் கரையில் சீனக் குடியிருப்பு இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. நயினாதீவுத் துறைமுகத்திற்கு அண்மையில் 'பப்பிரவன்சல்லி' என்னும் இடத்தில் 12ஆம் நூற்றாண்டிற்குரிய சீனச் சாடி கிடைத்துள்ளது. அல்லைப்பிட்டி, கந்தரோடை, வல்லிபுரம், மாந்தை முதலிய இடங்களிலும் சீனச் சான்றுகள் கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண நகரை அண்மித்துக் காணப்பட்ட துறைமுகமாக அலுப்பாந்தித்துறை முக்கியத்துவம் பெறுகின்றது. போர்த்துக்கேயர் காலத்திற்கு முன்பு நாவாந்துறையிலிருந்து பொருட்கள் ஏற்றியிறக்கப்பட்டதாகவும், போர்த்துக்கேயர் காலத்திலிருந்து அலுப்பாந்தித்துறையில் அப்பணி மேற்கொள்ளப்பட்டதாகவும் அறிய முடிகின்றது. சில ஆய்வுகள் சோழர் மற்றும் யாழ்ப்பாண அரசர் காலத்தில் இது புராதன வர்த்தகத் துறையாக விளங்கியதாகக் குறிப்பிடுகின்றன. யாழ்ப்பாணத்துறை என அழைக்கப்பட்ட அலுப்பாந்தித்துறையின் வர்த்தக முக்கியத்துவம் யாழ்ப்பாணக் கோட்டையின் தோற்றத்திற்கு ஒரு காரணமாகக் இருந்ததெனக் கூறலாம். யாழ்ப்பாணம் போர்த்துக்கேயர் காலத்திற்கு முன்னரே முக்கியத்துவம் பெற்றதாக விளங்கியதை அண்மைக் காலத்தில் கோட்டையில் மேற்கொள்ளப்பட்டு வரும்











அகழ்வாய்விற் கிடைத்த சான்றுகள் எடுத்துக் காட்டுவதாகப் பேராசிரியர் புஸ்பரட்ணம் குறிப்பிடுகின்றார். உரோம, சீன, சோழ வர்த்தகம் இப்பகுதியில் நடைபெற்றதற்குரிய மட்பாண்ட, நாணயச் சான்றுகளை இவர் வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் கோட்டைக்கு வடக்குப் புறமாகவுள்ள இடமொன்று தற்காலத்திலும் 'ஐந்நூற்றுவன் வளவு' என அழைக்கப்பட்டு வருகின்றது. இது சோழர் காலத்து வணிக கணத்தின் பெயராகும். எனவே சோழருக்கு முற்பட்ட காலத்திலும், பிற்பட்ட காலத்திலும் வணிக நடவடிக்கைகளின் பிரதான மையமாக யாழ்ப்பாண நகரும் அதனையண்டிக் காணப்பட்ட துறைமுகங்களும் இருந்தனவெனில் மிகையில்லை.

பண்டைக்காலந் தொட்டு இன்றுவரை சிறப்புப் பெறும் துறைமுகமாக காங்கேசன்துறைத் துறைமுகம் விளங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. காங்கேசன்துறை என்பதன் பெயர் காரணம் பற்றி 'யாழ்ப்பாண வைபவமாலை' என்ற நூல் குறிப்பிடும் போது, கீரிமலைச் சிவன் கோயிலுக்குரிய பொருட்களும், முருகன் உள்ளிட்ட விக்கிரகங்களும் இத்துறைமுகத்தினூடாகக் கொண்டு வரப்பட்டமையால் காங்கேசன் என்ற பெயரைப் பெற்றதாகக் குறிப்பிடுகின்றது. ஆரியச் சக்கரவர்த்திகள் வெளிநாட்டு வர்த்தகத்திற்கு ஏற்ற வகையில் இத்துறைமுகத்தைப் பேணினர். இதுவே காசாத்துறை, காயாத்துறை என அழைக்கப்பட்டதாக மயில்வாகனப் புலவர் கருதுகின்றார். பேராசிரியர் பத்மநாதன் காங்கேசன்துறை என்பது ஆரியச் சக்கரவர்த்திகளின் பெயரால் குறிப்பிடப்பட்டதாக கூறுகின்றார். சிலர் கச்சாய்த்துறையே காசாத்துறை எனப்பட்டதாக எடுத்துக் கூறுவர். எவ்வாறாயினும் இவ்விரு துறைகளும் 13,14 ஆம் நூற்றாண்டுகளில் வர்த்தக, அரசியல் , பண்பாட்டுத் துறைகளில் பெரும்பங்காற்றியுள்ளன.

குலோத்துங்க சோழனின் படைத் தளபதியாகிய கருணாகரத் தொண்டைமான் வட பகுதிக்குப் படையெடுத்து வந்து வெள்ளைப் பரவை முதலான இடங்களிலிருந்து கிடைத்த உப்பைத் தென்னிந்தியாவுக்குக் கொண்டு செல்லுவதற்கேற்ற வகையில் தொண்டைமானாற்றை வெட்டுவித்தான் என்ற செய்தியிலிருந்து அப்பகுதியும் தென்னிந்திய வட இலங்கை மரக் கலங்களின் போக்குவரத்துக்குப் பங்களித்ததெனலாம். நல்லூர் இராசதானி காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த பிறிதொரு துறைமுகமாக கொழும்புத்துறையும் விளங்கியது. நல்லூர் இராசதானியை அண்மித்துக் காணப்பட்ட இத்துறை யாழ்ப்பாண - வன்னிப் போக்குவரத்திற்கும், யாழ்ப்பாண - கொழும்புப் போக்குவரத்திற்கும் சாதகமாக விளங்கியது. அதிகமான வர்த்தகப் படகுகள் இங்கு நடமாடின. சுங்க வரி பெறுமிடமாகவும் கொழும்புத்துறை விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

வல்வெட்டித் துறைமுகத்தில் ஆழங்குறைந்த


துறைமுகங்களுடன் வர்த்தகம் செய்யும் சிறிய ரகக் கப்பல்கள் மட்டுமன்றிப் பெரிய கப்பல்களும் நடமாடின. இத்துறைமுகமும் ஊர்காவற்றுறைத் துறைமுகமும் கப்பல் கட்டும் தொழிலின் பொருட்டும் முக்கியத்துவம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இத்துறையினூடாகவும் யானைகள் இந்தியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டது. அதுமட்டுமன்றிச் சீர்காழி, சிதம்பரம், வேதாரணியம் போன்ற இடங்களிலிருந்து ஆடு, மாடுகள் கொண்டு வரப்பட்டதாகவும், அத்துறைமுகத்திலிருந்து சங்கு, சுருட்டு, பாக்கு, கறுவா, கருவாடு, உப்பு, மீன் போன்றவற்றைக் கொண்டு சென்றதாகவும் கூறப்படுகின்றது. சிறப்பாக இந்தியாவின் அதிராம் பட்டனத்திலிருந்து மாடுகளும், மங்கலபுரத்திலிருந்து ஓடுகளும், பர்மா, ரங்கூன் ஆகிய நாடுகளிலிருந்து அரிசி, நெல், தேக்கு முதலியனவும், இந்தியாவிலிருந்து சட்டி, பானை, ஆட்டுக்கல், செங்கல் போன்றனவும் எடுத்து வரப்பட்டன. இத்துறையில் வேறெந்தத் துறைமுகத்திலும் இல்லாதவாறு அதிகளவிலான பாய் மரக் கப்பல்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தன.


பருத்தித்துறையைப் போர்த்துக்கேயர் Puntas das Padras அல்லது Rocky Point என அழைத்தனர். ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பருத்தி உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. பருத்தியோடை, பருத்தியடைப்பு போன்ற இடங்கள் யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றன. எனவே பருத்தித் துறையையும் பருத்தியோடு தொடர்பு படுத்த முடிகின்றது. பருத்தித்துறையிலுள்ள கொட்டடி என்பது கொட்டையடி என்ற பெயரின் மருவிய வடிவமெனக் கொண்டால் அதனைப் பருத்திக் கொட்டையோடு தொடர்பு படுத்தலாம். மேலும் துறைமுகத்திற்கு அருகில் ஓடக்கரை என்ற இடமும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. பருத்தித் துணியோ அன்றில் நூலோ இத்துறை முகத்தினூடான ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகித்ததெனலாம்.

இவற்றைத் தவிர பூநகரியிலிருந்த மட்டுவில் நாடு (மட்டிவாழ்), புலையர் குடா (புலச்சேரி) ஆகியனவும் இயற்கையான துறைமுகங்களாக இருந்துள்ளன. சோழர் கால இந்திய இலங்கை வர்த்தகத் தொடர்புகள் இவற்றினூடாக நடைபெற்றிருந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. புலையர் குடாவில் துறைமுக அழிபாடுகள், குறிப்பாக பொளிந்த முருகைக் கற்கள் கொண்ட இறங்குதுறை மேடைகளின் அழிபாடுகள் காணப்படுவதை பூநகரி தொல்பொருளாய்வு என்னும் நூல் எடுத்துக் காட்டுகின்றது.

வட இலங்கையைப் பொறுத்தவரை காலத்துக்குக் காலம் பல்வேறு துறைமுகங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்ததைக் காணலாம். குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தின் மூன்று கரையோரங்களிலும் அமைந்திருந்த துறைமுகங்கள் மற்றும் இறங்குதுறைகள் வர்த்தக, பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பரிமாறிக் கொள்ளும் வாயில்களான விளங்கியிருந்தன எனலாம். வெவ்வேறுபட்ட அரசுகளின் காலத்தில் கிடைத்த பொருட்களைப் பொறுத்தும், சில சமயங்களில் ஏற்பட்ட தேவை பொறுத்தும் இவை முன்னிலைப் படுத்தப்பட்டன. காற்றுக்களும், வெள்ளப் பெருக்கும், அலைகளின் உயர்வும், துறைமுகப் பகுதிகளின் ஆழமும், கடல் வற்றுக்களும், நீரோட்டங்களும் துறைமுகங்களின் முக்கியத்துவத்தில் செல்வாக்குச் செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. பிற நாட்டுச் செல்வாக்கு ஏற்பட்டதை தெளிவாகக் காட்டுகின்ற சான்றுகள் அச்செல்வாக்கு எத்தகைய வழிகளில் குறிப்பாக எத்துறைமுகங்களினூடாக ஏற்பட்டதென்பதைக் கூறாதிருப்பது கவனத்துக்குரியதாகும். இருப்பினும் இத்துறைமுகங்கள் பொருளாதாரத்தின் பிரதான அடிப்படையாக இருந்ததோடு படையெடுப்புக்களின் தளங்களாக, பண்பாட்டுப் பரவலின் ஊடகங்களாக, குடியிருப்பு நகர்களாக எழுச்சி பெற்று வட இலங்கையின் வரலாற்று வளர்ச்சிக்குத் துணை நின்றதனை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

**சாந்தினி அருளானந்தம்,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.






# மரணத்தின் பின்னர்: பழைமையில் பெருமை பேசும் சமாதிகள்

நைல் நதி உண்மையிலேயே நீலமானதுடன் நீளமானதும் கூட! நைல் நதி எகிப்து நாகரீகத்தோடு இணைபிரியாத் தொடர்பு கொண்டு, மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளது. பாலைவனத்தைப் ஊடறுத்துக்கொண்டு ஓடும் நதி நைல், அதன் இரு மருங்கிலும் ஒரு கிலோ மீட்டர் அளவிற்குப் பசுமை பரவியிருக்கிறது. அப்பால் பாலைவனம்.

கெய்ரோவிலிருந்து தெற்கே சுமார் 500 கி.மீ. தூரத்தில் நைல் நதியின் கரையில் அமைந்துள்ள லக்சோர் நகரில் இருந்து 2.5 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது 'கார்நாக்' என்னும் சிறிய ஊர். 'கடுகு சிறிது காரம் பெரிது' என்பது போல் ஊர் சிறிதாக இருந்தாலும் இதன் வரலாற்றுப் பெருமையும் உல்லாசப் பயணிகளின் வருகையும் மிகப் பெரியது. மிகப் பழைமையான எகிப்தியக் கோவில்கள் இங்கு அமைந்துள்ளதே இவ்வூர் முக்கியத்துவம் பெறக் காரணமாகும். இன்றும் உலகத்திலேயே மிகப் பெரிய கோவில் வளாகமாக விளங்குவது இந்த கார்நாக் தான். இதை சாதாரண இடம் என்று யாரும் சொல்லிவிட முடியாது. இந்தக் கோவிலின் அழகெல்லாம் இடிபாடுகளுக்கிடையில் மறைந்து கிடக்கிறது. கற்பனை சிறகுகளால் உயரப் பறந்துதான் ரசிக்க முடியும்.


கார்நாக் வளாகத்திலுள்ள கோவில்களின் மிக நீண்ட கால வளர்ச்சியும், பயன்பாடும் அதனை எகிப்தில் உள்ள ஏனைய தொல்லியல் மற்றும் கோவில் களங்களிலிருந்து வேறுபடுத்துகின்றது. இப் பகுதியின் கட்டுமானப் பணிகள் கி.மு 16ஆம் நூற்றாண்டில் தொடங்கியதாகக் கணிக்கப்பட்டுள்ளதுடன் சுமார் 30 பாரோக்கள் இங்கே கட்டிடங்களைக் கட்டியுள்ளார்கள். இதனால் இக்கட்டிடத் தொகுதி, வேறு எங்கும் காணப்படாத வகையில் பாரிய அளவு கொண்டதாகவும், சிக்கலானதாகவும், பல்வகை தன்மை கொண்டதாகவும் காணப்படுகின்றது.




## யார் இந்த பாரோக்கள்?

பாரோக்கள் என்று அழைக்கப்பட்ட எகிப்திய அரசர்கள் ஹோரஸின் (எகிப்தின் கடவுள்கள்) மறு வடிவமாகக் கருதப்பட்டனர். ஹோரஸ் வானுலகை ஆள்வதுபோலவே, இந்த பாரோக்கள் எகிப்தை ஆண்டனர். இவர்கள் இறந்த பிறகு ஒசிரிஸாக மாறி வாழ்வு வட்டத்தை முழுமையாக்க வேண்டும். ஆனால் இறந்த பாரோவின் உடலில் 'கா' எனப்படும் ஆத்மாவின் எச்சம் மிஞ்சிவிடுகிறது. இது இறந்தோர் உலகிற்குச் செல்லச் சரியான வழி கிடைக்காவிட்டால், பாரோக்கள் ஒசிரிஸாக முடியாது. வாழ்க்கை வட்டம் முழுமை பெறாது. எகிப்து பேரழிவிற்கு உள்ளாகிவிடும். எனவே வாழ்வில் அவனுக்குக் கிடைத்தவை அனைத்தும் அவன் மறு உலகிற்குச் செல்லும்வரை கிடைக்கும்படியாக அவனது கல்லறை விலையுயர்ந்த பொருட்களாலும் உணவு வகைகளாலும் நிரப்பப்பட்டது. கல்லறையை மறைக்க, அதன் செல்வங்களைத் திருடர்களிடமிருந்து காப்பாற்றுவதற்காகவே இவ்வாறு

**உலகில் மிகப்பெரிய கோவில் வளாகமாகிய கார்நாக் 3000 ஆண்டு கால பழைமையின் பெருமை பேசுகின்றது**





புதைகுழி ஆலயங்களும், பிரமிட்டுகளும் கட்டப்பட்டன. கல்லறையைச் சிதைத்து அதன் உள்ளிருக்கும் பொருட்களைத் திருட முயல்பவர்கள் பெறவிருக்கும் சாபங்களும் அவர்களுக்குக் காத்திருக்கும் தண்டனைகளும் கல்லறைச் சுவர்களில் மிக விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன. கல்லறை கட்டி முடிந்தவுடன் அது இருக்கும் இடத்தை ரகசியமாக வைக்கப் பல உத்திகளைக் கல்லறையைக் கட்டியவர்கள் கையாண்டிருக்கிறார்கள்.


உலகப் பண்பாட்டுப் புரட்சியில் முதல் நாகரீக மனிதர்களாக கருதப்பட்ட எகிப்தியர்களிடமும் ஏராளமான மூடப் பழக்க வழக்கங்கள் இருந்தன. தங்களை ஆண்ட மன்னர்களை கடவுள்களுக்கு நிகராக அவர்கள் கருதினர். மன்னர்களை பரோக்கள் என்று சொல்வது அவர்களது வழக்கமாயிருந்தது.

பரோக்கள் என்றால் பெரிய மாளிகை என்று பொருள். பெரிய மாளிகையில் மன்னன் வசிப்பதால் நாளடைவில் மன்னருக்கும் பரோக்கள் என்ற பெயர் வந்துவிட்டது.

மத குருமார்கள், பரோக்களை கடவுளின் மூலமாக பிறந்தவர்கள் என்றே மக்களை நம்ப வைத்தனர். பரோக்கள் பெரும்பாலும் தங்கள் உடன் பிறந்த சகோதரிகளையே மணக்க வேண்டும். சகோதரிகள் இல்லாத பரோக்கள் வெளிப் பெண்களை மணந்துக் கொள்வார்கள். தங்களுடைய சுகபோக வாழ்க்கையை நோக்காக கொண்டு குருமார்களின் மூலமாக மக்களிடம் பல தவறான கருத்துக்களைப் பரப்பி மன்னர்களை தேவர்களாகப் பாவிக்க பல விதங்களிலும் பல யுத்திகளை கண்டனர்.

மன்னரின் ஆசையை பூர்த்தி செய்வதற்கென்றே பூமியில் படைக்கப்பட்டிருக்கின்றோம் என்ற சிந்தனையே, ஒவ்வொரு எகிப்தியனுக்குள்ளும் விதைக்கப்பட்டிருந்தது. ஆங்காங்கே சில எதிர்ப்புக் குரல்கள் கிளம்பினால் அவர்களை நைல் நதியின் முதலைகளுக்கு இரையாகப் போடப்பட்டனர்.

உலக உற்பத்தி பற்றியும் மனிதர்களின் மறுமை வாழ்வு பற்றியும் கிரேக்கர்கள் சிந்திக்க ஆரம்பித்து ஜோதிடம், வைத்தியம், மாந்திரீகம் போன்றவைகளில் பல உண்மைகளை கண்டறிந்தார்கள். கிரேக்கம் போலவே எகிப்தும் உரோம சாம்ராஜ்ஜியத்தில் ஒரு பகுதியாக இருந்ததினால் கிரேக்கர்களின் மத சிந்தனையின் தாக்கம் எகிப்திலும் இருந்தது. ஆயினும் கிரேக்கர்கள், ரோமர்கள் இவர்களை விட ஆதி கால எகிப்து மக்கள் மகாபுத்திசாலிகள், திறமை மிகுந்தவர்கள். அவர்களின் திறமைக்கு மருத்துவ அறிவுக்கு எடுத்துகாட்டாக பல ஆயிரம் வருடங்கள் ஆனாலும் இறந்துபோன மனித உடல்களை கெட்டுபோகாமல் பாதுகாக்கும் வைத்திய முறையாக மம்மி முறையைச் சொல்லலாம். உடல்களை பாதுகாப்பாக வைப்பதற்கு அவர்கள் கண்டுபிடித்த விஞ்ஞான முறைக்கு அவர்களின் சமய சிந்தனையே மூல காரணம் ஆகும். இவர்களிடத்தில் இன்னொரு ஆச்சரியமான விஷயம் இருந்தது. கட்டிடக்கலையில் நிபுணத்துவம் மிக்க எகிப்தியர்கள் தங்களது



வழிபாட்டு இடங்களை தனித்துவமாகவும் தொகுதி தொகுதியாகவும் பிரமாண்டமானதாவும் அமைத்துள்ளார்கள். எகிப்தில் இத்தகைய கட்டிடங்கள், பிரமாண்ட ஆலயங்கள் கட்டப்பட்ட காலத்தில் இரும்பு கண்டு பிடிக்கப்பட்டிருக்கவில்லை என்பது முக்கியமாக விடயம். அவர்கள் உபயோகித்தது செப்பு உளிகளைத்தான். நூறு தட்டுத் தட்டும் போதே அவை வளைந்துவிடும்.

## கோவிலின் உள்ளே என்ன இருக்கின்றது?

கார்நாக் கோவில் வளாகம் உண்மையில் ஒரு பாரிய திறந்தவெளி அருங்காட்சியகம் என்பதுடன், உலகின் மிகப் பெரிய பண்டைய சமயம் சார்ந்த இடமாகவும் திகழ்கின்றது. இது நான்கு பகுதிகளைக் கொண்டது. இவற்றில் ஒன்றாகிய அமொன்ரே வளாகம் (கதிரவன் கோவில்) மட்டுமே சுற்றுலாப் பயணிகளும், பொது மக்களும் பார்வையிடுவதற்காக அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுவே முக்கியமான கோவில் பகுதியும், பெரியதும், பண்டைய எகிப்தியப் பண்பாட்டுக்கு உரிய கட்டிடங்களைக் கொண்டதுமாகும். இக்கோவில் பண்டைய எகிப்தியர்களின் கடவுளான அமொனுக்காக அமைக்கப்பட்டுள்ளது.

கார்நாக் கோவில் வளாகத்தில் உள்ளடங்கியுள்ள நான்கு முக்கிய பகுதிகளையும் சூழவுள்ள மதிலுக்கு வெளியேயும் சில சிறிய கோவில்களும், ஸ்ஹக்பிங்ஸ் எனப்படும் உருவங்களின் வரிசைகளைக் கொண்ட பாதைகளும் காணப்படுகின்றன. இப்பாதைகள், மட் வளாகம், அமொன் ரே வளாகம், லக்சோர் கோவில் என்பவற்றை இணைக்கின்றன.

கார்நாக் கோவில் வளாகம் 250,000 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டது. இதன் பல பகுதிகளில், அகழ்வாய்வும், மீளமைப்பும் நடைபெற்று வருவதால் அப்பகுதிகளுக்குள் பொதுமக்கள் அனுமதிக்கப்படுவது இல்லை. இதன் வட மேற்குப் பகுதியில் ஒரு அருங்காட்சியகமும் உள்ளது.

கார்நாக் கோவில் வளாகத்தின் நுழைவிலேயே வரிசையாய் மேஷ வாகன சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோவில் நுழைவாயிலில் 20 மீட்டர் உயரமுள்ள நான்கு பிரமாண்டமான இரண்டாம் ராம்ஸஸின் சிலைகள். சிலைகளின் காலைச் சுற்றி அரசனின் மனைவியர், மகன்மாரின் சிலைகள் காணப்படுகின்றன. ரமஸஸுக்கு நூறுக்கும் மேற்பட்ட மகன்மார்கள் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. கோவிலுக்கு உள்ளே அவன் போர் புரிந்த யுத்தத்தின் சிற்பங்கள். இவன் காலத்தில் சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. குதிரைகள் பூட்டிய தேரில் ஏறி அவன் சண்டையிடுவது சுவர்களில் செதுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து பொது மக்களுக்கான மண்டபத்தை அடையமுடியும். இந்த மண்டபத்துக்கு அடுத்து பரோக்களும் பூசாரிகளும் மட்டும் தான் மேலே போக முடியும். ஆனால் இப்போழுது நுழைவுச் சீட்டு பெற்றுக் கொண்டு அனுமதிக்கப்பட்ட இடங்களுக்கு எங்கு



வேண்டுமானாலும் சென்று வரலாம். இரண்டாம் மதிலுக்கு அடுத்து இமலாய தூண்கள் வழியின் இரு புறங்களிலும் அணி வகுத்திருப்பதைக் காணலாம். தூண்களில் பல, 65 அடிக்கும் மேல் உயரம் கொண்டவை. இவற்றின் விட்டம் 10 அடிக்கும் மேல். தூண்கள் கட்டப்பட்ட காலம் 3500 ஆண்டுகளுக்கும் முன்னராகும். இந்தத் தூண்கள் மீது இருந்த கூரையின் கீழ்ப் பரப்பில் பல சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன.

இரண்டு மிக பெரிய ஒப்பிலிஸ்குகள் மூன்றாம் மதிலுக்கு அடுத்து உயர்ந்து நிற்கின்றன. கோவிலின் சுவர்களில் மன்னர்கள் எதிரிகளை கொன்று குவிக்கும் வீர தீர போர் காட்சிகள் தான் சுவர் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. பண்டைய மன்னர் காலத்தில் நடைபெற்ற பிரம்மாண்ட திருவிழா காட்சிகளை தூண்களும் சுவர்களும் இன்றும் அசை போட்டுக் கொண்டிருக்கிறன.


உட்தூண்களில் மிகப் பெரிய ராம்ஸஸின் எட்டு சிலைகள் உள்ளன. அவன் இறந்த பின் ஓஸிரிஸாக மாறி, கைகளைக் கட்டிக்கொண்டு நிற்கிறான். (எகிப்தியச் சிற்பக்கலையில் கைகட்டிக் கொண்டு நிற்பவர்கள் இறந்தவர்களைக் குறிப்பவர்கள். கைகளை முழங்கால்களின் மீது வைத்து உட்கார்ந்திருப்பவர்கள் அல்லது கைகள் தொடைகளைத் தொட்ட வண்ணம் நிற்பவர்கள் வாழ்ந்து கொண்டிருப்பவர்களைக் குறிப்பவர்கள்).

அமொன் கோவிலின் பின் சுவரில் எகிப்தியக் கடவுளர் மூவர். நான்காவதாக அரசனின் சிலை. வருடத்தில் ஒரு குறிப்பிட்ட தினத்தில் மட்டும் சூரியனின் ஒளி 61 மீட்டர் நீளமுள்ள கோவிலின் உள் வந்து பின் சுவரில் விழுகிறது. நான்கு சிலைகளில் மூன்றின் மீது அதன் வெளிச்சம்படுகிறது. நான்காவது இருட்டின் தலைவன். இவன் மீது சூரிய ஒளிபடுவதில்லை. ராம்ஸஸ் தன்னையே கடவுளாக ஆக்கிக்கொள்ள விருப்பப்பட்டதன் விளைவு அவன் பெயரில் இருக்கும் கோவில். அவன் மனைவிக்கு (நெப்ரடரி) அவனுக்குப் பக்கத்தில் ஒரு கோவில் இருக்கிறது. அரசியின் கோவில் சிறியது. ஆனால் மிக அழகானது. சாதாரணமாக அரசிகளின் உருவம் பாரோக்களின் முழங்கால் அளவிற்குத்தான் செதுக்கப்படும். இந்தக் கோவிலில் அரசி அரசனளவிற்கு உயர்ந்து நிற்கிறாள்.

**நாசர் ஏரியும் அஸ்வான் அணையும்**

இன்று நைல் நதியின் மேற்குக் கரையில் நின்று கொண்டு நாசர் ஏரியைப் பார்த்துக் கொண்டிருக்கும் இந்த இரு கோவில்களும் தண்ணீருக்குள் மறைந்து போகாமல் காப்பாற்றப்பட்டது உலக அதிசயங்களில் ஒன்று. எகிப்தியர்களின் நாகரிகம் உலகத்திலேயே மிகப் புராதனமானது என்பதில் அவர்களுக்கு மிகுந்த

பெருமை. இந்த மிகப் புராதனமான இடத்தில் மிகப் பெரிய அணை ஒன்று கட்டப்பட்டது. அஸ்வான் உயர் அணை என்று அழைக்கப்படும் இது, நாசர் காலத்தில், சோவியத் உதவியுடன் தொடங்கப்பட்டு, அவர் மறைவிற்குப் பின் முடிக்கப்பட்டது. இந்த அணையின் பின்னால் இருக்கும் நாசர் ஏரி மனித குலம் அமைத்த ஏரிகளிலேயே மிகப் பெரிய ஏரி. 5000 சதுர கிலோ மீட்டருக்கும் மேல் பரப்பளவு கொண்ட அதன் நீளம் 550 கிலோ மீட்டர், மிக அகலமான பகுதியில் அதன் அகலம் 35 கிலோமீட்டர். அஸ்வான் அணையைக் கட்டும்போது பல புராதனக் கோவில்கள் நீரில் மூழ்கும் அபாயம் இருந்தது. யுனெஸ்கோ உதவியுடன் பல கோவில்கள் பிரிக்கப்பட்டு உயரத்தில் மறு சீரமைக்கப்பட்டன. இப்படிச் சீரமைக்கப்பட்ட கோவில்களில் புகழ்பெற்றவை அபு சிம்பல் கோவில்கள்.




## இரண்டாம் ரமஸஸ் மன்னன்


இரண்டாம் ரமஸஸ் எகிப்தை ஆண்ட மன்னர்களிலேயே மிகச் சிறந்தவராகக் கருதப்படுபவர். அவரது ஆட்சி 67 ஆண்டுகள் நீடித்தன. 95 வயதிற்கும் மேல் வாழ்ந்த இம் மன்னன், 19 ஆவது வம்சத்தின் முன்றாவது எகிப்திய மன்னராவார். எகிப்தை ஆட்சி செய்த அரசர்களிலேயே சிறந்த மற்றும் வலிமை வாய்ந்த அரசராக போற்றப்படுபவர் இரண்டாம் ரமஸஸ். இவர் பிறந்த ஆண்டு கி.மு. 1305. இவர் தனது 14ஆவது வயதில் இளவரசராகவும், 20 ஆவது வயதில் எகிப்து நாட்டின் அரியணையேறி, கி. மு. 1279 முதல் கி. மு 1212 முடிய மொத்தம் 67 ஆண்டுகள் இரண்டு மாதங்கள் மன்னராக ஆட்சி புரிந்தார். தனது ஆட்சிக் காலத்தில் மொத்தம் 14 செத் விழாக்களை கொண்டாடிய பெருமை இவருக்கு உண்டு. மற்ற எகிப்திய மன்னர்களோடு ஒப்பிடும் பொழுது இது ஒரு சாதனையாகும்.

இரண்டாம் ரமஸஸ் ஆட்சிக்காலத்தில் கார்நாக் கோவிலின் முக்கிய பகுதிகள் எழுப்பப்பட்டன; மற்றும் செம்மைப் படுத்தப்பட்டன.



பண்டைய கால சரித்திரத்தை புரட்டிப் பார்த்தோமானால் அதில் கிரேக்கர்கள் மற்றும் ரோமர்களின் வரலாற்று நிகழ்வுகள் பெரும் பகுதியாக நிறைந்திருப்பதைக் காணலாம். அதற்கு காரணம் அந்த மக்கள் வரலாற்று நிகழ்வுகளையும் மற்றும் பல முக்கிய நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு முறையோடு குறித்து வைத்திருப்பதே எனலாம். ஒவ்வொரு மன்னருக்கும் தங்களுக்கு உரிய சமாதியை முன் கூட்டியே கட்டி அதை தரமுள்ளதாக்குவதிலும் சமயப் பற்றை தீவிரமாக மக்களிடம் பரப்புவதிலும் அதிக கவனம் சொலுத்தினர். அதனால் எகிப்திய மக்களிடம் சமயப் பற்று மிகுந்திருந்தது. முதலை, கொக்கு, குரங்கு, சிங்கம், காளை, செம்மறி ஆடு, ஓநாய், பூனை, கழுகு, வல்லூறு, நல்ல பாம்பு, நீர் யானை, வெட்டுக்கிளி இன்னும் பல மிருகங்களையும் இவர்கள் கடவுளாக வணங்கினர். இவற்றினூடாகவும் அவர்கள் தமது வரலாற்றுப் பதிவுகளைக் காலம்காலமாக பாதுகாத்து வந்தார்கள்.

- அமலகுமார்



# ஈழத்தில் பௌத்தத்திற்கு முற்பட்ட திராவிடச் சான்றுகள்

முப்பது நூற்றாண்டுகளுக்கு மேல் தமிழர்கள் இத்தீவில் வாழ்ந்துள்ளனர். இதனை பல்வேறு வரலாற்று ஆதாரங்கள் உறுதி செய்கின்றன. ஆதித்திராவிடர் எனப்படும் தமிழினம் இத்தீவில் எல்லா இடங்களிலும் வாழ்ந்துள்ளனர். இவர்கள் வழி வந்தவர்களே இயக்கர், நாகர், வேடர் என்போராவர். இதனை இலக்கிய, தொல்பொருளியல், கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. கிழக்குக் கரையோர தமிழ்ப் பிரதேசங்களின் வடக்கு எல்லையாக மகாவலி கங்கையும், தெற்கு எல்லையாக குமுக்கன் ஆறும், வடக்குப் பிரதேச எல்லைகளாக மேற்கே தெதுறு ஓயாவும், கிழக்கே கொக்கிளாயும் அமைந்திருந்தன. வட பகுதி முழுவதும் தமிழ் மக்கள் வாழ்ந்துள்ளனர். இதனைப் பல்வேறு ஆதாரங்கள் தெளிவாகத் தருகின்றன.[1]

**விஜயன் வருமுன்னர் ஈழத்தில் காணப்பட்ட சிவ ஆலயங்கள்.**

சிங்கள இனத்தின் முன்னோடி எனப்படும் விஜயன் (கி.மு 543) இத்தீவில் காலடி வைத்தபோது தீவின் நிலப்பரப்பு முழுவதும் தமிழர்கள் வாழ்ந்துள்ளனர். கரையோரப் பிரதேசங்கள் முழுவதும் சிவாலயங்கள் இருந்துள்ளன. அவை வடக்கே நகுலேஸ்வரம், மேற்கே முனீஸ்வரம், திருக்கேதீஸ்வரம், கிழக்கே கோணேஸ்வரம், மாமாங்கேஸ்வரம், தான்தோன்றீஸ்வரம், தெற்கே தொண்டீஸ்வரம் எனப்படும் சந்திரேஸ்வரம் என்பனவாகும்.[2] இவை தவிர சபர்கம எனப்பட்ட கதிர்காமத்திலே வேல் வழிபாடு, திருக்கோயிலிலே வேல் வழிபாடு போன்ற முருக வழிபாட்டுத் தலங்களும் பல காணப்பட்டன. இங்கெல்லாம் தமிழர்கள் செறிந்து வாழ்ந்துள்ளனர். ஆகவே, ஈழத்தில் பௌத்தம் கால் கொள்ள முன்பு திராவிட இனத்தவர்கள் (தமிழர்கள்) வாழ்ந்துள்ளனர் என்பதில் சில கேள்விகளை முன்வைத்து ஆதாரங்களைத் தேடலாம்.

**கேள்விகள்:**

1. புத்த பெருமான் அவதரித்தது எப்போது?
2. புத்த பெருமான் முத்தி அடைந்தது எப்போது?
3. பௌத்த மதம் இலங்கைக்கு வந்தது எப்போது?
4. பௌத்த மதம் இலங்கைக்கு வரும் போது இங்குள்ள மக்கள் கடைப்பிடித்த சமயம் எது? இங்கு இருந்த வழிபாட்டு முறைகள் எவை? இவற்றின் விடைகளை ஆராய்வோம்.

**விடைகள்**

1. புத்த பெருமான் அவதரித்தது கி.மு 563 இல்
2. புத்த பெருமான் முத்தி பெற்றது கி.மு 483 இல் (80 வயதில்) இலங்கை போன்ற ஒரு சில நாடுகளில் புத்த பெருமானது இறப்பு கி.மு 541 என கூறப்பட்டது.
3. புத்த சமயம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது கி.மு.246 இல், புத்தர் இறந்து 218 ஆண்டுகளிற்குப் பின்னர் அசோக மன்னனின் முடிசூட்டு விழா நிகழ்ந்தது.

இந்தியாவில் அசோக மன்னனின் முடி சூட்டு விழா கி.மு. 264 இல் நடந்தது. தேவநம்பிய தீசனின் முடி சூட்டும் விழா கி.மு 246 இல் நடந்தது. மகிந்தர் புத்த சமயத்தைப் போதிப்பதற்கு இலங்கை வந்ததும் கி.மு 246 இல், தமிழ் மன்னான மூத்த சிவன் இறந்ததும் தேவ நம்பிய தீசன் முடி சூட்டியதும் அசோகனின் 17 ஆவது ஆட்சி ஆண்டிலாகும்.[3] எனவே புத்த சமயம் இலங்கைக்கு வரும் போதும் வர முன்பும் இங்கு இருந்தது, இந்து சமயமும் இந்து வழிபாட்டு முறைகளுமாகும். அதாவது லிங்க, நாக வழிபாடு காணப்பட்டது. லிங்க வழிபாடு என்பது சிவ வழிபாடாகும். இந்த லிங்க (சிவ) வழிபாட்டிற்கு உரியவர்கள் இந்துக்கள் எனப்பட்ட திராவிடர்கள். புத்தர் திராவிட இனத்தவர்களான நாக மன்னர்களின் பிரச்சினையைத் தீர்க்க இலங்கை வந்தார் என மகாவம்சம் கூறுகிறது. எனவே புத்த சமயம் இங்கு வருமுன்னர் இங்கு வாழ்ந்தவர்கள் திராவிடர்கள். புத்த சமயம் கால் வைத்ததே கி.மு. 246 இல் என்றால் எப்படி புத்த கோயில்களை உடைத்து இந்துக் கோயில்களைக் கட்டியிருக்க முடியும்?[4]

லிங்கக் கோயில்களை இடித்து பௌத்த விகாரைகளை மகாசேனன் கட்டினான் என மகாவம்சம் கூறும் செய்தியை

நோக்கினால் இது தான் உண்மையானது. மகாசேனன் திருகோணமலையில் பிரமதேவதைக் கோயிலை அழித்து மூன்று விகாரைகளை அமைத்தான் எனவும் மகாவம்சம் கூறுகிறது. ஆகவே பௌத்தம் வருமுன்பு இந்துக் கோயில்களும் இதனை வழிபட்ட திராவிட மக்களும் இருந்தனர் என்பது தெளிவாகின்றது.

### மகாவம்சம் தரும் தகவல்கள்

கி.பி. 06 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் மகாவம்சத்தில் கோகர்ணம் என்னும் துறைமுகம் மகாகந்தார ஆறு கடலுடன் கலக்கும் இடத்தில் அமைந்திருந்தது என்கிறது. இங்குதான் மகாசேனனால் இடிக்கப்பட்ட சிவாலயம் அமைந்திருந்தது. மகாசேனனால் இடிக்கப்பட்ட மூன்று லிங்கக் கோயில்களில் இதுவும் ஒன்று இதனை மகாவம்சம், வம்சத்திபிகை கூறுகின்றது.[5]

பௌத்தமதம் இலங்கைக்கு வருமுன்பு, அதாவது மகாசேனன் காலத்திற்கு முன்பு திருகோணமலையில் லிங்கக் கோயில்கள் இருந்தன என்பதற்காக சிங்கள வரலாற்று ஆதாரம் இதுவாகும். எரகுல மற்றும் கலந்தன் நகர் என்னும் இடங்களில் இருந்து லிங்கக் கோயில்களை மகாசேனன் இடித்து பௌத்த விகாரைகள் கட்டினான் என மகாவம்சம் கூறுகிறது. கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.மு. 4 ஆம் நூற்றாண்டு வரை இலங்கையின் பல பகுதிகளிலும் பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்கள் அனைத்திலும் மகாசிவ, சிவகுப்ப, காலசிவ, சிவரக்கித, விசாக, குமார, ஸ்கந்த, ராம, துர்க்கா, பதும போன்ற இந்துப் பெயர்கள் காணப்படுகின்றன.

### தமிழ் மன்னர்களான கதிர்காம க்ஷத்திரியர்


தேவநம்பிய தீசனின் முடிசூட்டு விழாவிற்கும், வெள்ளரசு மரம் நாட்டு விழாவிற்கும் கதிர்காம க்ஷத்திரியரும் சந்தணகாமப் பிரபுக்களும் வருகை தந்தனர் என மகாவம்சம் கூறும் குறிப்பு முக்கியமானது.[7] இந்தக் கதிர்காம க்ஷத்திரியர் என்போர் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் பரம்பரை பரம்பரையாக தென்கிழக்குப் பகுதியில் ஆட்சி செலுத்திய தமிழின மன்னர்களாவர். இவர்கள் பாண்டியத் தொடர்புடையவர்கள். கதிர்காமம் கல்வெட்டுக்கள் ஹொன்னன்னஹல, குசலானந்த பிராமிக் கல்வெட்டுக்கள் இவர்கள் பற்றித் தெளிவாகக் கூறுகின்றன.8 ஆகவே சிங்கள வரலாற்று நூலான மகாவம்சத்தின் கூற்றை மேற்படி பிராமிக் கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. அதாவது பௌத்த மதத்தின் ஆரம்பமான அரச மரநாட்டு விழாவிற்கு தமிழ் மன்னர்கள் வந்திருந்தனர் என்பது பௌத்தத்திற்கு முன்பு இத்தீவில் தமிழ் இந்துக்கள் வாழ்ந்தார்கள் என்பதை தெளிவாகக் காட்டுகின்றது.

### நாகர் வழிபட்ட இந்துத் தலங்கள்.

மேற்கே திருக்கோணேஸ்வரம் ஆதி நாகர்கள் வழிபட்ட இடமாகும். கேது முனிவர் வழிபட்ட தலம் என்பதால் கேதீஸ்வரம் எனலாயிற்று. பாளி நூல் இதனை நாகதீப பகுதி எனக் குறிப்பிடும். 1980 இல் ஜோன் காஸ்வெல் தலைமையில் அகழ்வாராய்ச்சி நடைபெற்றபோது பெருங்கற்கால மட்பாண்டங்கள் புதைகுழிகள், ஈமத் தாழிகள் போன்ற பல பொருட்கள் காணப்பட்டன. பாளி நூல் குறிப்பிடும் 'மாதோட்ட', 'மாகாதித்த' இதுவாகும். கி.பி. 12ம் நூற்றாண்டில் இவை புகழ் பெற்ற துறைமுகங்களாக விளங்கின. 1967, 1970 களில் கனடிய பல்கலைக்கழக பேராசிரியை விமலாபெக்ளெ வடபகுதியில் செய்த ஆய்வின் போது இப்பகுதி பெருங்கற்கால நாகர் வாழ்ந்த இடம் எனவும் ஆதித்திராவிட லிங்க, நாக வழிபாடு நிலவிய இடம் என்பதும் உறுதியாக்கப்பட்டது. தென்னிந்தியாவுக்கும், மாந்தைக்கும் இடையே காணப்பட்ட தொடர்புகளும் நிரூபணமாயின.[9]

மாந்தை, ஆனைக்கோட்டை, திருக்கேதீஸ்வரம், கந்தரோடை ஆகிய இடங்களில் கிடைத்த எச்சங்கள் பெருங்கற்கால திராவிடப் பண்பாடு நிலவியதைத் தெளிவாகக் காட்டுகின்றன. இங்கு காணப்பட்ட எலும்புக் கூடுகள் மானுடவியல், சமூகவியல், மரபணுவியல் ஆய்வுகள் மூலம் இப்பண்புகள் தென்னிந்திய திராவிடரே என்பதை உறுதி செய்கின்றன. பேராதனைப் பல்கலைக்கழக தொல்லியல் பேராசிரியர் சுதர்சன் செனவிரத்ன 1996 இல் எழுதிய கட்டுரையில் இவை தென்னிந்திய இரும்புக் கால தொழில்நுட்ப ஆராய்ச்சிகள் என்பதை எடுத்துக் காட்டுகின்றன என்கிறார். மேலும் இந்த ஈமத்தாழிகள் ஆதிகால மக்கள் வரலாற்றுக் கால நாகரீகத்தையும் வளர்த்தார்கள் என்று குறிப்பிடுகிறார். பேராசிரியர் சிற்றம்பலம் 'யாழ்ப்பாண





இராச்சியம்', 'பண்டைய ஈழத்தில் தமிழர்' போன்ற நூல்களில் தெளிவாக இதனைக் காட்டியுள்ளார்.

### பிராமிக் கல்வெட்டுக்கள் காட்டும் திராவிட வழிபாட்டுத் தொன்மை

சுதர்சன் செனவிரத்ன மேலும் கூறுவதாவது, வரலாற்றுக்கால குடியேற்ற மையங்கள் அவற்றுடன் இணைந்த ஈமச்சின்னங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிக் காணப்படும் பழைய பிராமிக் கல்வெட்டுகளை தாங்கி நிற்கும் குகைகள் வரலாற்றுக்கால மக்களின் சந்ததியினரே எனவும், ஈழத்தில் ஆதி நாகரீகத்தை வளர்த்தவர்கள் பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் பெருங்கற்கால மக்களே எனவும் குறிப்பிடுகின்றார். பௌத்தத்தை அனுசரித்தவர்கள் அந்த பிராமிக் கல்வெட்டுக்கள் குறிப்பிடும் பெருங்கற்கால மனிதர்கள். இவர்கள் ஆதித்திராவிடர் என்பது பல்வேறு ஆய்வுகள் காட்டும் உண்மையாகும்.

இதேபோன்று இலங்கையின் தொல்பொருளியல் திணைக்களத் தலைவரான சிரான் டெனரனியகல குறிப்பிடுவது இலங்கையின் கிழக்குக் கரையோரங்களில் கி.மு. 30000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த நாகர்கள் இத்தீவின் நாகரீக வளர்ச்சிக்குத் தீவிர தொண்டாற்றியுள்ளனர். இவர்களுடைய மொழி 'தெமழி' எனக் குறிப்பிடுவர்.[12] எனவே இவை ஆதி நாகர்கள் பற்றி சிங்கள வரலாற்று நூல்களும், சிங்கள வரலாற்று ஆசிரியர்களும் கூறும் வரலாற்று உண்மையாகும். இதனை பேராசிரியர் சிற்றம்பலம் உறுதி செய்கிறார்.

### ஏனைய லிங்க, சிவ, முருக வழிபாட்டுத் தலங்கள்

கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் தவிர சிலாபப் பகுதியில் முனீஸ்வரம், யாழ்ப்பாண வைபவமாலை குறிக்கும் கோயில்களிலே வடக்கு திருத்தம்பலேஸ்வரி, கதிரையாண்டான் கோயில்கள் முக்கியமானவை. இவை அம்பாள், முருகன் வழிபாட்டுத் தலங்களாகும். தென்திசையில் கிரேக்க அறிஞர் தொலமி கி.பி. 104 குறிப்பிடும் சந்திரசேகரிச்சரம் முக்கியமான பண்டைய வழிபாட்டுத் தலமாகும். இது பௌத்தம் வருமுன்னரே இங்கு புகழ் பெற்றிருந்தது.[13]

### பிற நாட்டார் குறிப்பு

பண்டைய வழிபாட்டுத் தலங்களுள் முதன்மை பெற்றது கதிர்காமம் ஆகும். இதனை கிரேக்க அறிஞரான தொலமி கதிர்காமம் ஒளிமயமான இடம் எனக் கூறியுள்ளார். இங்கு கொடிநிலை, கந்தழி, வள்ளி என ஆதி வழிபாட்டு முறைகள் காணப்பட்டன. இவை பௌத்தம் கால் கொள்ள முன்பு வாழ்ந்த ஆதித்திராவிட மக்களின் வழிபாட்டுத் தலங்களும் வழிபாட்டு முறைகளும் ஆகும். கிரேக்க புவியியல் அறிஞர் தொலமி, இவரது முதலாவது உலகப் படத்தில் இலங்கையின் சில இடங்கள் காட்டப்பட்டுள்ளன. தமிழ் நாட்டின் தெற்கே சாலியூர் துறைமுகம் (Salica), இலங்கைத்தீவு, தாமிரபரணி, தப்ரபேன் எனவும் காட்டியுள்ளார். அப்படத்திலே பருத்தித்துறை (Borew), மாதோட்டம் (Maduhi), தேவேந்திரமுனை (Dagan), திருக்கோயில் (Naadibe), மட்டக்களப்பு (Bacbicihes) எனவும் கோயில்களின் படங்களில் அடையாளமிட்டுக் காட்டியுள்ளார். எனவே இவ்விடங்கள் எங்கும் பாரிய இந்துக் கோயில்கள் இருந்தன. ஆதித் திராவிட மக்கள் வாழ்ந்தனர் என வெளிநாட்டு அறிஞர் மூலம் அறிய முடிகிறது.

தெற்கே டொன்டறா (Dagana) சந்திரனுக்குரிய (Sacracunal) கோயில் எனவும் ஆயிரம் பிராமணர்கள் இருந்து யாகம் செய்துள்ளதாகவும் தொலமி குறிப்பிட்டுள்ளார். இவ்விடம் பண்டைய காலத்தில் மாதுறை என வழங்கப்பட்ட மாத்தறை ஆகும். இது பெரிய துறைமுகமாக விளங்கியுள்ளது. இங்குள்ள தேவேந்திர முனை என்பதும் தேவிநுவர என மருவி விட்டது.

### பௌத்தத்திற்கு முந்திய யஷ்ஷ வழிபாடு

பௌத்தம் இங்கு வருமுன்பு யஷ்ஷ வழிபாடு நிலவியது. பௌத்தம் இங்கு கால் கொள்ளும் போது யஷ்ஷ, நாக வழிபாடு முறைகள், மரம் மற்றும் மலை வழிபாடு போன்ற இயற்கை வழிபாடுகள் லிங்க வழிபாடு மற்றும் ஜயண, பிராமண வழிபாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டன. யஷ்ஷரும் நாகரும் தற்கால வேடராகிய கற்கால வேடரின் முதாதையராகிய 'ஒஸ்ரிக் மொழி' பேசிய கூட்டத்தினர் ஆவர். இவர்களை மானுடவியலாளர் 'வேடொயிற்' அல்லது 'ஒஸ்ரலோயிட்' என அழைப்பர். இது பற்றிப் பரணவிதான, ஆனந்த குமாரசாமி போன்ற அறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர்.[15] ஈழத்தில் நிலவிய இயற்கை வழிபாட்டையும் உருவ வழிபாட்டையும் யஷ்ஷ வழிபாடு என பாளி நூல்கள் குறிப்பிடுகின்றன. இந்து சமயத்திலுள்ள லிங்க வழிபாடும்

இவ்வழிபாட்டைச் சார்ந்தது தான் எனத் தலை சிறந்த மொழியியல் அறிஞரான சுனித் குமார் சட்டாவி குறிப்பிடுகின்றார். பிற்காலச் சிவ வணக்கத்தோடு இணைந்த இந்த லிங்க வழிபாடு தோற்றத்திலும் பெயரிலும் ஒஸ்ரிக் மொழி பேசிய திராவிட மக்களுடையதாகும் எனக் கூறியிருக்கிறார். A.K.குமாரசுவாமி, மஜூம்தார், புசல்கார் போன்றோரும் இதனையே கூறியுள்ளனர்.

ஆகவே ஈழத்தில் பௌத்தம் வருமுன்பு காணப்பட்டது முழுக்க முழுக்க இயற்கை வழிபாடும், மர வழிபாடும், வேல் வழிபாடும், நாக வழிபாடும், ஒரு தலை முத்தலைச் சூல வழிபாடும், லிங்க வழிபாடுமே என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இவ்வழிபாடுகளை அனுசரித்த மக்கள் ஒஸ்ரலோயிட் எனப்பட்ட ஆதித்திராவிட மக்களாகும். பௌத்தம் வருமுன்பு இத்தீவில் வாழ்ந்தவர்கள் இவர்களே ஆவர்.

### கந்தரோடையிற் காணப்பட்ட எச்சங்கள்

ஈழத்தின் வடபகுதியில் கந்தரோடை, ஆனைக்கோட்டை மாந்தை, பொம்பரிப்பு ஆகிய இடங்களில் விமலா பெக்ளெ 1967 இல் மேற்கொண்ட ஆய்வின் போது பல விடயங்கள் தெளிவாகின. இங்கு வாழ்ந்த ஆதித்திராவிட மக்கள் தமிழகத்தின் தென்பகுதியில் கொண்டிருந்த வணிகத் தொடர்புகள் நாக, லிங்க வழிபாடுடையவர்கள் போன்ற பல விடயங்கள் தெளிவு படுத்தப்பட்டன. இதேபோல கந்தரோடையில் காணப்பட்ட இருபதுக்கும் மேற்பட்ட தூபிகள் பௌத்த சமயத்தது, கந்தரோடை என்பது கதுரகொட என்றெல்லாம் புரளிகள் கிளப்பப்படுகின்றன. உண்மையிலே இவை இறந்தோரது எச்சங்கள் புதைக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாகும். வேத காலத்தில் இறந்தோரினதும் எச்சங்கள் மீது தூபிகள் எழுப்பப்பட்டன. இவை இந்து, ஜயன, சமண, பௌத்த மதப்பெரியார்களது எச்சங்களின் மீது எழுப்பப் பெற்றன. பிற்காலத்தில் இவை வணக்கத் தலங்களாகவும் மாறின. பரணவிதான கூறுவது பெரியோர் எச்சங்களின் மீது பண்டைய நாளில் பல்லின மக்கள் எழுப்பிய மண்முடியில் (தூமியி) இருந்தே தூபி தோன்றி வளர்ந்தது என்பர்.[17] பௌத்த மதம் அறிமுகமாகும் முன்னரே இவை அமைக்கப்பட்டிருந்தன என ரீ. டபிள்யூ. ரைஸ்டேவிட்ஸ் கூறுகின்றார்.[18]


### பெருங்காலப் பண்பாடும் வழிபாடும் பௌத்தத்திற்கு முந்திய ஆதித்திராவிடருடையதே

பெருங்காலம் எனப்படுவது நாகரீகம், பிராமி எழுத்துக்கள், நீர்ப்பாசன முறை, குளங்கள் அமைத்தல், ஆட்சிமுறை என பொதுவாக எல்லாவிதத்திலும் வளர்ச்சி அடைந்த ஒரு சமுதாய முறையாகும். இலங்கையில் இது கி.மு. 3000 ஆண்டிலிருந்து கி.மு. 1000 ஆண்டுகள் எனப்படுகின்றது. முக்கியமாக இறந்தோரை தாழிகளில் அடைத்துப் புதைக்கும் வழக்கமும் இதன் சிறப்பம்சமாகும். ஈழத்திலே பொம்பரிப்பு, கந்தரோடை, ஆனைக்கோட்டை, கதிரவெளி, வாகரையில் காயாங்கேணி, உகந்தை போன்ற பல இடங்களில் இப்பெருங்கற்கால பண்பாடு காணப்பட்டுள்ளது. இங்கெல்லாம் கிடைக்கப்பெற்ற ஒரு தலை, முத்தலை, சூலங்களும் லிங்கக்கற்களும் ஆதித்திராவிட வழிபாட்டு முறையைக் காட்டுகின்றது. இங்கு காணப்பட்ட இடுகாடுகளில் கிடைக்கப்பெற்ற நடுகற்களும், தாழிகளும், மட்பாண்டங்களும் பெருங்கால நாகரீகம் என்பதையும் பண்பாட்டு முறைகளையும் காட்டுகின்றன. ஆகவே பௌத்தம் இலங்கைக்கு வருமுன்னரே இங்கு ஆதித்திராவிட கலாசாரமும் லிங்க, வேல் வழிபாடுகளுமே நீண்ட காலமாக இருந்துள்ளன என்பதை பல்வேறு ஆதாரங்கள் காட்டுகின்றன. ஆகவே

* இலங்கையில் பௌத்தம் கால் கொள்ள முன்பு வாழ்ந்த மக்கள் ஆதித்திராவிட மக்களாகும். இவர்களது வழிபாட்டு முறையானது யஷ்ஷ வழிபாடும் பின்னர் மரம், லிங்க, வேல், சூல வழிபாடுமாக இருந்தன.
* பின்னர் வாழ்ந்த இயக்கர், நாகரும் நாக, லிங்க, வேல் வழிபாடுடையவர்களே. (சிவ, முருக, சக்தி)
* பெருங்கற்கால மக்களான ஆதித்திராவிடரின் வழி வாழ்ந்தவர்களே தமிழ் மக்களாவர்.
* பௌத்தம் வருமுன்னரே இங்கு வாழ்ந்தவர்கள் அவர்களே. ஆதியில் பௌத்தத்தை ஆதரித்தவர்களும் அவர்களே. பௌத்தம் வருமுன்பு இத்தீவில் பரவலாக வாழ்ந்தவர்களும் இம்மக்களே. இம்மக்களால் அனுஷ்டிக்கப்பட்ட சமய நம்பிக்கைகளே லிங்க, வேல், சூல, நாக வழிபாடுகளாகும்.
* இதனைப் பல்வேறு வகையான ஆய்வுகளும், அறிஞர்களும் உறுதி செய்துள்ளனர்.


செல்வி. க. தங்கேஸ்வரி
B. A. தொல்லியல் சிறப்பு

1. i. யாழ்ப்பாண வைபவமாலை - மயில்வாகனப் புலவர் கி. பி 1976
ii. Ceylon in Ptolemys Geography – 1968 Colombo.
iii. Nagadipa and Buddhist Remains in Jaffna iv. Iras CB xxvi
v. Mahavamsa – ed William Gaiger Ch.xxxvii, PP 40 – 41
2. யாழ்ப்பாண வைபவமாலை - மயில்வாகனப் புலவர் கி. பி. 1976
3. Mahavamsa – ed William Gaiger
4. i. Mahavamsa – ed William Gaiger. Ch – 37 note 41
ii. Vamsathipikasini Commentary on the Mahavamsa PTS II G. P. Mahalasekara Editor London, 1935 PP – 685
5. Ibd, PTS IIGpMalasekara Editor London, 1935 PP – 685
6. Inscription of Ceylon 1972 by Dr. S.Paranavithana
7. Mahavamsa – ed William Gaiger, 1945, xix 53 – 54, xix 62-60
8. Inscription of Ceylon 1872 by Dr. S. Paranavithana
9. Vimla Begley, Archeological exploration in Northern Ceylon expedition vol. 9 No 4 1967 PP21 – 29
10. யாழ்தொன்மை வரலாறு - பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், திருநெல்வேலி 1999 பக்94113
11. பண்டைய ஈழத்தில் தமிழர் ஒரு பார்வை 2000, பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், பக் 18, 19,20
12. பண்டைய ஈழத்தில் தமிழர் ஒரு பார்வை 2000 , பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், பக் 19,20
13. தமிழ் ஈழம் நாட்டு எல்லைகள்- ஒ.கீ.சின்னத்தம்பி, மறவன் புலவு க.சச்சிதானந்தம் பக் 11,12
14. J.R. சின்னத்தம்பி, மறவன் புலவு க. சச்சிதானந்தம் பக் 11, 12
15. சிந்தனை , பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், கட்டுரை ஈழத்து யஷ்ஷ நாக வழிபாடுகள்.
Mahavamsa – Gaiger, (Translated) Ch vii PP 53 Meter 6 Ceylon Journal of Science voll 1928 December Feb PP 94 – 98
Mahavamsa – William Gaiger Ch vi PP 51 Note 02
இலங்கையில் தொல்லியலாய்வும் திராவிடக் கலாசாரமும் க. குணபாலசிங்கம் 1988 மட்டக்களப்பு பக். 108
16. Kumarasamy A.K. The Yaksas = 1971 New Delhi the vidz Age Bumbay Pusalkar
17. Vimala Begley, Archeological exploration in Northern Ceylon expedition vol 9n041967PP90
18. Stupa in Ceylon by Dr. S. Paranavithana
19. Buddhism T. W. Rys Davidas PP 36 - 37



# மங்களம் பொங்கும் காஞ்சிப்பட்டு

காஞ்சிபுரம் 'ஆயிரம் கோவில் நகரம்' என்று அழைக்கப்படுகிறது. 'திருவாரூரில் பிறக்க முக்தி, காஞ்சியில் வாழ முக்தி, காசியில் இறக்க முக்தி, திருவண்ணாமலையை நினைக்க முக்தி' என்ற வரிகள் மூலம் காஞ்சியின் சிறப்பை அரிய முடிகிறது. பாலாற்றின் கரையில் அமைந்துள்ள இந்நகரம், காஞ்சிபுரம் மாவட்டத்தின் தலை நகருமாகும். சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன் தொண்டைமான் இளந்திரையன் காஞ்சி நகரத்தை ஆட்சி புரிந்ததை பரிபாடல் மூலம் அரிய முடிகின்றது. கி.பி. 4 ஆம் நூற்றாண்டு முதல் 9 ஆம் நூற்றாண்டு வரை பல்லவர்களின் தலைநகராக விளங்கிய காஞ்சிபுரம், கலை, மற்றும் தமிழ், சமஸ்கிருத மொழிக் கல்வியில் சிறந்து விளங்கியது. காஞ்சி தமிழகத்தின் பாரம்பரிய சின்னமாக இன்றுவரை திகழ்கிறது.




'காஞ்சிபுரம் போனால் காலாட்டிக்கொண்டே சாப்பிடலாம்' என்பது முதுமொழி. இதன் அர்த்தம் காஞ்சிபுரம் சென்றால் கைத்தறி நெசவு நெய்து, பணம் சம்பாதித்து சாப்பிடலாம் என்பதாகும். (நெசவு நெய்யும் போது, கையையும் காலையும் ஆட்ட வேண்டும் என்பதிலிருந்தும் இப்பழமொழி உருவாகியிருக்கலாம்.)

காஞ்சிபுரம் ஊரில் தயாரிக்கப்படும் காஞ்சிப் பட்டுப் புடவைகள் மிகவும் பிரபலமானவை. மிக அழகும், சிறப்பும், தரமும், நீண்ட பாவனைக் காலமும் கொண்டவை. காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் உலகம் முழுவதும் மிகவும் புகழ் பெற்றவை ஆகும். பட்டு நெசவாளர்கள் சுமார் 600 வருடங்களுக்கு முன்பே காஞ்சியில் குடியேறி பரம்பரை பரம்பரையாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். குறிப்பாக இங்கு பட்டு நெசவு வெகு சிறப்பாகவும், மிகுதியாகவும் நடைபெறுகிறது.

நெசவாளர்கள் தாம் வாழும் வீடுகளில் குடிசைக் கைத்தொழிலாகவே இன்று வரை இத்தொழிலைத் தொடர்கின்றனர். காஞ்சிபுரத்தில் ஒவ்வொரு வீட்டிலும் கைத்தறி இருக்கும். இது இவர்களது வாழ்வாதார சொத்து. தலைமுறை தலைமுறையாக பேணப்பட்டு வாரிசு வழி பரிமாறப்பட்டு வருகின்றது.

சாதாரணமாக காஞ்சிபுரத்தில் எல்லா வீடுகளும் ஒரே அமைப்பைக் கொண்டவையாகவே காணப்படுகின்றன. வீட்டினுள்ளே காணப்படும் நீண்ட மாடத்தில் கைத்தறி இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. பத்து வயது சிறுவர் முதல் கொண்டு வயோதிபர் வரை வயது வேறுபாடில்லாது கைத்தறியை இயக்குவது அல்லது நூல் சுற்றிக் கொடுப்பது முதலான அனைத்து வேலைகளையும் தெரிந்து வைத்திருக்கிறார்கள். கணவன், மனைவி இருவரும் தறியில் உட்கார்ந்திருந்து நெசவு நெய்வதன் மூலம் உற்பத்தியை அதிகரிப்பதுடன் கூலி கொடுப்பதைத் தவிர்த்து குடும்ப வருமானத்தையும் பெருக்கிக் கொள்கின்றார்கள். ஒரே தடவையில் ஒரே வடிவமைப்புக் கொண்டதாக குறைந்தது 7 சேலைகள் வரை நெசவு செய்கின்றார்கள். இதற்கு 15 நாட்கள் வரை எடுக்கின்றது.


இறுக்கமாகச் சுற்றப்பட்ட மூன்று நூல்களைக் கொண்டு நெய்யப்படும் பாரமான பட்டுச் சேலைகள் பிரசித்தமானவை. இவ்வாறு தங்க இழை, வடிவங்கள், துணியின் நிறையும் பாணியும், கரைகளின் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் சேலைகளின் விலைகள் வேறுபடுகின்றன. பொதுவாக 250 இந்திய ரூபா முதல் ஐந்து இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான விலை கொண்டவையாக பட்டுச்சேலைகள் காணப்படுகின்றன. தங்கம், வெள்ளி, சரிகை இழைகள் பயன்படுத்தப்பட்டு வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கும் தேவைகளுக்கும் ஏற்ப சேலைகள் நெய்து வழங்கப்படுவதுடன் பெறுமதிக்கேற்ப விலைகளும் தீர்மானிக்கப்படுகின்றன.




அட்டைப்பட விளக்கம்: விரலில் அணியும் மோதிரத்தின் அளவே உள்ள வளையத்தில் தனிப் பட்டுச் சேலையை நுழைத்து வெளியே எடுத்து விடும் அளவுக்கு பட்டுச் சேலை மென்மையானதாகவும் பாரம் குறைந்ததாகவும் இருக்கும். ஆனால் பட்டுச் சேலையின் தரத்தை, அழகை, பாரத்தை, விலையை தீர்மானிப்பது சேலையின் கரையும், வெள்ளி, தங்க, இழைகள் மற்றும் வடிவங்களின் தன்மையும் ஆகும்.

மரபார்ந்த வடிவங்களான மாங்காய், மயில், டயமண்ட், தாமரை, குடம், பூங்கொடி, பூ, கிளி, கோழி ஆகியவற்றுடன் பல பண்டைய கதைகளின் காட்சிகள் என்பன பட்டுச் சேலைகளின் கரைகளை அலங்கரிக்கின்றன. தற்போது கணனி தொழில் நுட்பமும் காஞ்சிபுரம் பட்டுச்சேலை உற்பத்தியில் இணைக்கப்படுகின்றது. கணனி மூலம் பெறப்பட்ட சித்திரங்கள் கொண்ட கரைகள் சேலைகளுக்கு மேலும் அழகூட்டுகின்றன.

வடிவங்களும் நெய்யும் முறைகளும் துணியும் சந்தையின் தேவைக்கேற்ப மாறிய போதும் இன்றும் காஞ்சிபுரம் சேலைகள் மரபார்ந்த பல விஷயங்களைக் கொண்டுள்ளன. அவை பாரமானவையாகவும் கண்ணுக்கு குளிர்ச்சியானவையாகவும் மங்களகரமானவையாகவும் அழகாகவும் இருப்பதனால் இன்றும் திருமணச் சேலைகளாக, கூறைச் சேலைகளாகப் பலரால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. காஞ்சிபுரம் நகரத்தைச் சூழவுள்ள பகுதிகள் முழுவதுமாக சுமார் 50 ஆயிரம் நெசவாளர்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இந்த எண்ணிக்கையை விட உண்மையில் தொழிலாளர்களின் எண்ணிக்கை 50 சதவீதம் கூடுதலாகவே இருக்கும். தற்போது கைத்தறியில் ஈடுபட்டுள்ள பெரும் பகுதியினர் பெண்களாவர். 40 வயதுக்கு மேற்பட்ட







ஆண்களும் இதில் ஈடுபட்டுள்ளனர். தலைமுறை தலைமுறையாக உருவாகி வந்த நெசவாளர்கள் குடும்பங்களிலிருந்து கடந்த இருபதாண்டுகளாக புதிய தலைமுறையினர் இந்தத் தொழிலில் ஈடுபடவில்லை.

துணி நெய்யும் நெசவுத் தொழில் உலகிலேயே மிகப் பழமையான தொழில்களுள் ஒன்று. பட்டு என்பது ஒரு நூல், இது பட்டு ஆடைகளை தயாரிக்க பயன்படுகின்றது. கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு, ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளாக சீனர்கள் பட்டு ஆடைகளை நெய்து, உடுத்தி வந்துள்ளனர். சீனாவில் பண்டைய காலத்தில் பேரரசின் இராணி ஒருவர், அரண்மனைத் தோட்டத்தில் உலாவிக் கொண்டு இருக்கும் வேளையில், அங்கிருந்த முசுக்கொட்டைச் செடியில் இருந்த ஒரு புழு, நல்ல இளம் மஞ்சள் நிறத்தில் கூடு ஒன்றைக் கட்டியதைப் பார்த்து இருக்கிறார். அதனைப் பார்த்து ஆச்சரியப்பட்ட அரசி, கூட்டின் இழையப் பற்றி இழுக்க, அது நெடிய தூரம் நீண்டதாம். அதிலிருந்து, கூடு ஒன்று, ஒரே இழையில் ஆனதையும் தெரிந்து கொண்டு, நிறையக் கூடுகளைச் சேர்த்து பின் அதன் இழைகளைக் கொண்டு ஒரு சிறு ஆடை தயாரித்துப் பார்த்து, அதன் அழகில் மயங்கி, பட்டு நூலாடைகள் இப்படியாகத் துவங்கியதாகக் கூறப்படுகிறது. மேலும் இந்த வகை ஆடைகள் இராச குடும்பத்தில் அதுவும் சீனாவில் மட்டுமே இரகசியமாக வைக்கப்பட்டிருந்தன.

இப்படியாக சுமார் 2500 ஆண்டுகள் கழிந்துவிட, ரோமானிய மன்னன் எதேச்சையாக சீன இளவரசியைத் திருமணம் செய்ய, முதல் முறையாக பட்டுக் கூடும், புழுவும் எல்லை தாண்டியது. எனினும் அவர்கள் அதனை வளர்க்கத் தெரிந்திருக்கவில்லை. மீண்டும் பாதிரியார் ஒருவரைச் சீனாவுக்கு அனுப்பி அவர் மூலமாகத் தெரிந்து கொள்ள முற்பட்டும் முயற்சி தோல்வியிலேயே முடிந்தது.

இந்தச் சூழலில், ஜப்பானியர்கள் வெகு சாமர்த்தியமாக பட்டு நூல் வளர்க்கத் தெரிந்த நான்கு சீனப் பெண்மணிகளைக் கடத்திச் சென்று திருமணம் செய்து கொண்டார்கள். அதன் பின் ஜப்பானியர்கள் பட்டு நூல் வளர்ப்பைத் துவக்கி அதன் உற்பத்தியில் மேம்பாடு கண்டார்கள். பட்டுப்புழு வளர்ப்பில் அதிக உற்பத்தி செய்யும் நாடுகளில் முதலாவதாக சீனாவும் அடுத்து இந்தியாவும், பத்தாவதாக ஜப்பானும் இருக்கின்றன. இந்தியாவில் மட்டும்தான் மல்பரி, முகா, டொசர், ஏரி ஆகிய நான்கு வகையான பட்டுகள் தயாரிக்கப்படுகின்றன.

இந்தியாவின் பழைமையான நாகரீகமான சிந்துவெளி அரப்பா, மொகஞ்சதாரோ தொல்லியியல் ஆய்வுகளிலும், பட்டின் பயன்பாட்டை அறிய முடிகிறது. அந்நாள்களில் பட்டு கிடைத்தற்கு அரிய, மிகவும் விலை உயர்ந்த பொருளாக இருந்தது. எனவே, தெய்வ வழிபாட்டிற்கும், மன்னர்களின் குடும்பத்தினரின் உபயோகத்திற்குமே பட்டைப் பயன்படுத்தி வந்தனர். இன்றைக்கும், வளமான வாழ்க்கைக்கு அடையாளமாக பட்டு ஆடைகள் திகழ்கின்றன. மங்கல



நிகழ்ச்சிகளிலும், திருவிழாக்களிலும் பட்டு முதன்மை பெறுகிறது.

மனித நாகரிகத்தில் பட்டுத் துணியின் பயன்பாடானது அது தமிழ்க் கலாசாரமாக இருந்தாலும் சரி, இந்திய கலாசாரமாக இருந்தாலும் சரி சுபநிகழ்ச்சிகளில் பட்டுச் சேலை, பட்டு வேட்டி, பட்டு அங்கவஸ்திரம் இடம்பெறுவது என்பது மரபு சார்ந்த ஒன்றாகவே இருந்துள்ளது. இன்றுவரை இந்த மரபு தொடர்ந்து வந்துள்ளது. இனியும் அந்த மரபுகள் தொடரப்பட வேண்டும். இது குறித்து காஞ்சிபுரத்தில் பட்டுச்சேலை உற்பத்தியில் 55 வருடங்களாக ஈடுபட்டிருக்கும் நெசவாளி ஒருவர் தமது கருத்துக்களை பின்வருமாறு தெரிவிக்கின்றார். ''இப்படி மரபு சார்ந்த ஒரு பொருளாக உள்ள பட்டுத் துணிகள் எல்லாம் கைத்தறியில் நெய்யப்பட்டவைகளாக உள்ளன. இப்படிக் கைத்தறியில் உருவான சேலைகளுக்கும் வேட்டிகளுக்கும் போட்டியாக போலிப் பட்டும் வந்துவிட்டது. இன்றைய நிலையில் மின்சார விசைத்தறியிலும் இயற்கைப் பட்டைப் புகுத்தி சேலைகளை உருவாக்கத் தொடங்கிவிட்டனர்.

இன்றைய விஞ்ஞான அவசர யுகத்தில் விசைத்தறி தேவைதான், ஆனால், அது கைத்தறி நெசவை அழித்து விடக்கூடாது என்பதற்காக, விசைத்தறியில் 36 அங்குலம் அகலம் கொண்ட துணிகளுக்கு மேல் நெய்யக் கூடாது என்று முடிவு செய்யப்பட்டு, சில ரகங்கள் விசைத்தறியில் உருவாகின. 36 அங்குல அகலத்துக்கு மேல் கைத்தறியில் தான் நெய்ய வேண்டும் என்றும், மத்திய அரசு நியமனம் செய்த ஆணைக் குழு கூறியது. இம்முடிவு சில காலம் மட்டுமே நடைமுறையில் இருந்தது. கடந்த பத்து ஆண்டுகளாக கைத்தறிக்கு என்று ஒதுக்கப்பட்ட அனைத்து ரகங்களையும் விசைத்தறியில் புகுத்தி விட்டனர். அரசுகளும், இதை கவனிக்காமல் இருந்ததன் விளைவாக கைத்தறிக்கு என்று ஒதுக்கப்பட்ட ரகங்களை விசைத்தறியிலும் உற்பத்தி செய்வதனால் கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் பலர் சொத்துகளை இழந்து முகவரி இன்றி உள்ளனர்.


பட்டுச் சேலைகளுக்குத் தேவைப்படும் மூலப்பொருளான கோறா கர்நாடகத்தில் பெருமளவும், தமிழ்நாட்டில் சிறிதளவும், கலப்பின கோறாவான மால்பா மேற்கு வங்கத்திலும் கிடைக்கின்றன. ஆனால் இன்றோ 80 சதவீதம் கோறா விசைத்தறியின் பயன்பாட்டுக்குச் சென்று விடுவதால் எங்களுக்கு கோறா கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டு விலையேற்றத்தையும் சந்திக்க வேண்டி ஏற்படுகின்றது.

இந்தச் விலையேற்றத்தின் காரணமாக பட்டுக் கைத்தறி உற்பத்தியாளர்கள், நூல் நூற்போர், சாயமிடுவோர் எனப் பல்வேறு தரப்பைச் சார்ந்த சுமார் 5 லட்சம் பேர் பாதிப்படைந்துள்ளனர்.'' என்று காஞ்சிபுரம் பட்டுச்சேலை உற்பத்தியின் தனித்துவத்தையும் பாரம்பரியத்தையும் பேணிப்பாதுகாப்பதற்கு யாரும் முன்வரவில்லை என்ற தமது ஆதங்கங்களை எம்மிடம் பகிர்ந்து கொண்டார். இந்த நிலை தொடருமானால் உண்மையான காஞ்சிபுரம் பட்டுச்சேலை உற்பத்தி இன்னும் 50 வருடங்களுக்குள் இல்லாமல் போய்விடும் ஆபத்தும் உள்ளது என எச்சரிக்கவும் செய்தார்.

காஞ்சிபுரம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தயாரிக்கப்படும் பட்டுப்புடவைகளுக்கு மட்டுமே 'காஞ்சிபுரம் பட்டுப்புடவைகள்' என்று தர முத்திரை குத்தப்படுவதற்கான அனுமதியை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. இதன் மூலம் தனித்தன்மையுடைய காஞ்சிபுரம் பட்டுப்புடவைகளுக்கு சட்டரீதியான பாதுகாப்பும் அங்கீகாரமும் கிடைக்கின்றது. இந்த அடையாளத்தில் ரகசிய எண் பொறிக்கப்படும். இந்த ரகசிய எண் பொருத்தப்பட்ட அடையாளம் தான் உண்மையான காஞ்சி பட்டாகும். சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னிருந்தே தமிழகத்தில் உள்ள ஒரு இனம் செங்குந்தர் என்றழைக்கப்படும் கைக்கோளர். இவர்கள் வரலாற்றில் மிகவும் புகழ்பெற்ற படைவீரர்களாக திகழ்ந்தனர். மூவேந்தர்களிடமும் மிகவும் நம்பிக்கைக்குரிய அந்தரங்க படைவீரர்களாய் இருந்தனர். சோழர் காலத்திற்கு பிறகு (13ஆம் நூற்றாண்டு) படிப் படியாக நெசவுத்தொழிலுக்குள் நுழைந்த இவர்கள் 17ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் தங்கள் குலத்தொழிலாகிய படைத் தொழிலை விட்டு முழுமையாக நெசவுத் தொழிலுக்கு மாறினர்.

**- பஸ்ரியாம்பிள்ளை ஜோன்சன்**





# காலத்தின் கோலத்தில் மரச்சிற்பங்கள்

சிற்பக் கலையானது மரச் சிற்பங்கள், உலோகச் சிற்பங்கள், தொன்மைமிக்க கருங்கற் சிற்பங்கள் யானைத்தந்த சிற்பங்கள் மற்றும் களிமண் சிற்பங்கள் என்ற பாகுபாட்டில் அடக்கிக் கணிப்பிடப்படுகின்றன.

இத்தகையதான சிற்பப் பாகுபாடானது உலகளாவிய ரீதியில் பரவலாக சகல நாடுகளிலும் அவற்றின் நீண்ட கலாசார பண்பாட்டு விழுமியங்களுடன் பின்னிப் பிணைந்து அவற்றிற்கு ஏற்ற வகையில் மிளிர்கின்றன. மேலும் கற்களில் பொழியப்பட்ட சிற்பங்கள், உலோக சிற்பங்களான பொன், வெள்ளி, செப்பு, கலப்பு உலோகச் சிற்பங்கள் நீண்ட காலம் நிலைத்து நிற்கக் கூடியனவாகும்.

ஆயினும் இங்கு நாம் எடுத்துக் கொண்ட கலையம்சம் மரவேலைப்பாட்டுச் சிற்பங்களாகும். இவை நீண்ட கால அடிப்படையில் உயர்ந்த பிரயாசைக்கு மத்தியில் பாதுகாக்க முடியாதவையும், காலக் கிரமத்தில் சிதைவடையக் கூடிய வையுமாகும். எது எவ்வாறாயினும் பயன்படுத்தப்படும் மரம், அதன் தன்மை என்பவற்றுக்கு ஏற்ப, அவற்றின் பாவனை, நிலைத்து நிற்கும் தன்மையும் மாற்றம் பெறுகின்றன. மரச்சிற்பங்களாவன மரத்தை ஊடகமாக வைத்து சிற்பங்கள் செதுக்கப்பட்டும் பயன்படுத்தப்பட்டும் வருபவையாகும். மரச் சிற்பக் கலைத்துவத்தை எடுத்து நோக்கும் போது மேலேத்தேய நாடுகளில் மேலேத்தேய ஆதிக்கத்திற்கு உட்பட்ட அந்தந்த நாட்டுக் கலை நிலைப்பாட்டிற்கும், கலா சார பின்னணிக்கும் ஏற்ற வகையில் சிற்பங்கள் செதுக்கப் பட்டும் வடிவமைக்கப்பட்டுமுள்ளன. அவ்வாறே கீழைத்தேய பண்பாட்டு விழுமியங்களைத் தழுவியே, மரச் சிற்பங்கள் செதுக்கப்பட்டும் வடிவமைக்கப்பட்டும் வந்துள்ளன.

மேலும் மரச்சிற்பங்கள் பற்றியதான அடிப்படையில் மூன்று முக்கிய வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவையாவன புராதனக் கால மரச்சிற்பங்கள், இடைக்கால மரச்சிற்பங்கள் மற்றும் தற்கால நடைமுறையில் உள்ள மரச் சிற்பங்கள் என்பவையாகும்.

புராதனக் கால மரச்சிற்பங்கள் என்ற கணிப்பீட்டினை எடுத்து நோக்கும் போது அவை மிகமிக அரிதாகவே காணப்படுகின்றன. ஆயினும் அவற்றைச் சார்ந்தும், தழுவியும், கோயில் கதவுகள், கோயில் கட்டிடக்கவையில் பயன்படுத்தப்படும் மரவேலைப்பாடுகளில் கலையம்சம் புனைந்து செதுக்கப்பட்ட சிற்பங்கள் ஏராளம் உள்ளன. குறிப்பாகக் கோயில் சித்திரத் தேர்களில் கீழ்ப் புறத்தில்

செதுக்கப்பட்ட சிற்பங்கள் பெருமளவு பண்டைய புராதன மரச் சிற்பங்களைச் சார்ந்ததும், தழுவியும் வளர்ந்தவை எனலாம். இவை தவிர சில பண்டைய கட்டிடங்களில் இன்றும் மரவேலைப்பாட்டுச் சிற்பங்களை காணக் கூடியதாகவுள்ளது. பண்டைய தளபாடங்களில் செதுக்கப்பட்டு தனிப்பட்ட சிலரினால் உயரிய வகையில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வரும் மரச் சிற்பங்கள் வாயிலாக நாம் அவற்றின் உன்னத கலைத்துவத்தைக் காணமுடிகின்றது. பண்டைய வீட்டுத் தளபாடங்களில் குறிப்பாகக் கட்டில்கள், கதிரைகள், அலுமாரிகள், சமையல் பாவனைப் பொருட்களாலான உரல்கள், தட்டுகள் , வெற்றிலைப் பாக்கு தட்டங்கள் ஆகியவற்றில் கலைத்துவம் மிக்க மரச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளதைக் காணமுடியும்.

வரலாற்று ரீதியில் அன்னிய ஆதிக்கத்துக்கு உட்பட்ட காலத்தில் கிடைக்கப் பெற்ற மரச் சிற்பங்கள் பெரிதும் மேற்கத்தைய கலாசாரத்தைத் தழுவி வளர்ந்த மரச்சிற்பங்கள் எனலாம். இவை சிற்ப வேலைப்பாடுகள் குன்றிய மரத் தளபாடங்கள் எனப் பொதுப்படையில் கணிக்கப்படுகின்றன.


ஆயினும் தற்கால மரப்பொருட்களின் பாவனை, பண்டைக் கால ஆதிக்கத்துக்குட்பட்டவையாக விளங்குவதை ஒட்டுமொத்த மரச்சிற்பக் கலை ஊடகங்களில் காணமுடிகின்றது. இன்று வடிவமைக்கப்படும் சாதாரண வீட்டுத் தளபாடங்களில் காணப்படும் சிற்பங்கள், பண்டைய தளபாட மரச் சிற்பக்கலைப் பாணியினை பின்பற்றிப் பயன்படுத்தப்பட்டவிடத்தும், பொதுப்படையில் அவற்றின் கலைத்துவம் குன்றியதாகவே காணப்படுகின்றன.

வரலாற்று ரீதியில் அன்னிய ஆதிக்கத்துக்கு உட்பட்ட காலத்தில் கிடைக்கப் பெற்ற மரச் சிற்பங்கள் பெரிதும் மேற்கத்தைய கலாசாரத்தைத் தழுவி வளர்ந்த மரச்சிற்பங்கள் எனலாம். இவை சிற்ப வேலைப்பாடுகள் குன்றிய மரத் தளபாடங்கள் எனப் பொதுப்படையில் கணிக்கப்படுகின்றன.

கோயில் கலை அம்சங்களில் மரச்சிற்ப வேலைப்பாட்டுக் கலையம்சத்தினை எடுத்து நோக்கும் போது பொதுவாக கோயில்களில் இடம்பெறும் மரச்சிற்பங்களின் சிகரமாக விளங்குவது சித்திரத்தேர்களாகும். முற்காலத்தில் கோயில் உற்சவங்களில் குறிப்பாக வழக்கத்தில் பயன்படுத்தப்பட்டு வந்தது கட்டுத் தேர்களேயாகும். இவை மரச்சிற்ப வேலைப்பாடுகள் அற்றவையாகவே விளங்கின.

காலக் கிரமத்தில் பொருளாதார ரீதியில் அதிக செலவில் நிர்மாணிக்கப்பட்டதான மற்றும், மீண்டும் மீண்டும், மெருகூட்டிப் பாவிக்க உகந்த நிரந்தரமான தேர்கள் வடிவமைக்கப்பட்டன. இத்தேர்கள் மரச்சிற்பக் கலையின் மகோன்னத நிலையை எடுத்துக் காட்டுகின்றன.





பொதுப்படையில் மரச்சிற்பக் கலையில் சிறப்பிடம் பெற்ற தேர்கள் 'ரதம்' எனப் போற்றிக் குறிப்பிடப்படுகின்றன. மரச் சிற்பங்கள் நிறைந்த இச்சித்திரத் தேர்கள் பல தட்டுக்கட்டமைப்புக்களைக் கொண்டனவாக விளங்குகின்றன. தேரின் பருமன், கனம், அளவு என்பவற்றுக்கு அமைய சக்கரத்தின் அளவும் மாற்றம் பெறுகின்றது. ஆகம விதிப்படி வடிவமைக்கப்பட்ட தேரானது இறைவன் தன் பரிவாரங்களுடன் வீதியுலாவந்து அடியவர்களுக்கு அருள் பாலிக்கும் ஓர் உற்சவமாக ரத உற்சவம் விளங்குகின்றது. தேர்களில் சுவாமியின் பீடத்துக்கு கீழும், சக்கரங்களுக்கு இடைப்பட்ட பகுதியிலும் பல மரச்சிற்பங்கள் உருவமைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. இவற்றில் புராண இதிகாசக் கதை அம்சங்கள், பூலோக, தேவலோக கதை அம்சங்கள், விலங்கு உருவ வடிவங்கள், பூதங்கள், நாட்டிய மாதரின் சிற்பங்கள், பறவைகள், ஊர்வன ஆகியவற்றின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளமையை எம்மால் காணமுடியும். இவை தவிர குறிப்பிட்ட கோயிலில் அமைந்துள்ள இறைவனின் திருவிளையாடல்கள், இறைவன்சார் கதைகள், கதைக்குறிப்புகளும் ஆங்காங்கே சித்திரிக்கப்பட்டு சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன.

இம்மரச்சிற்பங்களுக்கு இடையில் பித்தளைப் பூண்கள் பொருத்தப்பட்டு மெருகூட்டப்படுதல் மரச்சிற்பக் கலைக்கு அணிசேர் அம்சமாக விளங்குகின்றது. சுவாமி வீற்றிருக்கும் பீடம், அதற்கு அருகில் சுற்றி இடம்பெறும் கப்புகள் மரச்சிற்பக் கலையின் கலைத்துவத்தையும் தேரைச் சுற்றிக் காணப்படும் யாளிகள் என்பனவற்றில் . மரச்சிற்பங்களில் அழகிய வர்ண மூலாம் பூசப்பட்டவையாகவும் ஆங்காங்கே காணமுடிகின்றது. அவ்வாறே சித்திரத்தேரின் அடித்தளத்தில் காணப்படும் அழகிய மரச்சிற்பங்கள் வர்ண மூலாம் இடப்பட்டவையாக காணப்படாதவிடத்தும், மரநிறத்திலேயே மெருகூட்டப்பட்டவையாக விளங்குகின்றன.

எனவே, இயல்பாக உலகளாவிய ரீதியில் சிற்பக்கலையில் உன்னதத்தை வெளிப்படுத்தும் ஓர் ஊடகமாக மரச்சிற்பங்கள் விளங்கியபோதும், உலோகம் மற்றும் கற்சிற்பங்கள் போன்று மரச்சிற்பங்கள் நீண்டகாலம் நிலைத்து நிற்கும் தன்மை குறுகியவையாகவே காணமுடிகின்றது.


- சுபாஷினி பத்மநாதன்




WHAT WOULD YOU LIKE TO PAY FOR A Rs.1,000,000/- LIFE POLICY?
Rs. 2000/- per year?
(That's less than Rs. 6/- per day)
Rs. 3000/- per year?
(That's less than Rs. 9/- per day)
Rs. 6000/- per year?
(That's less than Rs. 17/- per day)
NOW YOU CAN
With Our Pure Life Policy
It is time you got to know
LIC
The Hands that Protect
Life Insurance Corporation (Lanka) Ltd.
Call/Text: 0773 675 482
Tel: 0112 553 596-8
Fax: 0112 590 495
Web: www.liclanka.com
www.proactivation.lk
Make a selfless commitment for your loved ones' protection at a price you will be more than happy to pay.

## கலிங்கத்தின் மரபு வழி ஆடற்கலை

# ஒடிசி



பண்டைய கலிங்கம் பரந்துபட்ட ஒரு திராவிட பூமியாக விரிவுபட்டிருந்தது. செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும் என வரும் தொல்காப்பிய சூத்திரத்தைச் சான்று படுத்தி தமிழ் வழங்கு நாடுகளுள் ஒன்றாக கலிங்கமும் இருந்ததென ஆய்வாளர்கள் கருதுவர். கி.மு 7ம் நூற்றாண்டு தொடக்கம் உயர்ந்த பண்பாடும் நாகரீகமும் கொண்ட மக்கள் வாழ்ந்த நாடாக கலிங்கம் திகழ்ந்துள்ளமையை வரலாறு உறுதி செய்கின்றது. இலங்கை உட்பட பல தென்கிழக்காசிய நாடுகள் கலிங்கரின் செல்வாக்கில் இறுக்கமாக பிணைப்புண்டிருந்தமை வரலாற்று உண்மையாகும்.


கலிங்கத்தின் பலநூறு ஆண்டுகால மரபுவழி ஆடற்கலையாக வளர்ந்து செவ்வியல் வடிவம் பெற்றதே ஒடிசியாகும். கலிங்கத்தின் ஒரு பெருநிலப்பரப்பாக இன்று மிளிர்கின்ற ஒரிசாவின் தேசியத் தன்மை கொண்டே இந்நடனமும் ஒசி என அழைக்கப்பட்டது. ஒசியே ஒடிசியானது. தமிழ்நாட்டு ஆலயங்களில் சதிர் என்ற பெயரில் தேவரடியார் எனும் சிறப்புப் பெயர்கொண்ட உருத்திர கணிகையர் மூலம் ஆலய வழிபாட்டுடன் இணைந்ததாக பரதக் கலை எவ்வாறு வளர்க்கப்பட்டதோ அதே போன்றதாக கலிங்க நாட்டு ஆலயங்களில் மகரி என்ற பெண் கலைஞர்களாலும் கோத்திப்புவா என்ற ஆண் கலைஞர்களாலும் நடன வழிபாடாக வளர்த்தெடுக்கப்பட்ட ஆடற்கலைகளின் ஒன்றிணைப்பாக ஒடிசி அடையாளப் படுத்தப்படுகின்றது. இதில் மகரிப் பெண்கள் எனப்படுவோர் பல நூறு ஆண்டுகால வரலாற்றுக்குரியவர்கள் என்பதனை ஆய்வுகள் வெளிப்படுத்தும். கோத்திப்புவா எனும் ஆண் கலைஞர்கள் சுமார் நாநூறு ஆண்டுகால வரலாற்றுக்குரியவர்கள். தஞ்சைப் பெரிய கோயிலில் அனைத்து வசதி வாய்ப்புக்களுடன் பரதக்கலை வளர சோழ மன்னர்கள் பெரும் பங்காற்றியமைபோன்றே பூரி ஜெகன்நாதர் ஆலயத்தின் மூலம் ஒடிசி வளர கலிங்க மன்னர்கள் பேருதவி புரிந்தனர்.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகால வரலாற்றுக்குரியதென கருதப்படும் ஒடிசி பற்றிய ஆய்வுகளில் பரத முனிவர் தனது நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிடும் ஒட்டா - மகதி எனும் நடனக் கலை தொடர்புறுத்தப்படுவதைக் காணலாம். பண்டைய கலிங்கம் ஒட்டா எனப்பட்டதாகவும் ஒட்டாவே பின்னர் ஒடிசியானதெனவும் அதனடிப்படையில் இந்நடனம் பெயர் பெறுவதாகவும் குறிப்பிடுவர். மேலும் மகதிக் கலைஞர்களே பின்னர் மகரியானரெனவும் கூறுவர்.

கி.மு. 2ம் நூற்றாண்டுக்குரியதான ஒரிசாவின் தலைநகர் புவனேஸ் வரை அண்மித்த உதயகிரி - ராணிகும்பா குகைக் கோவிலில் செதுக்கப்பட்டுள்ள நாட்டியக்காரர் மற்றும் வாத்தியக்காரர்களின் வனப்பு மிக்க சிற்பங்களை அவற்றின் திரிபங்க நிலைத் தன்மை கொண்டு ஒடிசியின் பண்டைய பெருமையினை நம்மால் நிலைநிறுத்த முடிகின்றது. நாட்டியக் கலை கலிங்கத்தின் மிக்க செல்வாக்கினை எட்டியகாலமாக கி.பி 7ம் நூற்றாண்டினைத் தொடர்ந்த காலம் அமையும். இக்காலக் கோவில்களின் கட்டிடக் கலையில் நடராஜர், பார்வதி, விநாயகர் போன்றோரது தாண்டவ வடிவிலமைந்த கோலங்களும் அழகுமிக்க நாட்டியப் பெண்டிரின் அபிநயத் தோற்றங்களும் சிற்பம்சங்களாக இடம்பெற்றுள்ளன. கோணாரக் கோவிலில் வடிக்கப்பட்டுள்ள உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் அழகிய சிற்ப அம்சங்கள் காலத்தை வென்றவையெனலாம். ஒடிசியின் வளர்ச்சியில் மகரி எனப்படும் நடன மகளிரின் வாழ்க்கையும் பின்னிப் பிணைந்தேயுள்ளது. கி.பி. 9ம் நூற்றாண்டைப் பொறுத்தவரை இக்காலம் மிக மேலோங்கியதாகவேயுள்ளது. கோவில்களில் ஆடற்சேவைக்காக மகரிப் பெண்களை மன்னர்கள் நியமித்ததோடு அவர்களை உயர்நிலையிலும் பேணினர். இக்காலத்தே கலிங்கத்தில் பௌத்தம் மற்றும் சமணத்தின் செல்வாக்கு சரிவுற்றதோடு இந்து மதம் துரித வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கலானது.

தஞ்சையில் சோழப் பேரரசன் இராசராசனால் அமைக்கப்பட்ட பெருங்கோவில் பரத நாட்டியத்தின் புகலிடமாக மிளிர்ந்ததைப் போன்றே சோழ கங்கதேவனால் அமைக்கப்பட்ட பூரி ஜெகன்நாதர் ஆலயமும் ஒடிசி நாட்டியத்தின் வளர்ச்சியில் அரும்பங்காற்றியது. அனங்க தேவனால் அவ்வாலயத்தே கட்டப்பட்ட நாடக மந்திர் எனப்படும் அழகிய






நிருத்த மண்டபம் விழாக் காலங்கள் மற்றும் வழிபாட்டு நிகழ்வுகளில் நர்த்தகிகளின் ஆடல் அரங்கமாக செயல் பட்டுவந்துள்ளதோடு பலநூறு ஆண்டுகளைக் கடந்த நிலையிலும் இன்றும் அது நீடித்து நிற்பது ஒரு வரலாற்றுப் பெருமையாகவே அமையும்.

ஒடிசியின் பொதுத் தோற்றமானது சதிரை ஒத்ததாகவேயுள்ளது. இரண்டிலுமே அரைமண்டி ஒரு முக்கிய இடத்தைப்பிடிக்கும். எனினும் சதிரில் துவிபங்க நிலையே பெரும்பாலும் கையாளப்படும் தன்மையில் ஒடிசியில் திரிபங்க நிலை அதிகளவு இடத்தைப் பிடித்துக்கொள்கின்றது. உடல் மூன்று வளைவுகளாக அமைவுறுவதே திரிபங்க நிலையாகும். நிகழ்த்துகையின் போது தலையொரு பங்கமாகவும் தோளிலிருந்து இடுப்பு வரையான பகுதி ஒரு பங்கமாகவும் இடுப்பிலிருந்து பாதம் வரையான பகுதி ஒரு பங்கமாகவும் முழு உடலும் மூன்றாக ஒடிக்கப்படும் வடிவத்தை இதன் வெளிப்பாடு கொண்டதாக அமையும். கலிங்கநாட்டுச் சிற்பக் கலையிலும் இத்தோற்றப்பாடே முக்கியத்துவம் பெறுகின்றது. நடன வகைகளைப் பொறுத்தவரை ஒடிசி ஆடற்கலையானது நிருத்தம், நிருத்தியம் ஆகிய இரண்டினையும் குறித்த வெளிப்பாடாகக் கொண்டுள்ளமை தெரியும். சதிரின் அழுத்தத்தினையும் மணிப்புரியின் குழைவினையும் இது பொதுத் தன்மையாகக் கொண்டுள்ளமை அவதானிப்புக்குரியதெனினும் முக பாவனையைப் பொறுத்தவரை இது மணிப்புரியிலும் மேலோங்கியதாகவே தென்படுகின்றது. தலை, இடை, கால் மூன்றையும் நேர்த்தியாக அசைத்தாடும் திரிபங்கத் தன்மையில் வத்யசலனம் எனப்படும் இடுப்பசைவே ஒடிசியின் சிறப்பம்சம் எனலாம். விநாயகருக்கும் ஏனைய தெய்வங்களுக்கும் பாடப்படும் மங்கள சரணத்துடன் ஆரம்பமாகும் இந்நடனம் பின்னர் பூமித் தாய்க்கும் சபையோருக்கும் தொடர்ந்து பக்கவாத்தியக்காரர் மற்றும் பாடகர்களுக்கும் வணக்கம் செலுத்துவதோடு நிறைவுறும்.

ஒடிசியின் நடன நிகழ்வுகளில் திரிபங்கத்துடன் ஏனைய பிரிவுகளாக சௌகம், சைநிருத்தியம், பல்லவி, அபிநயம், மோஷியம் என்பனவும் இடம்பெறுகின்றன. தோள், முழங்கை, முழங்கால், கணைக்கால் என நான்கு அங்க வளைவுகளை அமைத்து ஆடுவதே சௌகம் எனப்படும். மிகுந்த விசையோடு பல கோலங்களில் மாறி மாறி ஆடுவது சைநிருத்தியம் ஆகும். ராகம், தாளத்திற்கேற்ப அசைந்து அசைந்து ஆடுவது பல்லவியாகும். பாடல்களுக்கேற்ப அபிநயித்து ஆடுவது அபிநயமாகும். கடினம் மிக்கதான இராகங்களில் வெவ்வேறு பாவங்களுடன் விசையோடு ஆடுவது மோஷியம் ஆகும். பல்லாண்டு காலமாக மூன்று வெவ்வேறான வழிகளில் ஒடிசியின் வளர்ச்சி முன்னெடுக்கப்பட்டிருப்பது ஆய்வுகளில் உறுதிசெய்யப்பட்டுள்ளது.



1. ஆலயங்களினூடாக தேவதாசி முறையில் வளர்ச்சியுற்ற மகரிப் பெண்டிரின் ஆடல்கள்

2. மன்னர்களின் அரண்மனைகளில் தொடராக இடம்பெற்று வளர்ச்சியுற்ற நர்த்தகிகளின் ஆடல்கள்


3.பெண்களுக்குரிய ஆடை அணிகளை அணிந்து ஆடும் கோத்திப்புவா எனப்படும் இளைஞர்களான ஆண் கலைஞர்களால் வளர்ச்சியுற்ற ஆடல்கள் என்பவையே அவை

ஒடிசிக்கான உருப்படிகளை பலர் எழுதியிருக்கின்றனர். இதில் ஜெயதேவரின் கீத கோவிந்தப் பாடல்கள் மிகவும் முக்கியத்துவம் பெற்றவை. பூமிப் பிரணாம், மங்கள சரண், விக்னராஜ பூஜா, படு நிருத்தியம், இஷ்டதேவ வந்தானா, ஸ்வர பல்லவி, அஷ்டபதி என்பனவும் சில ஒரியப் பாடல்களும் ஒடிசியில் இடம் பெறுவதைக் காணலாம். இதற்கான ஆடையணிகள் பெரும்பாலும் பரத நாட்டியத்திற்கு உரியவாறே அமைகின்றது. ஒரிசாவின் அழகுமிகு வண்ணப் பட்டுச் சேலைகளையும் தங்கம் மற்றும் வெள்ளியிலான நகைகளையும் இதில் அணிவர். எழிலான கொண்டைபோட்டு மலர்களால் அலங்கரிப்பர். பரத நாட்டியத்தைப் போன்றே வாய்ப்பாட்டும் கைத்தாளமும் இதற்கு முக்கியமானவை. மத்தளம், சாரங்கி, பிடில், சித்தார், தம்புரா போன்ற இசைக் கருவிகள் இதற்கு இசைக்கப்படுகின்றன.

கி.பி 16ம் நூற்றாண்டுவரை மிகவும் உன்னத நிலையை எட்டியிருந்த ஒடிசி ஆடற்கலை, ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் இந்திய நாட்டில் ஏனைய ஆடற்கலைகளுக்கு ஏற்பட்ட மிகப் பாரிய பின்னடைவைப்போல் புறம் தள்ளப்பட்ட ஆடற்கலையாக நலிவுறலாயிற்று. நாட்டிய மகளிர் சமூக நிலையில் ஒதுக்கப்பட்டோராயினர். பூரி ஜெகன்நாதர் ஆலயத்தின் மரபுவழிக் கலைஞர்களான மகரிப் பெண்டிரின் ஆடல்கள் இல்லாதொழிக்கப்பட்டன. அரண்மனை நர்த்தகிகளின் செயல்பாடும் படிப்படியாக ஒழிந்தது. கோத்திப்புவா ஆடல்கள் நிலைபெற்றிருந்தாலும் அதனால் உரிய வளர்ச்சியை எட்ட முடியவில்லை. நாடு சுதந்திரம் அடையும்வரை நீடித்த இந்நிலை சுதந்திரத்தின் பின்னர் துரிதகெதியில் வளர்ச்சிபெறலாயிற்று.

பண்டைய இந்திய பெருநிலப் பரப்பின் வரலாற்றுப் பெருமைமிக்க கலிங்க தேசம் பல நூறு ஆண்டுகளாக தனது மரபுவழி ஆடற் கலையென கட்டிக்காத்து செம்மைப்படுத்தி வளர்த்தெடுத்த ஒடிசி நடனம் இன்றைய தென்னாசிய ஆடற்கலைகளுள் செவ்வியல் நடனமாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளமை அதன் பெருமையினைக் குறிப்பதாகவே அமையும்.

-தாக்ஷாயினி பிரபாகர்-
நடனத்துறை விரிவுரையாளர்
சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக் கழகம்



# வைடூரியம்

தமிழர்கள் மிகப் பண்டைய காலம் தொடக்கம் இயற்கையுடன் இரண்டறக் கலந்து வாழப் பழகியவர்கள் என்றால் அது மிகையாகாது. அவர்கள் நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் முதலிய ஐம்பூதங்களை வணங்கினார்கள். இயற்கையாகக் கிடைக்கும் பலன்களைத் தம் வாழ்வோடு இணைத்துக் கொண்டார்கள். தமிழர்கள் மிகப் பண்டைய காலம் தொடக்கம் பல வகையான நகைகளை உருவாக்கி அணிந்தார்கள் என்பதற்கு பல சான்றுகள் எம்மிடம் உண்டு. கோவிற் சிற்பங்களில் பல கிடைத்தற்கரிய நகைகள் சிற்பங்களாகச் செதுக்கப் பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. அவர்கள் வாழ்க்கையில் நகைகள், நவ மணிகள் என்பன முக்கியத்துவம் பெற்றுள்ளமையை பண்டைய நூல்கள் எடுத்துரைக்கின்றன.

பாண்டிமாதேவியின் சிலம்பில் பதிக்கப்பட்ட பரல்கள் முத்துப்பரல்கள் என்றும், கண்ணகியின் சிலம்பில் பதிக்கப்பட்ட பரல்கள் மாணிக்கப் பரல்கள் என்றும் சிலப்பதிகாரத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளமை இங்கு நினைவுகொள்ளத்தக்கது. அரசர்கள், பேரரசர்கள் ஆகியோர் பொறுமையின் உதாரணமான பூமித்தாயில் இருந்து கிடைத்தற்கரிய செல்வங்களை எடுத்து மாட மாளிகைகளிலும் கூட கோபுரங்களிலும் பதித்து மகிழ்ந்தார்கள். அண்டை நாடுகளைப் போரிட்டு வென்று அரண்மனைக் களஞ்சியத்தில் இருந்த செல்வங்களைக் கைப்பற்றினார்கள். தமிழர் தம் வாழ்வோடு இயற்கைக்கு மிக நெருங்கிய தொடர்பு உண்டு என்பதற்கு உழவுக்கு உதவிய சூரியனை வணங்கும் தைத்திருநாள் சான்றாகும்.

பொன் என்னும் பொருளுக்கு ஆடகம், காஞ்சனம், தங்கம், இரணியம், தனம், கனகம், தமனியம், பீதம், சாம்புநதம் முதலிய பெயர்கள் வழங்கப்படுகின்றன. இவ்வளவு சிறப்புமிக்க தங்கத்தில் நவரத்தினங்களில் ஒன்றாக விளங்கும் வைடூரியக் கற்களை பதித்து அணியும் வழக்கம் எம்மிடம் மிக நீண்ட காலமாக இருந்து வருகிறது. மிக அண்மைக் காலமாக ஆங்கிலேயர்கள் இக்கற்களில் அதிகளவு ஆர்வம் காட்டி வருகிறார்கள். அவர்கள் இக்கற்களை **Cat's Eye** என செல்லமாக அழைப்பார்கள். இரவு வேளைகளில் பூனையின் கண் எவ்வாறு காட்சி தருகிறதோ? அவ்வாறே வைடூரியக் கற்கள் காட்சி கொடுக்கும். இதன் காரணத்தாலேயே இப்பெயர் காரணப் பெயராக வழங்கப்படுகிறது. வேப்பம் பழம் அல்லது தேன் போன்ற நிறமும், நடுவில் வெள்ளிக் கம்பி போன்ற கோடும் கொண்டு பிறழும் தன்மை உடைய கற்கள் மிகத் தரமானவை என நவரத்தினக் கல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். நவரத்தினக் கற்களுக்கும் கிரகங்களுக்கும் இடையில் மறுக்க முடியாத ஒரு வகை



நெருக்கம் இருப்பதாக ஜோதிடர்கள் கூறுகிறார்கள். நவரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட நகைகள் உடலில் படும்போது பலவிதமான நன்மைகள் உருவாகும் என கூறுகிறார்கள். வைடூரியத்தை வைரக் கற்கள் போன்று பட்டை தீட்டுவதில்லை. இக்கற்களை ஈச்சங்கொட்டை அல்லது கோப்பிக் கொட்டை போன்ற வடிவத்தில் தேய்த்து உருவாக்குவார்கள். உலகிலே தரமான வைடூரியம் கிடைப்பது மிக மிக அரிது. அவ்வாறு கிடைக்கும் வைடூரியத்துக்கு மதிப்பும் அதிகமாக இருக்கும். இலங்கை, இந்தியா (கேரளா), பிரேசில், உருகுவே, தென் அமெரிக்கா, வட அமெரிக்கா , அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் வைடூரியக் கற்கள் கிடைத்தாலும், இலங்கையில் இருந்து கிடைக்கும் முதற்தர வைடூரியக் கற்களுக்கு உலகச் சந்தையில் நல்ல வரவேற்புக் கிடைக்கின்றது.

ஏழு வகையான கற்கள் நிலத்திலும், இரண்டு வகைக் கற்களாகிய முத்து, பவளம் என்பன கடலிலும் எடுக்கப்பட்டு நவரத்தினம் என்ற பெயருடன் ஒன்று சேருகின்றன. நவரத்தின மோதிரத்தை முறைப்படி செய்பவர்கள் மூன்று வரிசைகளாகவும், ஒவ்வொரு வரிசையிலும் மூன்று கற்களாகவும் பதிப்பர். கற்கள் குற்றமற்ற நிலையில் இருக்க வேண்டும். முதல் வரிசையில் புருடராகம், வைடூரியம், மரகதம் ஆகியவையும் இரண்டாவது வரிசையில் நீலம், மாணிக்கம், வைரம் என்பனவும் மூன்றாம் வரிசையில் கோமேதகம், பவளம், முத்து ஆகியனவும் இடம்பெற வேண்டும் என ஜோதிடம் கூறுகிறது. நவரத்தினங்களின் பலனைப் பெற விரும்புபவர்கள் அக்கற்களை பொதுவாக மோதிரத்தில் பதித்தே அணிய வேண்டும். ஏனைய நகைகளில் பதிக்கும்போது முழுமையாக பலன் கிடைப்பதில்லை. வைடூரியக் கற்கள் கையில் படும்படி மோதிரம் செய்து அணிந்தால் வயிற்றுக் கோளாறு நீங்கும்;' நீண்ட ஆயுள் கிடைக்கும்; மன அமைதி கிடைக்கும்; தெய்வீக அருள் வளரும் என ஜோதிட வல்லுனர்கள் எடுத்துரைக்கிறார்கள். சித்த வைத்திய முறைப்படி பசுமம் செய்து உண்டால் கபம், பித்தம், சளித்தொல்லை, சீரணம் இன்மை போன்ற நோய்கள் இல்லாதொழியும் என சித்த வைத்தியம் எடுத்துரைக்கிறது.

குற்றமற்ற வைடூரியக் கல்லை 2, 11, 20, 29, 7, 16, 25 ஆகிய திகதிகளில் பிறந்தவர்கள் அணியலாம். மேலும் பிறந்த திகதி, பிறந்த மாதம், பிறந்த வருடம் ஆகிய மூன்றையும் கூட்ட வருகின்ற கூட்டு எண் 2, 7 வருகின்ற சந்திரன், கேது ஆதிக்கக்காரர்கள் அணியலாம். இதன் மூலம் மன அமைதி கிடைக்கும் என்பதுடன் செல்வ விருத்தியும் பெறலாம். அதாவது கேதுவிற்குரிய கல்லாக வைடூரியம் கருதப்படுகிறது. ஏழாம் எண்ணில் பிறந்தவர்களும், கேது திசை நடப்பவர்களும், சாதகத்தில் கேது நன்மை கொடுக்கக்கூடிய இடத்தில் உள்ளவர்களும் வைடூரியத்தை மோதிரமாக செய்து அணிவதன் மூலம் சிறந்த பலனைப் பெறலாம். இக் கல்லை அணிவதால் நாக தோஷம் நீங்கும் என்றும் வற்றாத செல்வம், ஞானம், கல்வி, அறிவு என்பன கிடைக்கும். என்றும் புகழும் அதிஷ்டமும் தானாகக் கிடைக்கும் என்றும் ஜோதிடம் கூறுகிறது. 'மாதுரு நெடுமால் முன்னம் வானவர்க் கமுதம் ஈயும் போது நீ நடுவிருக்கப் புகழ் சிரம் அற்றுப் பின்னர் ஒதுறும் அரச நாகத் துயர் சிரம் ஐந்து பெற்ற கேதுவே போற்றி போற்றி கீர்த்தி பெற ரட்சிப்பாயே' என்னும் கேதுவிற்குரிய துதியைப் பாடி, வைடூரிய மோதிரத்தை அணிவதால் கேது பகவானின் அருட் கடாட்சம் கிடைக்கும்.

வலாசுரனுடைய மயிராகிய வைடூரியம் இளாவிருத கண்டத்தில் முதலில் தோன்றியது என பண்டைய நூல் எடுத்துரைக்கின்றது. வைடூரியம், கோரக்கம், மரகதம், சிங்களம், பாரசீகம், பொதியமலை, திரிகூடம் முதலாய இடங்களிலும் பிற தீவுகளிலும் உண்டாகியது என்பர். அன்றியும் அலைகடலிலும் மேகங்கள் இடிக்கும்போதும் தோன்றும் என பழைமையாய நூல்கள் எடுத்துரைக்கின்றன. வைடூரியம் மூங்கிலின் இலை, மயிலின் கழுத்து, பூனையின் கண் ஆகிய இவற்றில் ஒன்றன் நிறத்தினைக் கொண்டு கனத்ததாகவும், தெளிவுள்ளதாயும், திண்ணியதாயும், மெல்லியதாயும் விளங்கும் என அவை உரைக்கின்றன. ஆனாலும் வைடூரியம் சூரியனின் ஒளியும் தேன்துளியின் நிறமும் போன்றும் விளங்கும் என சிலப்பதிகாரம் கூறும். வலம், இடம், மேல், கீழ் என்ற நான்கு இடங்களிலும் ஒளி வீசும். இவை முறையே அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வருக்கும் உரியனவாகும்.பூசித்து அணியக் கடவர் எனக் கூறப்படுகிறது.

கருத்து: வித்துவான் வசந்தா வைத்தியநாதன்
தொகுப்பு - பிரியங்கா



# பப்புவா நியூகினியாவின் விவசாயத் திறமைமிக்க
# ஹூலி மக்கள்

பெரும்பாலும் ஒவ்வொரு நாட்டிலும், அந்தந்த நாட்டிற்குரிய ஆதிவாசிகள், நாட்டின் ஒரு புறமாக வாழ்ந்து வருதல் நாமறிந்ததுதான். கால ஓட்டத்திற்கேற்ப நாகரீக வளர்ச்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பாத இவர்கள், நவீன காலத்திலும் தமது பண்டைய மரபு மற்றும் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ளாமல், அவ்விதமாக தொடர்ந்து வாழவே பெரிதும் விரும்புகிறார்கள். அதில் பெருமையும் கொள்கிறார்கள். இவை எல்லாவற்றையும் மீறிக்கொண்டு, காலத்தின் கட்டாயத்தினால் நவீன நாகரீக வாழ்க்கைமுறையின் சில அம்சங்கள் அவர்தம் வாழ்வில் ஊடுருவுகின்றன.

பப்புவா நியூகினியாவில் வாழ்ந்து வருகின்ற ஆதிவாசிகளின் ஒரு பகுதியினரான ஹூலி (Huli) மக்கள் பற்றி இங்கு பார்க்கலாம். அவுஸ்திரேலியாவுக்கு வடக்காக சமாந்தர ரேகைக்குத் தெற்காக இத்தீவு உள்ளது. 426,000 சதுர கிலோமீட்டருக்கு மேல் பரப்பளவுள்ள இத்தீவின் தெற்கில் அவுஸ்திரேலியாவும், கிழக்கு மற்றும் தென்கிழக்கில் சொலமன் தீவுகளும், மெலனேசியன் நாடுகளும் உள்ளன. தெற்கு மற்றும் தென் மேற்கில் பிலிப்பீன்ஸ், தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளும் உள்ளன. இந்நாட்டின் மத்திய மலை நாட்டில் ஹூலி மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இங்கு இவர்கள் இனக் குழுக்களாகவும், உப இன குழுக்களாகவும் வாழ்கின்றனர். முதல் பப்புவா மக்கள் 45 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சொலமன் தீவுகளில் இருந்து வந்து குடியேறியவர்கள் என வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். அந்நாட்டில் 750 க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுவதாகக் கூறப்படுகின்றது. அதற்குக் காரணம் இனக் குழுக்கள் தனித் தனியாகப் பிரிந்து வாழ்ந்து வருவதினால் ஆகும்.

பப்புவா நியூகினியாவில் வாழ்ந்து வருகின்ற ஆதிவாசி மக்களில் ஹூலி மக்கள் மிகவும் நயப்புக்குரியவர்கள் எனக் கூறப்படுகிறது. காடு முரடான மலைப்பகுதிகளின் காட்டுப் பிரதேசங்களில் வாழ்கின்ற ஹூலி மக்கள் நிலத்தை வெட்டித் திருத்தி விவசாயம் செய்து வாழ்பவர்களாக இருக்கிறார்கள். ஓரிடத்தில் விவசாயம் செய்து சில காலம் வாழ்ந்த பின்னர், அந்த இடத்தை அப்படியே விட்டுவிட்டு, வேறோர் இடத்துக்குச் சென்று, நிலத்தைக் கொத்திப் பயன்படுத்தி மீண்டும் விவசாயத்தை மேற்கொள்ளுகின்றார்கள். ஹூலி மக்கள் வாழ்கின்ற பகுதி, காடுமுரடான மலைத்தொடர்களும், ஈரலிப்பான பள்ளத்தாக்குகளும், நதிகளும் கொண்ட பிரதேசமாகும். சுண்ணாம்புப் பாறைகள் காணப்படும்





அப்பிரதேசத்தில் ஏராளமான குகைகளும், துவாரங்களும் காணப்படுகின்றன. மிக உயர்ந்த மலைகளின் சரிவுகளில், அடர்ந்த மலைக்காடுகள் காணப்படுகின்றன. இந்த மழைக்காடுகளில், பல்வேறு மரங்கள், மூங்கில்கள் மற்றும் பயன்தரும் செடிகொடி வகைகள் உள்ளன. இவை இம்மக்களுக்கு வீடுகளை அமைக்கவும், மற்றும் பயிர்கள் உணவுகளுக்கும் பயன்படுகின்றன.

இங்கு பல இடங்களிலும் காணப்படும் மண்ணின் தன்மை சர்க்கரை வள்ளிக் கிழங்கை (Sweet potato) உற்பத்தி செய்வதற்கு உகந்ததாக இருக்கின்றது. அதுவே இம்மக்களின் பிரதான உணவுமாகும். மற்றும் விவசாய நிலங்களும் காணப்படுவதால் பயிர்களை விளைவிக்கவும் ஏதுவாக இருக்கிறது. இவர்கள் சிறந்த விவசாயிகளாக விளங்குகின்றனர். அத்துடன் நீர் நிலைகளில் காணப்படும் பிராணிகள், பறவையினங்கள் ஆகியனவும் ஹூலி மக்களின் வாழ்வில் முக்கிய சூழல் அம்சங்களாக விளங்குகின்றன. வேட்டையாடுதலையும் செய்கின்றனர். பப்புவா நியூகினியாவின் தென்பகுதி மேட்டு நிலங்களிலும் ஹூலி மக்கள் வாழ்கின்றனர். இவர்களது மக்கட் தொகை ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் என சமீபத்தைய கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. ஹூலி மக்கள், ஹூலி மற்றும் டொக் பிசின் என்ற மொழிகளைப் பேசுகின்றனர். சிலர் ஆங்கிலமும் பேசுகின்றார்கள்.

இங்கு, ஆண்களும் பெண்களும் வெவ்வேறாகவே வாழ்கின்றனர். திருமணமாகாத ஆண்கள் வரலாற்று ரீதியாக பெரும் வீடுகளில் வாழ்ந்துள்ளனர். தற்போது இம்முறை மிகக் குறைந்து, அரிதாகவே காணப்படுகின்றது. மரபு ரீதியாக மிகக் குறைந்த ஆடைகளை ஆண்கள் அணிகின்றனர். வர்ணக் களி மண்ணால் தமது உடலை அலங்கரித்துக் கொள்வார்கள். அத்துடன் கொண்டாட்டங்களின் போது, அவிஸ்தாரமான தலையலங்காரங்களைச் செய்து தோன்றுவர்.


ஹூலி சமூகத்தில் பலதார மணம் வழக்கத்தில் உள்ளது. ஆண்கள் பல பெண்களைத் திருமணம் செய்யலாம். ஆனால் பெண், ஒரு காலத்தில் ஒரு கணவனுடனேயே வாழவேண்டும். அத்துடன் நெருங்கிய உறவினர்களிடையே திருமணம் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. திருமணங்கள் பெற்றோரால் ஒழுங்கு படுத்தப்பட்டவையாக இருக்கலாம் அல்லது ஓர் ஆணும் பெண்ணும் விரும்பியும் மணம் முடிக்கலாம். ஒரு பெண்ணை மணம் முடிப்பதற்கு குடும்பத்தினருக்கு சீதனம் வழங்க வேண்டும். பெரும்பாலும் இந்தச் சீதனம் பன்றிகளாகவோ அல்லது வேறு கால்நடைகளாகவோ இருக்கலாம். மணப்பெண் வசிப்பதற்கு ஒரு வீட்டினை அமைக்கும் பொறுப்பு மணமகனுடையதாகவே இருக்கிறது. திருமணம் செய்து கொண்ட பெண்ணின் பொறுப்பு, பிள்ளைகளைப் பெற்று வளர்த்தெடுப்பது, தோட்டங்களைப் பேணுவது, பன்றிகளை வளர்த்தெடுப்பது ஆகியனவாகும்.











ஆண் பிள்ளைகள் சுமார் பத்து வயது நிரம்பியதும் தாய் வீட்டை விட்டு தகப்பன்மாருடன் சேர்ந்து இருப்பார்கள். விவாகரத்தும் அங்கு உண்டு. விவாகரத்து கோருவதற்கு பெரும்பாலும் காரணமாகக் கூறப்படுவது மனைவி, பிள்ளைகளைப் பெற்றுத்தர முடியாதவளாக இருக்கிறாள் என்பதாகும். விவாகரத்து வழங்கப்பட்டால், கணவன் தனது மனைவி குடும்பத்தினரிடம் திருமணத்தின்போது தான் கொடுத்திருந்த பன்றிகளை மீளத் தரும்படி கேட்பதுண்டு.

புல்லினால் அமைக்கப்பட்ட குடிசைகளில் ஹூலி மக்கள் வாழ்கின்றனர். ஒரு சமூகக் குழுவில் பொதுவாக இரண்டில் இருந்து நான்கு வீடுகள் இருக்கும். ஆண்கள் இணைக்கப்பட்டிருக்கும் குடிசைகளில் வாழ்வார்கள். பெண்களும் பன்றிகளும் ஒரே குடிசைகளில் இருப்பார்கள். ஆண்களின் சொத்துகளாகவே பெண்களும் பன்றிகளும் இருக்கும். ஆனால் நவீன காலத்தில் சில சமூகங்களில், பெண்கள் பன்றிகளுடன் வாழாமல் தனித்து வைக்கப் பட்டிருக்கின்றார்கள். அதற்குக் காரணம் கிறிஸ்தவ மிஷனிரிமார் இம்மக்கள் மீது கொண்டிருக்கும் செல்வாக்கினாலாகும். இவர்களது பிரதானமான உணவாக விளங்குவது, கிழங்கு வகைகளாகும். இப்பயிர்கள் நன்கு திட்டமிடப்பட்டு, தோட்டங்களில் நன்கு நீர்ப்பாசனம் செய்யப்பட்டு, பயிரிடப் படுகின்றன. இந்நாட்டுக்கு முதன் முதலாக வந்தவர்கள், இவர்களது விவசாயத் திறனைப் பார்த்து அதிசயித்தனராம். இவர்கள் விவசாயத்தில் பெருமளவில் தங்கியிருந்தாலும், கிராமத்தில் வளர்க்கப்படும் பன்றிகளின் இறைச்சியையும் மற்றும் கங்காரு போன்றவற்றின் இறைச்சியையும் உண்கின்றனர்.

ஏனைய ஆதிவாசிகளைப் போல், ஹூலி ஆதிவாசிகளும் தற்போதும் உடையணிகின்றார்கள். ஆண்கள் இடுப்பில் மிக குறைந்த ஆடையை அணிகிறார்கள். பெண்கள் புல்லினால் ஆன பாவாடைகளை அணிகின்றனர். இவர்களும் மரபு ரீதியான நம்பிக்கைகள், பழக்கவழக்கங்களைக் கொண்டிருப்பதால், மலைப்பாறைகள், தண்ணீர், மலைகள், செடிகள் எல்லாவற்றிலும் உயிர் இருப்பதாக நம்புகிறார்கள். இந்த நம்பிக்கையின் காரணமாக ஆவிகளை அமைதிப்படுத்த பல்வேறு நிவேத்தியங்களைச் செய்கிறார்கள். மந்திர தந்திரங்கள், சூனியங்கள் மூலமாகவே சுகவீனங்கள் மற்றும் துரதிர்ஷ்டங்கள் வருகின்றன என ஹூலி மக்கள் நம்புகின்றனர். இருப்பினும் மேற்குலக சமயத்தின் செல்வாக்கினால் தற்போது 66 சதவீதமான மக்கள் தமது மதம் கிறிஸ்தவம் என்கிறார்கள். இருந்தபோதும் கிறிஸ்தவத்தைப் பின்பற்றும் பலர் ஆவி உலகை நன்கு அறிந்தவர்களாக தற்போது இருக்கின்றார்கள். பப்புவா நியூகினியின் முதல் ஆதிவாசிகள், இந்தோனேஷிய தீவுகளில் இருந்துதான், 50 ஆயிரம் வருடங்களுக்கு முன்பு வந்திருக்க வேண்டும் எனவும் நம்பப்படுகிறது. பல்வேறு காலத்திலும் பல்வேறு மக்கட் குழுக்கள் இத்தீவின் மலைப்பகுதிகளில்

குடியேறி தமக்கென ஒரு வேறான கலாசாரத்தோடு வாழ்ந்து வந்துள்ளார்கள். தமக்கென ஒரு மொழி, தமக்கென ஒரு கலாசாரம் என வெவ்வேறாக வாழ்ந்ததினால் இங்கு ஏராளமான காட்சிகளையும் காண முடியும்.

முதன்முதலாக இந்தத்தீவு ஐரோப்பியர்களுடன் தொடர்பைக் கொண்டது. 16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலாகும். இத்தீவை முதலில் கண்டுபிடித்தவர் போர்த்துக்கேயக் கண்டுபிடிப்பாளரான ஜோர்ஜி ஐ மெனெசாஸ் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவர் இத்தீவுக்கு 'இல்ஹாஸ் டொஸ் போபஸ்'(தாறுமாறான தலைக் கேசம் உள்ள மக்களின் நாடு) எனப் பெயரிட்டார். இருப்பினும் 1800 களின் நடுப்பகுதி காலத்தில் ஐரோப்பிய மிஷினரிமாரும், வர்த்தகர்களும் அங்கு செல்லும் வரை இடையில் யாரும் அங்கு செல்லவில்லை. இவர்களும் கரையோரப் பிரதேசங்களில் தான் தங்கினார்கள்.

பல தசாப்தங்களின் பின் இத்தீவுக்கு ஜெர்மனியர்கள், பிரிட்டிஷ்காரர்கள், டச்சுக்காரர்கள் ஆகியோர் உரிமை கோரினார்கள். இருப்பினும் முதலாம் உலக மகா யுத்தத்தின் பின் அவுஸ்திரேலியாவின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் இத்தீவு வந்தது. 1960 களில் நாட்டில் குறிப்பிடத்தக்க ஒரு சுதந்திரக் கிளர்ச்சி ஏற்பட்டு, 1975 ஆம் ஆண்டு பப்புவா நியூகினி பூரண சுதந்திரம் பெற்றது. இன்றும் பல மக்கள் கிராமங்களில் மரபு ரீதியான ஆதிவாசிகளின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி வாழ்கின்றனர். மிஷனிரிமாரின் நடவடிக்கைகள் காரணமாக அங்கு கிறிஸ்தவ சமயம் பரவியது. மேற்கு நாட்டுக் கல்வியும் பரவத் தொடங்கியது. வீதியமைப்பு, வானொலி நிலையங்கள் மற்றும் சில வசதிகளும் மேற்கொள்ளப்பட்டன. இவை பெரும்பாலும் கரையோரப் பகுதிகளைச் சார்ந்தே இருந்தன. ஐரோப்பியர்களின் குடியேற்றங்களைத் தொடர்ந்து கரையோரப் பகுதிகளில் நகரங்கள் உருவாகின என்பதையும் இங்கு குறிப்பிடலாம்.

இந்த மக்களை நான்கு இனக் குழுக்களாகப் பிரிக்கலாம். பிரதான தீவின் வடக்குப் புறத்தில் இருந்து வந்த நியூகினியன்கள், (தெற்கில் இருந்து வந்த) பப்புவன்கள், மேட்டு நிலத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் தீவினர் எனக் குறிப்பிடலாம். ஐரோப்பியர்கள் இந்நாட்டுக்கு வருமுன்பு தெற்குக் கரையோரத்தில் வாழ்ந்த மக்கள் நரமாமிசம் சாப்பிடுபவர்களாக இருந்துள்ளனர். பாடசாலையிலும் அரசாங்கத்திலும் ஆங்கிலம் போதனா மொழியாகவும் உத்தியோக மொழியாகவும் இருந்தாலும், இத்தீவில் சுமார் 800 மாவட்ட மொழிகள் பேசப்படுகின்றன.

ஹூலி ஆண்கள் செயற்கைத் தலையணியை (விக்) தலையில் வைத்துக் கொள்ளும் வழக்கம் உடையவர்கள். ஒருவரிடம் ஆகக்குறைந்தது இரண்டு தலையணிகள் இருக்கும். ஒன்றை நாளாந்த பாவனைக்கும், மற்றையதை விசேட வைபவங்களில் அணிவதற்குமாக வைத்துக் கொள்வர். 15, 16 வயதில் உள்ள இளைஞர்கள் 'பிரமச்சாரி பாடசாலை'க்குச் சென்று தமது சொந்த தலை மயிரில் தலையணியைச் செய்யப் பழகுவார்கள். எப்படி தலைமயிரை வளர்ப்பது, அதை வைத்து எப்படி தலையணி தயாரிப்பது என்பதனை ஓர் ஆசிரியர் அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பார். அதுமட்டுமன்றி ஹூலி இன கலாசாரத்தினையும் கற்பிப்பார். ஒரு தலையணியைச் செய்வதற்கு பதினெட்டு மாதங்கள் பிடிக்குமாம். இக்காலப்பகுதியில் அவர்கள் யுவதிகளைச் சந்திக்க அனுமதிக்கப்படுவதில்லை. பெண்கள் தங்களைப் பலவீனமாக்குகின்றார்கள் என அவர்கள் நம்புகின்றார்கள்.

### பப்புவா நியூகினியா


| | | |
|---|---|---|
| தலைநகர் | : | போர்ட் மோர்ஸ்பி |
| மக்கட்தொகை | : | 6,064,515 |
| தேசிய மொழிகள் | : | **Tok Pisin, English,Hiri Motu** |

விமானம் மூலம் எவ்விதம் செல்லலாம் ?
பப்புவா நியூகினியாவுக்கு செல்வதற்கு போர்ட் மோர்ஸ்பிக்கு 8 கி.மீ அப்பால் ஜாக்ஸன் சாவதேச விமான நிலையம் உத்தியோகபூர்வ வழியாக உள்ளது. உள்ளூர் விமான பயணங்களும் இங்கிருந்து செய்ய முடியும்.

மலைகளில் அவர்கள் கஷ்டமான வாழ்க்கையை மேற்கொள்கின்றார்கள். அவர்கள் நன்கு உடற்பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்பது அவர்களைப் பார்த்தால் புரியும். தினமும் அவர்கள் சில தடவைகள் நதிக்கரைக்குச் சென்று 'புனித' நீரை அருந்துவதுடன் 'புனித' நீரைத் தலையிலும்,







உடலிலும் தெளித்துக் கொள்வார்கள். தலைமயிரை அழகுபடுத்திக் கொள்ளவே அவ்விதம் செய்கின்றார்களாம். பப்புவா நியூகினியின் தென்பகுதி மேட்டுநில மாகாணத்தைச் சேர்ந்த ஹூலி மக்கள் இறந்தவருக்கு துக்கம் அனுஷ்டிப்பதும் கலாசார ரீதியில் தான் அமைந்திருக்கின்றது, பெண்கள் தமது உணர்ச்சிகளை அழுது வெளிப்படுத்த வேண்டும் என எதிர் பார்க்கின்றனர். ஆனால் ஆண்கள் அவ்விதம் உணர்வை வெளிக்காட்டுதல் விரும்பப்படுவதில்லை. ஆனால் சில இனக்குழுக்களில் ஒருவர் சாகக் கிடந்தால் அல்லது திடீரென இறந்து விட்டால், மரணத்தின் காரணங்களை அறிய அல்லது அதனோடு சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய மந்திரவாதியை அடையாளம் காண, 'மீடியங்கள்' அழைக்கப்படுகிறார்கள். மரணத்தைத் தடுக்க அல்லது இறந்தவரின் ஆவியை விடுவிக்க வேண்டிய சடங்குகளும், பலிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மரணம் நிகழ்ந்தால் தமது கவலையைத் தெரிவிக்க உறவினர்கள் ஒன்று கூடுகிறார்கள். அவர்களில் சிலர் அழுவதுண்டு. சிலவேளை துயரத்தில் தமது விரல்களை வெட்டியும், பற்களைப் பிடுங்கியும், மொட்டையடித்தும், தலையிலுள்ள கேசங்களைப் பிடுங்கியும் விடுவர். தற்போது அடக்கம் செய்வது பொதுவானதாக இருக்கிறது.

தற்போதும் ஆதிவாசி இனக்குழுக்களிடையில் சண்டைகள் இடம் பெறுகின்றன. அவ்விதம் சண்டையில் உயிரிழந்த ஒருவரின் மனைவி, நீண்ட காலம் துக்கம் அனுஷ்டிப்பவளாக இருக்கிறாள். பல சிப்பியினால் ஆன நெக்கலஸ்களை அணிந்து மயானத்துக்கு செல்வாள். அங்கு அவள் துக்கம் அனுட்டிப்பதோடு தனது நெக்லஸில் ஒரு சிப்பியைக் கழற்றிப் போட்டுவிட்டு வருவாள். நெக்லஸில் உள்ள சிப்பிகள் முழுவதுமாக அகற்றப்படும் வரை அவள் அங்கு செல்வாள். அவளுடன் அவளது சகோதரியும் செல்வாள். ஒன்று கூடல் நேரங்களில் ஆடுதல், பாடுதல் போன்றவற்றைச் செய்து மகிழ்ச்சி கொண்டாடுவார்கள். உடலின் வர்ணம் பூசி அலங்கரித்துக் கொள்ளும் இவர்கள், நன்கு உதவும் குணமுள்ளவர்கள். இவர்கள் அடிக்கடி வெற்றிலை, பாக்கு சுண்ணாம்பு ஆகியவற்றைப் போட்டு மென்று கொண்டிருப்பதால், அவர்களது உதடுகள் எப்போதும் சிவந்தே காட்சியளிக்கும். சர்க்கரைவள்ளிக் கிழங்கு, கோழி இறைச்சி , விதைகள் மற்றும் காய்கறி வகைகளை ஒரு வாழை இலையில் வைத்து மூடி, சில கற்களை மண்ணுக்குள் வைத்து சூடாக்கி வேகவைத்து பின் எடுத்துச் சாப்பிடுவர்.


கடல் மட்டத்திலிருந்து சுமார் 2500 மீட்டர் உயரத்தில் உள்ள ஒரு மலைக்கணவாய், பறவைகளை அவதானித்து ரசிப்பதற்கு உலகிலேயே மிகச் சிறந்த இடம் என கூறப்படுகிறது. இங்கு மிக அழகான பறவைகள் உள்ளன. ஏப்ரல் மாதத்தில் இங்கு விஜயம் செய்யலாம். ஏனெனில் அவ்வேளை ஹெலா மாகாணத்தில் ஒரு பெரிய விழாவை ஒழுங்கு செய்கிறார்களாம்.

- கங்கா


HNB
PATHUM VIMANA 2011
யார் சுக்கிரனிலிருந்து வந்தாலும்
அதிர்ஷ்டச் சக்கரம் சுழல்வது உங்கள் பக்கமே
வாராந்த இலட்சாதிபதி சீட்டிழுப்பில் வாராந்தம் ரூ. 1 இலட்சத்தை வெல்லுங்கள்.
மாதாந்த மில்லியன் வெற்றியாளர் சீட்டிழுப்பில் மாதாந்தம் ரூ. 1 மில்லியனை வெல்லுங்கள்.
ரூ. 1 இலட்சம்
ரூ. 1 மில்லியன்
மூவுலகையும் கவர்ந்திடும்
ஆனால் கிடைப்பது உங்களுக்கே
தொலைபேசி: 2661974, 2661957/9 தொலைநகல்: 2664892 மின்னஞ்சல் depmobilize@hnb.lk இணையத்தளம்: www.hnb.net
HNB

# 'வெற்றி தரும் வெற்றிநாயகி'

## பேசாலையை பேச வைக்கும் ஆலயம்



பேசாலையின் பெருமையை அகிலமெங்கும் எடுத்தியம்பிக் கொண்டிருப்பது வெற்றி நாயகியின் திரு ஆலயமாகும். தேவாலயத்தில் உள்ள சிம்மாசனத்தில் வீற்றிருந்து நல்லாட்சி செய்யும் புனித வெற்றி நாயகி, ஒவ்வொருவரையும் கிருபைக் கண்களால் பார்த்து, தனது பேரருளால் கடற்பெருக்கு, சூறாவளி, கொள்ளை நோய், படை, பஞ்சம், பிணி இவைகளால் எக்குறையும் நேராமல் காத்து இரட்சித்து வருகின்றார்.

இலங்கையில் மிகப் பெரிய ஆலயங்களில் ஒன்றாகக் கருதப்படக்கூடிய வெற்றி நாயகி ஆலயம், 240 அடி நீளமும், 80 அடி அகலமும், இரு கைக் கோவில்களாக ஒவ்வொன்றும் 35 அடி நீளமும், 25 அடி அகலமும் உள்ளதாக அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றது. சுமார் 3000 பக்தர்கள் ஆராதனை வழிபாடுகளில் கலந்துகொள்ள வசதியுள்ள பிரமாண்ட அமைப்பைக் கொண்டுள்ளது.

அலங்காரமானதும், பிரமாண்டமானதும், நுட்பமான சித்திரக் கொத்து அமைந்ததுமான, பாரிய சிம்மாசனத்தையும், மாபிள் கற்களிலான அடுத்தாரையும், தனிக் கருங்கல்லினால் அமைக்கப்பட்ட பலிப் பீடத்தையும், பழைமையின் நுட்பத்தை எடுத்து காட்டும் பிரசங்க மேடையையும், மிகவும் உயர்ந்த வேலைப்பாடமைந்த முகப்பையும், மணிக் கோபுரங்களையும் கொண்டு பேசாலை கடற்கரைக்குச் சமீபமாகக் கம்பீரமாகத் தோற்றமளிக்கின்றது வெற்றிநாயகி ஆலயம்.

வெற்றி நாயகியின் வலது புறமாக சூசைமாவனும் இடது புறமாக பெற்றெடுத்த தந்தை சுவக்கீனாரும் சிம்மாசனத்தில் வீற்றிருப்பது கண்கொள்ளக் காட்சியாகும்.

இவை தவிர ஆண்டவரின் திருக்காயங்கள் தத்ரூபமாக சித்திரித்துக் காட்டுவதும், அதனுடைய அலங்காரத்தினையும் வேறெந்த ஆலயத்திலும் காணமுடியாது. எந்தபாவியையும் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தக் கூடிய ''எக்சே ஓமோ'' சொரூபம், இரு கல்லறைச் சொரூபங்கள், உயிர்த்த இயேசுவின் இரு சொரூபங்கள் ஆகியவை பேசாலையின் பெருமையை மேலும் பெருகச் செய்து கொண்டிருக்கின்றன.


ஆலயம் அடிக்கடி வர்ணம் தீட்டப்பட்டு மெருகூட்டப்படுவதால் பார்வைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு உட்பட்ட புதிய ஆலயம் என்ற தோற்றத்தைக் கொடுத்து நிற்கின்றது. ஆனால் வெற்றிநாயகி ஆலயம் கட்டப்பட்டு 200 ஆண்டுகளைக் கடந்து விட்டது என்பது அபிப்பிராயமாகும்.


போர்த்துக்கேய ஆட்சி காலத்தில் (கி.பி. 1505 முதல் 1658 வரை) ஆரம்ப பங்கு மக்கள் எவ்வித பயமும் இன்றி கிறிஸ்தவர்களாக வாழ்ந்தார்கள். ஆனால் அக்காலத்தில் இதைப் போன்றதொரு பெரிய ஆலயத்தை அமைக்க வேண்டிய தேவை இருந்திருக்கவில்லை. ஏனெனில் அக்காலத்தில் பேசாலைக் கிராமத்தில் மக்கள் தொகை குறைந்ததாகவும், ஏழைகளாகவும் வாழ்ந்திருந்தனர். எனவே, சிறிய கோவிலையே கட்டி வாழ்ந்திருந்தனர்.

இக்கோவில் ஆரம்பத்தில் எந்த இடத்தில் அமைக்கப்பட்டு இருந்தது என்பதற்கு போதிய ஆதாரம் இல்லை. ஒருவேளை பேசாலைக்கு அண்மையில் மேற்கு பக்கமாக உள்ளதும் ''வெற்றி மாங்'' குடியிருப்பு என அழைக்கப்படுவதுமான வெற்றி மாதா குடியிருப்பில் வெற்றி மாதா தேவாலயம் இருந்ததாக கதையுண்டு.


1658 இல் ஒல்லாந்தர் ஆட்சி ஓங்கிய போது, ஒல்லாந்தரினால் கிறிஸ்தவ மக்கள் துன்புறுத்தப்பட்டு, தேவாலயங்கள் இடித்தழிக்கப்பட்டன. இக்காலத்திலும் இந்தப் பெரிய ஆலயத்தை அமைத்திருக்க முடியாது.

ஆனால், ஒல்லாந்தரின் ஆட்சி 1796 ஆம் ஆண்டு முடிவடைய, ஆங்கிலேயரின் ஆட்சி உருவானது. ஆங்கிலேயர்





பீடமும், சிம்மாசனமும்



நோய்கள் தீர்க்கும் ஆசிநீர்

அனைத்து மக்களின் மதத்திற்கும் சம வாய்ப்பு அளித்திருந்தமையால் அவர்களின் காலத்தில், அதாவது 1800களில் இப்பெரிய ஆலயம் கட்டத் தொடங்கி இருக்க வேண்டும் என்பது ஊர் பெரியவர்களின் அபிப்பிராயமாகும். இக்காலத்தில் பேசாலை மக்களின் குடித்தொகையும், செல்வச்செழிப்பும் ஆலயம் எழுவதற்கு தக்க காரணங்களாக இருந்தன. இவ்வளவு பெரிய ஆலயம் அக்காலத்தில் கட்டப்பட்டது என்றால், அக்காலத்தில் தற்போதுள்ள குடித்தொகையை விட அதிகமான குடித்தொகை இருந்திருக்க வேண்டும். 1892 ஆம் ஆண்டு பரவிய கொள்ளை நோயினால், பேசாலை மக்கள் அதிகமாக அழிவுற்றனர். இதனால் அக்குடித்தொகை தற்போதுள்ள நிலைக்கு குறைந்துவிட்டது. இது சரித்திரம் கண்ட உண்மை.

1913 ஆம் ஆண்டு பங்கின் பரிபாலகராக பொறுப்பேற்ற வண. எஸ். ஜே. ஸ்ரனிஸ்லாஸ் அடிகளாரின் வருகைக்கு பின்னரே பேசாலை பரதர் சமுதாயம் மீளவும் தழைத்துச் செழிக்கத் தொடங்கியது.

அன்றியும் பேசாலைச் சரித்திர எட்டில் 1890 ஆம் ஆண்டில் இப்பெரிய ஆலயத்தில் 'கப்பலா' என்று சொல்லப்படும் பகுதி பழுதடைந்து விட்டதாகவும் அதைச் சீர்படுத்தி, பீலி ஓடு போட்டார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து தற்போதுள்ள ஆலயம் 1800 ஆம் ஆண்டளவுகளில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என அனுமானிக்கலாம்.

வரலாற்றுப் பெருமை மிக்க வெற்றி நாயகியின் ஆலயமானது 39 ஆண்டுகள் கொச்சின் மேற்றிராசனத்தின் கீழும், 134 ஆண்டுகள் யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் கீழும், தற்போது மன்னார் மேற்றிராசனத்தின் கீழும் பெரும் பங்கு ஆலயமாக பல வழி மீசாம்களைக் கொண்டு இயங்கி வருகின்றது.

1959 ஆம் ஆண்டு பங்குத் தந்தையாக இருந்த வண. எஸ். ஏ. சிங்காராயர் அடிகளார் பங்கிற்குரிய சேமக்காலையில் மூவரசர்களின் ஞாபகமாக மூவிராசாக்கள் தேவாலயம் ஒன்றையும் அமைத்து பெரும் நலம் புரிந்தார்கள்.

பேசாலையில் வெற்றி நாயகி ஆலயம் அமைவதற்கு முன் புனித மூவிராசாக்கள் கோவில் இருந்ததாக ஒரு கதை ஊர்ப் பெரியவர்களிடம் இன்றும் உலவி வருகின்றது. இது எவ்வளவு உண்மை என்பதற்கு ஆதாரம் இல்லாவிட்டாலும் பேசாலை என்ற பெயர் உண்டாவதற்கு முன் 'மூவரசர் பட்டினம்' என வழங்கப்பட்டதாக ஊரில் படிக்கும் நாடக எடுகளில் வரையப்பட்டுள்ளது. அன்றியும் 'பட்டினத்துப் பாதுகாவலாக மூன்று இராசாக்களைக் குறித்து வேண்டிக் கொள்வோம்' என்று செபிக்கும் வழக்கம் பரம்பரை பரம்பரையாக இன்றும் இருந்து வருகிறது.

பேசாலை பண்டைய கலைப் பெருமையை விளக்கும் பிறிதொரு பாரிய கட்டிடம் பாஸ் மண்டபமாகும். பல படிக்கட்டுகளும் திருப்பங்களும், இரண்டு பெரிய சுரங்க அறைகள் கொண்டதாய்

அமைந்துள்ளது. துடக்கு பாஸ் பேசாலைக்கு உரித்தான கலை வடிவமாகும்.


முன்னைய காலத்தில் வருடந்தோறும் பாஸ் காட்சிகள் காட்டப்பட்டு வந்தன. இம்மண்டபம் 1907 ஆம் ஆண்டு கட்டி முடித்துப் பூரணத்துவமாக்கப்பட்டது. கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதும் முதல் முறையாக 1907 ஆம் ஆண்டில் பாசு காட்டப்பட்டது. அப்போது பங்குத் தந்தையாக இருந்தவர் வண.ஜே. லெப்பிளே அடிகளாவார். இவர் காலத்தில் மூப்பராக இருந்து இப்பாசுக் காட்சியை நடத்தியவர் மரியானு மீயேஸ் என்பவராவார்.

**ஆலயப்பணி**

ஆலயம் பல்வேறு காலகட்டங்களில் திருத்த வேலைகளுக்குட்பட்டு இன்றுள்ளதுபோல் 1977 இல் பூரணப்படுத்தப்பட்டது. புதிய ஆலயத்தை கட்ட வேண்டும் என்பதில் பங்கு மக்கள் மிகுந்த ஆர்வமாக இருந்தார்கள். தனி நபராக, குடும்பமாக, குழுக்களாக தாமே பொறுப்பெடுத்து வேலைகளைப் பகிர்ந்து செய்தார்கள். முகப்பும் அடுத்தாரை ஒட்டிய கப்பலா என்ற பகுதியும் நீங்கலாக ஏனைய பகுதிகள் யாவும் புது உருப்பெற வேண்டியிருந்தன. கோவிலை உருமாற்றிய போது கிடைத்த மிகுதிக் கற்கள் வீதிகள் உருவாகுவதற்கு கையளிக்கப்பட்டு பகிரப்பட்டன.

அத்திவாரம் வெட்டியபோது 200 வருடங்களுக்கு முற்பட்ட பிரித்தானிய மகாராணியின் தலை பொறிக்கப்பட்ட பழைய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன. தொன்மை மிக்க இத்தாலிய 'டெறிக்' தூண்களும், நுட்பமான வேலைப்பாடமைந்த பழைமையின் இரகசியம் பேசிய மரத் தளபாடங்களும், வழிபாட்டுக்கு உரியதான நூதனப் பொருட்களும் உருமாற்றம் செய்யப்பட்டதும் இக்கால கட்டத்திலாகும்.

ஆலய கட்டுமானப் பணியை பாரிய அளவில் மக்கள் செயற்படுத்தினார்கள். கட்டுமானப் பணிகளுக்குரிய நிதியீட்டமும் மக்களால் பெறப்பட்டது. சிரமதானம், வலை வளைப்பு, இழுவைப்படகு, பாச்சுவலைத் தொழில்கள் யாவும் ஆலயத்திற்காக கிரமமாக தொழில் புரிந்தன. மறைமாவட்ட ஆயர் உட்பட வணிகர்கள், உத்தியோகத்தர்கள், உள்ளூர் கட்டிட கலைஞர்கள் தங்கள் முழுமையான பங்களிப்பை ஆர்வத்துடன் செலுத்தினார்கள். வெளிநாடுகளில் வசிக்கும் ஊர் மைந்தர்கள் அவ்வப்போது அவர்களின் பங்களிப்பை செலுத்தினார்கள். நன்கொடைகள் குவிந்தன. சிரமதானம், நகை, பணம், பொருள் ஆகிய வழிகளில் அன்னையின் ஆலயத்தை அழகு செய்ய நன்மக்கள் முன்நின்றனர்.


அன்னையின் தேர்

ஊரெல்லாம் கூடி ஒற்றுமையாக ஆலயத்தைக் கட்டுவதென்பது புண்ணியம் மிக்க செயல் என்பதை அனைவரும் உணர்ந்திருந்தனர். சந்தோசமும் ஒற்றுமையும் ஓங்கி வர ஆலயப் பெரும்பணி துணைபுரிந்தது. சாதனைகளோடு சில வேதனைகளும் ஏற்பட்டன. அதாவது சில விபத்துக்களும் உயிரிழப்பும் கட்டுமானப் பணியின் போது ஏற்பட்டன. ஆலயம் கட்டத் தொடங்கிய போது முன்நின்ற ஒருசில நல்ல உள்ளங்கள் ஆலய கட்டிடப்பணி முடிவடைவதற்கிடையில் இறைபதம் எய்தினார்கள்.

அன்னையின் தயவு எல்லா நேரத்திலும் எல்லோருக்கும் இருந்தது. அருட்தந்தை வில்சன் பற்றிக் அடிகளார் ஆலயத்தை கட்டியெழுப்புவதில் காட்டிய தீவிரமும் செயலும் எம்மாலும் எதிர்கால சந்ததியினராலும் மறக்கக்கூடியதல்ல.

**சிலுவைப் பாதை சுரூபங்கள்**

ஆலயத்திலுள்ள சிலுவைப் பாதை சுரூபங்கள் இத்தாலியில் இருந்து தருவிக்கப்பட்டவையாகும். இதில் காணப்படும் மனித மெய் நிலைகள் இயற்கைத் தன்மை வாய்தவையாகவும் உருவங்களின் ஆடை மடிப்புகள் மற்றும் யூத, கிரேக்க ஆடைகளைக் கொண்ட சிறந்த வர்ணம் தீட்டப்பட்ட அமைப்புகளாகவும் விளங்குகின்றன. இதற்கு இடப்பட்ட பிரேம் கொரிந்தியன் முறையிலான வேலைப்பாடுகள் கொண்டது.

**பிரசங்க மேடை**

சுமார் 168 வருடங்கள் வயதைக் கொண்ட இப்பிரசங்க மேடை ஆலயத்தின் இடது சுவரின் நடுப்பகுதியில் அமையப் பெற்றுள்ளது. முன்னர் ஒலிப்பெருக்கி வசதிகள் இல்லாத காலத்தில் பிரசங்கியாருக்கும் இறைமக்களுக்கும் இடையிலான நெருக்கத்திற்காகவும் காலப்போக்கில் ஆலயத்தின் விசேட வழிபாடுகளுக்கான அடையாளங்களைக் குறிப்பதற்காகவும் செய்யப்பட்ட மேடை இது. கிரேக்கத்தின் 'மார்ஸ்' தர்க்க மேடையின் ஞாபகப்படுத்தும் அழகிய நுட்ப கொத்து மற்றும் ஒட்டு வேலைப்பாடுகள் கொண்டது.

**மகிழ மரம்**

ஆலய வளவில் காணப்படும் 200 வருடங்கள் பழைமையான மகிழ மரம், ஆலய வரலாற்றோடு பின்னிப் பிணைந்தது. ஏனெனில் பழந்தமிழ் பாரம்பரியங்களில் பாரிய கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் கலைஞர்கள் மகிழ மரம் ஒன்றை நட்டபின்னரே தமது கருமங்களை ஆரம்பிப்பது வழக்கம். இதன் பொருட்டு இம் மரம் நடப்பட்டதாக கூறப்படுகின்றது.

**சிம்மாசனம்**

வெற்றி நாயகி காட்சி தரும் சிங்காசனம் நுட்பமான மர செதுக்கல் வேலைகளுடன் கூடியது. தஞ்சாவூர் பட்டையினால் பொற்பூசப்பட்ட பழைமையின் சின்னமாகும். இவ்வமைப்பைக் காணுவதற்காக பக்தர்கள் வெளியூரிலிருந்து வருகைத் தருவார்கள்.

**அன்னையின் தேர்**

மரத்தினாலான அழகிய சித்திர வேலைப்பாடுகள் கொண்ட கூட்டில் பளிங்கு, முத்துமணி, கண்ணாடி, அலங்காரங்கள் கொண்டதாகும். இது பேசாலைக் கலைஞர்களால் ஆக்கப்பட்டதாகும். இது அன்னையின் ஆலய உற்சவத்தின் போது பயன்படுத்தப்படும்.

**ஆலய மணிக்கோபுரங்கள்**

சுமார் 67 வருடங்களாக ஆலயப் பெருமையை பறை சாற்றும் மணிக்கோபுரங்களையுடைய இம்முகப்பானது கிரேக்க மரபைச் சார்ந்த கட்டிட அமைப்பாகும். இதில் முகப்பின் உச்சியில் காணப்படும் சம்மனசு, புனித இராயப்பர், யாகப்பர் போன்றோரின் சொரூபங்களும் அன்னை மரியின் திருச்சுருவமும் காணப்படுகின்றன. தூண் அமைப்புகள் 'அயோனிக் கொரிந்தியன்' ஆகிய இரு வகை மரபையும் கொண்டிருக்கின்றன.


ஆலயத்தின் திருவிழா மார்கழி மாதம் எட்டாம் திகதி மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. ஒன்பது நாட்கள் நவ நாளும் அனுஸ்டிக்கப்படும். ஆலய பங்கு மக்களுக்கு ஏதாவது துன்பம், கஸ்ரம் எனும் போதும் அல்லது, ஊருக்கு ஏதாவது ஆபத்து எனும் போதும் ஆலய மணி ஒலிக்க வைக்கப்பட்டு, ஊர் மக்கள் ஆலய முன்றலில் ஒன்று கூடி பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வழமை இங்கு இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஆலயத்தில் உள்ள பங்குச் சபை, பங்கு குருவானவரின் வழிகாட்டலுடன் ஊர் மக்களின் நன்மை தீமைகளில் பங்கு கொண்டு மக்களுக்கு வழிகாட்டி வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

– எஸ். ஜெயந்தன் துரம்
செயலாளர், பங்குச்சபை



மகிழ மரம்


To place your
advertisement
in
KALAIKESARI
கலைக் கேசரி
CULTURE HERITAGE TRADITION EVENTS FASHION INTERVIEWS ENTERTAINMENT
Contact us on
+94 11 5322733 / 734 /737
or
marketing@virakesari.lk
an Express publication


Send the World's Best
Home Appliances
to your loved ones in
Sri Lanka
It's just a click away
WWW.SINGERSL.COM
Simply visit www.singersl.com, the website of Sri Lanka's No.1 retailer of home appliances. Choose any number of items among over 300 models from 33 of the world's leading brands and make your payment by credit card. We'll deliver them to your loved ones in any part of Sri Lanka. Guaranteed.
SINGER SISIL SAMSUNG Prestige TEFAL
Moulinex HITACHI Panasonic Whirlpool


# சத்தியத்தின் சோதனை

வால்மீகி முனிவரால் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட வால்மீகி இராமாயணத்தைத் தழுவிப் பல மொழிகளிலும், அந்தந்த மொழிக்குரிய கலாசார, பண்பாட்டு, வாழ்வியல் விழுமியங்களை உள்ளடக்கி இராமாயணம் இயற்றப்பட்டு உள்ளது. தமிழில் கம்பர் இயற்றியது 'கம்பராமாயணம்' எனவும் கெமர் மொழியில் 'ரீம்கெர்' எனவும் தாய் மொழியில் 'ராமகியென்' எனவும் லாவோ மொழியில் 'ப்ரா லாக் ப்ரா லாம்' எனவும் மலாய் மொழியில் 'இக்காயத் சேரி ராமா' எனவும் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

வால்மீகி இராமாயணத்தின்படி சீதை அக்னிப் பிரவேசம் நிறைவேற்றிய இடம் அயோத்தியாகும். இராவணனின் சிறையிலிருந்து சீதையை சிறைமீட்டு வந்த இராமன், சீதை தனது தூய்மையை உலகத்தின் முன் நிரூபிக்க அக்னிப் பிரவேசம் செய்வதை தடுக்கவில்லை. அக்னிப் பிரவேசத்தின் போது சீதையை அவளுடைய தாயான பூமாதேவி தன்னுள் எடுத்துக் கொண்டாள் என்று கூறுகின்றது. காளிதாசர் எழுதிய ரகுவம்சத்தில் உத்தரகாண்டம் மிக முக்கியமானது. அதில் உள்ள விவரம் வருமாறு.

சீதை மீது இராமன் சந்தேகம் கொண்ட நிலையிலேயே, சீதையை தனது ஆசிரமத்திற்கு அழைத்துச் செல்கிறார் வால்மீகி. இராமனின் பிள்ளைகளான லவன், குசன் இருவரும் வால்மீகி முனிவரின் ஆசிரமத்தில்தான் பிறந்தனர். அங்குதான் வளர்ந்தும் வந்தனர். அவர்கள் 6 வயதைக் கடந்த நிலையில் அவர்களை இலக்குவன் அயோத்திக்கு அழைத்து வருகிறார். அப்போது வால்மீகியும் உடன் வருகிறார்.

லவ குசா இருவரும் யாருக்குப் பிறந்தவர்களோ என்ற சந்தேகத்தை குடிமகன் ஒருவன் எழுப்ப, சீதை அக்னிப் பிரவேசம் செய்து தான் மாசற்றவள் என்பதை நிரூபிக்க முற்படுகிறார். அதை இராமன் தடுக்கவில்லை. சீதை அக்னிப் பிரவேசம் செய்த




இராமாயணத்தில் இலங்கை - 07



நிலையில், அவளுடைய தாயான பூமாதேவி சீதையை தன்னோடு அழைத்துக் கொண்டு பூமிக்குள் சென்று விடுகிறாள். தங்களது தாய் மரித்த இடத்தில் நாங்கள் வாழ மாட்டோம் என்று கூறிவிட்டு, லவ, குசா இருவரும் அயோத்தியை விட்டு வெளியேறுகின்றனர். அவர்களோடு அயோத்தி மக்களும் வெளியேறி விடுகின்றனர். அத்துடன் அயோத்தியே காடாகி விடுகிறது.


அயோத்தியை விட்டு வெளியேறி, வேறொரு இடத்தில் வாழ்ந்துவந்த குசாவின் கனவில் வரும் அயோத்தியின் தேவதை, 'உனது தந்தை ஆண்ட பூமி இன்று வனமாகிவிட்டது. அங்கு நீங்கள் சென்று மீண்டும் அயோத்தியை புனர் நிர்மாணம் செய்யுங்கள்' என்று கூறியதாக காளிதாசர் எழுதியுள்ளார். ரகு வம்சத்தில் உத்தர காண்டத்தில் கூறப்பட்டுள்ள விவரம் இது. ஆனால் கம்பராமாயணத்தில் இந்த உத்தர காண்டம் பகுதியே இல்லை. அதனை கம்பர் தவிர்த்து விடுகிறார். ஏனெனில் உத்தரகாண்டத்தைக் கூறினால், சீதை மரித்ததைக் கூற வேண்டும்.


'மீனவன் குகனோடு ஐவரானோம்' என்று கூறியவர் இராமன், ஜடாயுவிற்கு அண்ணனாக நின்று ஈமக் கிரியை செய்தவர் இராமன். சுக்ரீவனையும், விபீடனனையும் தம்பிகளாக ஏற்றுக் கொள்கிறார். இப்படிப்பட்ட இராமனின் கதையில், உத்தர காண்டத்தைக் கூறுவதால் அவனின் பெருமை குறைந்து விடாதா? எனவே தவிர்த்து விடுகிறார் கம்பர். வால்மீகியின் உத்தர காண்டம் இவ்வாறு இருப்பினும் கம்பர் காட்டிய இராமன் வழிபாட்டுக்குரியவராக திகழ்கின்றார். இந்திய அறிஞர்களின் துணையுடன் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள இராமாயணத் தலங்கள் கம்பராமாயணக் கதைப்போக்குடனேயே வெகுவாகப் பொருந்திப் போகின்றன.

இலங்கையில் சீதையின் அக்னிப் பிரவேசத்துடன் தொடர்புடைய தலமாக திவுறுபொல திகழ்கின்றது. இது சீத்தா எலியா தலத்திலிருந்து நுவரெலியா - வெலிமடை வீதியில் சுமார் 20 கி. மீற்றர்கள் தொலைவில் காணப்படுகின்றது. அசோக வனத்திலிருந்து சிறை மீட்கப்பட்ட சீதை தனது தூய்மையை இங்குதான் அக்கினியில் சத்தியம் செய்து நிரூபித்ததாக நம்பப்படுகின்றது. சீதை அக்கினிப் பிரவேசம் செய்த குறித்த இடத்தில் சிறிய பௌத்த விகாரை காணப்படுகின்றது.

சீதை தீக்குளித்ததாகக் கருதப்படும் இடத்தில் பிரமாண்டமான அரச மரம் காணப்படுகின்றது. மலையகத்தின் பச்சைப்பசேல் என்ற குளிர்மை நிறைந்த காலநிலைக்கு முற்றிலும் மாறாக அரசமரத்தின் இலைகள் பழுப்பு நிறத்திலோ அல்லது பகுதி உதிர்வடைந்த கோலத்திலோ எப்பொழுதும் காட்சியளிப்பதாக உள்ளூர்வாசி ஒருவர் தெரிவித்தார். இதற்குக் காரணம் சீதை தீக்குளித்த போது மூட்டப்பட்ட அக்கினியின் வெப்பமே எனக் கூறப்படுகின்றது. தகராறுக்குரிய இரு பகுதியினரும் இந்த ஆலயத்திற்கு வருகை தந்து சத்தியம் செய்து தமது உண்மைத் தன்மையை நிரூபணம் செய்கின்றார்கள். பொய்ச் சத்தியம் செய்தால் அதற்கான







தண்டனையும் தவறாமல் கிடைத்து விடும் என்ற நம்பிக்கையும் தொன்று தொட்டு வழங்கி வருகின்றது. சத்தியத்தின் ஆலயமாக இது விளங்குகின்றது. இந்த விகாரையின் ஒரு பகுதியில் சிவன், சாமுண்டீஸ்வரர், கணபதி, சரஸ்வதி, கண்ணகி அம்பாள் ஆகிய தெய்வங்களுக்கும் வழிபாடுகள் நடாத்தப்படுகின்றன.

மிக நீண்ட காலத்திற்கு பின்னர் சீதை, இராமனைச் சந்திக்கின்றாள். சீதை மிகவும் மனமகிழ்ச்சியுடன் காணப்படுகின்றாள். ஆனால் இராமனோ சீதையினுடைய மகிழ்ச்சிக்கு நேர் எதிர்மாறான உணர்வினைக் கொண்டிருக்கின்றான். சீதையைத் தனிமையில் அழைத்த இராமன் பின்வருமாறு கூறுகின்றான். 'நான் என்னுடைய எதிரியைக் ஒழித்துவிட்டேன். உண்மையும் நேர்மையும் தவறாத ஓர் அரசனுக்குரிய கடமையை நான் செய்து விட்டேன். ஆனால் நீயோ என்னுடைய எதிரியின் காவலில் ஒரு வருடத்திற்கும் மேலான காலம் இருந்துள்ளாய். இந்த சூழ்நிலையில் நான் உன்னைத் திரும்ப அழைத்துச் செல்வது சரியானதாக இருக்காது' என்கின்றான். இதைக் கேட்ட சீதை அதிர்ச்சியுற்றாள். 'பலவந்தமாக என்னைக் தூக்கிச் சென்று சிறை வைத்திருந்தமை என்னுடைய தவறா? எப்பொழுதும் என்னுடைய எண்ணம், சிந்தனை, உணர்வுகள் எல்லாமே உங்களையே எண்ணிக் கொண்டிருக்கும்' எனக் கூறிய படியே அருகில் நின்றிருந்த இலட்சுமணனை நோக்கித் திரும்பிய சீதை கன்னங்களில் கண்ணீர் வழிந்தோட, 'லட்சுமணா! தீயை மூட்டு; என்னுடைய மனதில் உள்ள கவலையைப் போக்குவதற்கு இதுதான் ஒரே வழியாக இருக்கும்' என்றாள் சீதை.

இலட்சுமணன் அதிர்ச்சியும் ஆத்திரமும் பொங்க அண்ணன் இராமனை நோக்கினான். ஆனால் இராமனின் முகத்தில் எந்தவொரு சலனமும் காணப்படவில்லை. உடனே இலட்சமணன் பெரும் தீயை மூட்டினான். சீதாதேவி கும்பிட்ட கரங்களுடன் தனது கணவனை வலம் வந்தாள். தீக் கங்குகளுக்குள் பிரவேசிப்பதற்கு முன் சீதை கூறுகின்றாள் 'ஓ தீயே நான் சுத்தமானவள் என்பதை நிரூபி' எனக் கூறிய வண்ணம் சீதை அக்கினிப் பிரவேசம் செய்கின்றாள். சீதையின் பரிசுத்தத்தின் மகிமையின் வலிமையின் முன்னால் அக்கினி தேவனால் கூட எதுவும் செய்ய முடியவில்லை. சீதை எந்தவித உபாதையும் இன்றி வெளியே வந்தாள். இராமன் சீதையை ஏற்றுக்கொண்டு பின்வருமாறு கூறுகின்றான். 'சீதையினுடைய பரிசுத்தம் எனக்கு நன்றாகத் தெரியும். இருந்த போதிலும் இந்த உலகம் சீதையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இவ்வாறு நிகழ்ந்தது. இந்த வினாடியில் இருந்து சீதை களங்கமற்றவளாக உலக மக்களால் போற்றப்படுவாள்' இவ்வாறு இராமாயண இதிகாசத்தில் குறிப்பிடப்படுகின்றது. சீதை தீக்குளித்ததாகக் கருதப்படும் இந்த இடத்திற்கு உல்லாசப்பயணிகள் நாள்தோறும் வந்து செல்கின்றார்கள்.

- மிருணாளினி


வாழ்க்கையை
இலகுவாக்கும்
சமையலறையின்
பெருமை
LITRO GAS
12.5 kg
LITRO GAS
2.3 kg
தற்போது லிட்ரோ கேஸ் சிலிண்டர் உங்களுக்கு மேலும் இலகுவாக
2.3Kg | 12.5Kg | 37.5Kg ஆகிய மூன்று அளவுகளில்.
"குடும்பத்தின் மகிழ்ச்சியும் சௌபாக்கியமுமே
எனது எதிர்பார்ப்பாகும்."
LITRO GAS
சுடர்விடும் எதிர்பார்ப்பு

# வயலின் இசை மேதை
# லால்குடி ஜெயராமன்

2010 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி தனது 80 ஆவது வயதில் பிரவேசித்த வயலின் இசைமேதை லால்குடி ஜெயராமன் இசைத் துறையில் இலகுவில் யாருமே எட்டமுடியாத உயரங்களையெல்லாம் தொட்டும், மிக எளிமையாக இசையைச் சுவாசித்த வண்ணமே வாழ்ந்து வருகிறார். தனது அத்தனை வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும், 97 வயதிலும் தன்னை அர்ப்பணிப்போடு ஆசீர்வதித்துக் கவனித்து வரும் தாயாரான சாவித்திரி அம்மாளே காரணமென மிகுந்த பவ்வியத்தோடு தாயாரின் அரவணைப்பைப் பணிந்து போற்றுகிறார்.

அறுசுவையோடு இசையின் இனிமையையும் இளமையில் இருந்தே தாயார் ஊட்டவும், அதிகாலை மூன்றரை மணிக்கே மகனைத் தட்டி எழுப்பி இசைச் சாதகம் செய்யத் துணை நின்றார். அவ்விதமே காலை 9 மணிவரை தினமும் பயிற்சி பெற ஊக்கமூட்டி உதவியவர் தான் அவரது தந்தை கோபால ஐயர். சாவித்திரி அம்மாள் கோபால ஐயரின் மூத்த மகனாக 1930 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி இவர் பிறந்தார்.



இவரைப்போலவே இசைக்கலையில் வல்லமைமிக்க மூன்று சகோதரிகளும் உள்ளனர். மூத்த சகோதரி பத்மாவதி திறமைமிக்க வீணைக் கலைஞர். அடுத்த சகோதரிகளான ராஜலட்சுமியும், ஸ்ரீமதியும், தமயனாரைப் போலவே வித்துவம் மிக்க வயலின் இசைக் கலைஞர்களாவர்.

இவர்கள் எல்லோருமே குழந்தைப் பருவத்திலிருந்தே 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரை' என்பதாக இசையோடு இறுதிவரை வாழும் பேறு பெற்றவர்கள். இவர்கள் எல்லோருமே நாட்டின் நாலா பக்கங்களிலும் உள்ள மக்கள் மத்தியில் தமது இசையின் மேதைமையை வழங்கியவர்கள் எனில் மிகையில்லை. ஆனால் இவர்களது தந்தையார் கோபால ஐயர், லால்குடி ஜெயராமனின் குருவாக இருந்தாலும், வயலின் மற்றும் பல்வேறு வாத்தியங்களை உருவாக்கும் தொழில் நுட்பம் மிக்கவராகவும் விளங்கினாரேயொழிய அவரது பிள்ளைகளைப் போல மேடையேறிக் கச்சேரி செய்தோ, ஏனையோருக்குக் குருவாக இருந்தோ இசையை வெளிப்படையாக மக்களிடம் எடுத்துச் செல்லவில்லை. இருப்பினும் இசை விற்பன்னர்கள் பயன்படுத்தும் வாத்தியக் கருவிகளைத் தயாரித்தும், ஒழுங்கு செய்தும் கொடுப்பதில் அவரது இசை நுட்பம் புகுந்தே இருந்தது.

மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர், அவரது மகன் சந்தானம், ஜி. என். பாலசுப்பிரமணியம், செம்மங்குடி, அரியகுடி, மதுரை மணி, மதுரை சோமு, ஆலத்தூர் சகோதரர்கள், ராம்நாடு கிருஸ்ணன், பாலமுரளி கிருஷ்ணா போன்ற கர்நாடக இசைமேதைகளின் கச்சேரிகளையெல்லாம் தனது வயலின் வாத்திய இசையால் மேலும் மெருகூட்டி இசை உலகிலேயே சுவர்க்கத்தின் இங்கிதங்களையெல்லாம் இசை ரசிகர்களுக்கு ஊட்டிய லால்குடி ஜெயராமனின் மேதைமை எழுத்தில் வடிக்க முடியாததே இத்தைகைய திறமையும், அனுபவமும், பயிற்சியும் லால்குடிக்கு எப்படிக் கைவந்தது? என்றால் அதன் இரகசியம் இங்கே தான் ஒளிந்து கிடக்கிறது. லால்குடியிலே உள்ள ஆலயங்களில், பூங்காக்களில் ஒலிபெருக்கி மூலம் ஜி. என். பி. செம்மங்குடி, மதுரை மணி போன்ற இசை மேதைகளுடைய கச்சேரிகள் தினமும் ஒலிபரப்பாவது வழக்கம்.

ஜெயராமன் என்ற சிறுவன் அவற்றை அப்படியே காதில் வாங்கி மனதில் உருப்போட்டு வீடுவந்ததும் தனது வயலினை எடுத்தத்தான் கேட்டுக் கிரகித்துக் கொண்டவற்றை எல்லாம் வயலினில் பேச வைத்துப் பயிற்சி எடுப்பார். இத்தகைய ஓர் ஆர்வம் அவருக்கு இளமையிலே நன்கு துளிர் விட்டது. இளமையிற் கல்வி சிலையில் எழுத்தாகி விடக்கூடிய வகையில் தனது தங்கைமாருடன் சேர்ந்து மென்மேலும் தான் கேட்டவற்றையெல்லாம் வாசிப்பது ஒரு கைவந்த

கலையாகவே பழகிவிட்டது. வயலின் வாத்தியத்தை நன்கு கையாளப் பழகியதோடு நிறையக் கச்சேரிகளுக்கு அனுசரணையாக வாசிக்கவும் ஆர்வங்கொண்டு செயற்பட்டார் ஜெயராமன். பெரும் பெரும் பிரபலஸ்தர்களுடைய கச்சேரிகளுக்கு பக்க வாத்தியமாக வயலினை மீட்டியபோது, இவருடைய அற்புதமான ஆற்றலையும் பெருகிவரும் இசை வெள்ளத்தின் நுட்பங்களையும் அவதானித்து ரசித்த மேதைகள், இவருடைய வாசிப்பினை வியந்து மூக்கின்மேல் விரலை வைத்தனர். கைதேர்ந்த வயலின் இசைக் கலைஞராகத் தோற்றம் தரும் ஜெயராமனின் இசைவித்தை இளமை தொட்டே ஆரம்பமான ஊற்று என்பதை அவர்கள் எங்கே தெரிந்திருக்கப் போகிறார்கள்?

ஜெயராமனின் பக்க வாத்தியத்தோடு தமது இசை மெரு கேறுவதையும் கச்சேரி சோபிதமாகக் களை கட்டுவதையும், இசைப்பிரியரிடையே பெரும் ஆரவாரமும், மகிழ்ச்சியும், வரவேற்பும் பெறுவதையும் அவதானித்த இசைப் பாடகர்கள் தமது கச்சேரிகளுக்கெல்லாம் லால்குடி ஜெயராமனின் வயலின் வாத்தியத்தையே பெரிதும் சிபாரிசு செய்தனர். இவரது பக்க வாத்தியத்தின் இளமையும், இசை நுட்பமும் பற்றி எங்கும் பரபரப்பாகப் பேசினர். ஜெயராமனுடைய பெருமையும், புகழும் கொடிகட்டிப் பறந்தது. இவருடைய வயலின் பேசும். குறுகிய நெடிய அசைவுகளை எல்லாம் அதனதன் பக்குவமறிந்து வயலின் மூலம் ஜெயராமன் எழுப்பும் கானம் அப்படியே வார்த்தைகளாக உதிரும் அழகே தனி.

தற்போது தமிழ் நாட்டில் தியாகராஜ நகரில் வாழ்ந்து வரும் இவரது குடும்பம் இசை சம்பந்தமான தொடர்புகள், கச்சேரிகள், விழாக்கள் போன்ற வாய்ப்புகளுக்காக லால்குடியிலிருந்து இடம் பெயர்ந்து சிலகாலம் சைதாப் பேட்டையிலும் வாழ்ந்தது. லால்குடி அவர்களின் வயலின் பக்கவாத்தியமாக இசை மீட்டியது மட்டுமன்றி, இவரின் தங்கை வயலின் வித்துவாட்டி ஸ்ரீமதியுடன் டுயட் கச்சேரிகளையும், தனிக் கச்சேரிகளையும் கூட நடத்திய பெருமையை உடையது. இவரது மகள் லால்குடி விஜயலக்ஷ்மியுடனும், ஜி. ஜே. ஆர். கிருஷ்ணனுடனும் கூட இணைந்து பல கச்சேரிகள் செய்து பலரது பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார்.

ஹரிகதா காலட்சேபம் செய்யும் விசாகா வரி, கர்நாடக இசைக்கலைஞர் பாம்பே ஜெயஸ்ரீ, விட்டல் ராமமூர்த்தி என உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் கூட இவரிடம் இசை பயின்றவர்கள் பெரும் பிரபலஸ்தர்களாக இசைத்தொண்டு புரிந்து வருவதும் லால்குடிக்கு பெருமை சேர்க்கும் செய்தியாகும். இசையாளர்களுடைய உள்ளமும் இசையைப் போலவே இனிமையும், சாந்தமும் மென்மையும், ரசனையும், ஈவிரக்கமும், பக்தியும் மிக்கதாக இருக்குமென்பர் ஆன்றோர். அதற்கமையவே இனிய சுபாவமும், மென்மையான உள்ளமும் கொண்ட ஜெயராமன் அவர்கள் மத்திய அரசு ஸ்கொலஷிப்பாகப் பண உதவி செய்து இவரிடம் கற்க வந்த மாணவர்களிடம், அவர்கள் தரும் பணத்தை தான் எடுத்துக் கொள்ளாமல் அவரவர் பெயரில் வங்கியில் வைப்புச் செய்து, அப்பணம் பன்மடங்கு பெருகிய பின் அவரவர்களிடமே கையளித்துவிடும் நல்ல பண்பை இவர் கொண்டிருந்தார். ஏழை மாணவருக்கு இலவசமாகவே இவ்வித்தையைக் கற்றுக் கொடுக்கும் மேன்மையான உள்ளமும் இவரிடம் உண்டு.

இந்த மென்மையான உள்ளம் இசையின் கடுமையான பகுதிகளை எல்லாம் கூடத் தொட்டு நீலாம்பரி, தேவகாந்தாரி ஆகிய ராகங்களில் வர்ணம் அமைத்து இசைத்த மிகச் சிக்கலான கைங்கரியத்தை வெகு லாவகமாக நிறைவேற்றியமையைப் பாராட்டாத இசை மேதைகளே இல்லையென அடித்துக் கூறலாம். இப்படிப் புதிய புதிய நுட்பங்களை, பக்கங்களை இசைத்துறைக்குத் தொட்டுக்காட்டிய உன்னத திறமை இம்மனிதரின் தனிச் சொத்தெனலாம். இசையின் மேன்மையால் பல அற்புதமான செயல்களைச் சாதிக்க முடியுமென்ற திட மனம் பூண்ட லால்குடி அவர்கள் முற்றும் துறந்த முனிவரான காஞ்சிப் பெரியவர் கடுஞ் சினங்கொண்டு மௌனத்தில் ஆழ்ந்திருந்த வேளையில், இறுகிப் போயிருந்த அவர் மனம் இளகும் வகையில் வயலின் நரம்புகளில் தன் இசை ஞானத்தைத் தவழ விட்டார். இந்த இசை மெதுமெதுவாக எங்கும் பரவியது. சூழலின் இறுக்கத்தை அந்த இனிய இசை நெகிழ்த்தவும் காஞ்சிப் பெரியவரும் மனம் இளகினார். அடியவர்களை ஆசீர்வதித்து மகிழ்ந்தார். இப்படித் தனது வயலின் இசையால் பல இங்கிதங்களையும் ஏற்படுத்தி வாழ்க்கையை வளமுறச் செய்தார். வெற்றியும் பெற்றார்.

'வயலின் வேணு வீணா' என்ற மகுடத்தில் லால்குடி அவர்கள் வயலினையும், புல்லாங்குழலை, இசை மேதை புல்லாங்குழல் ரமணியும், வீணை வெங்கட்ராமனும் சேர்ந்து புதுப்புதுச் சங்கதிகளையும், பிர்க்காக்களையும் தமது வாத்தியங்களில் ஏற்றிப் பொழிந்த இசை நேர்த்தி இதுவரை யாருமே எட்டாத சிகரங்களையெல்லாம் தொட்டுப் பெரும் புகழை ஈட்டியது. இவருடைய துணைவியார் இராசலெட்சுமி இவரது இசைப் பயணத்திற்கு மிகுந்த ஆதாரவாக அமைந்தவர். ஓவியத் துறையிலும் திறமைமிக்க லால்குடி 'ஜெயஜெயதேவி' என்ற நாட்டிய நாடகத்தைத் தானே தயாரித்து அரங்கேற்றியதோடு சில சினிமாப் பாடல்களுக்கு இசை அமைத்தும் வெற்றிபெற்றமையால் 2006 இல் சிறந்த இசையமைப்பாளருக்கான விருதையும் தட்டிக் கொண்டார்.

இப்படிக் கலையோடும் தொடர்பான பல விடயங்களையும் அற்புதமாகச் சாதித்துப் புகழின் உச்சியைத் தொட்ட லால்குடி ஜெயராமனுக்குக் கடந்த வருடம் அவரது 80 ஆவது வயதிலே சென்னை மியூசிக் அக்கடமி 'வாழ்நாள் சாதனையாளர்' விருதை வழங்கித் தனக்குக் கௌரவம் தேடிக் கொண்டது பாராட்டுக்குரிய விடயமே ஆகும்.

- பத்மா சோமகாந்தன்

To
**STRENGTHEN**
**HAIR ROOTS**
Within

Bionutra
Formula

Use the
**ORIGINAL**
Hair Nourisher






Biotinexe
Hair•Skin•Nail Nourisher

www.arkem.in

Sri Lanka
**Arkem Pharmaceuticals**
12/1/1, Prince of Wales Avenue,
Colombo-14,
Tel: 0094 11 2470290


நைன் வெல்ஸ்
கருக்கட்டல்
வளநிலையம்
கர்ப்பகாலத்திலும் பிரசவத்திற்கு பின்னரும் தாயின் ஆரோக்கியத்தை பேணுவதிலும் கருக்கட்டலுக்கான சாத்தியக் கூறுகளையும் (Sub Fertility) அக்கருக்கட்டலுக்கான(IVF) சாத்தியக் கூறுகளையும் வழங்குவதன் மூலமும் தொடர்ச்சியாக இனப்பெருக்க காலத்தின் பின்னரும் எமது தொழில்நுட்பத்திறன்களி-னூடாக எல்லா வயதுடைய பெண்மணி-களையும் பராமரிக்க நைன் வெல்ஸ் ஆகிய நாங்கள் பொறுப்பாகவுள்ளோம்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
4 520 999
நைன் வெல்ஸ் கெயார் தாய் சேய் வைத்தியசாலை
55/1, கிரிமண்டல மாவத்தை, நாரஹேன்பிட்டிய, கொழும்பு 05.
WWW.NineWellsCare.com




**Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd, at No. 185, Grandpass Road, Colombo-14, Sri Lanka.**